
கல்கி
KALKI 28-7-91 ரூ. 2-50
வளரும் பாலியஸ்டர் லோகம்



தெளிவற்ற பிரிண்ட் + சிறிய திரை + தொடர்ந்து படங்கள் = களைப்புற்ற கண்கள். அவற்றை தேய்த்து விட்டுக் கொள்வதினால் பயன் ஒன்றும் இல்லை. களைப்புற்ற கண்களுக்குத் தேவை பாதுகாப்பான, மென்மையான, அக்கறை மிக்க ஆப்ட்ரெக்ஸ் ஐ-பாத். இதை ஐ-கப்பில் ஊற்றி கண்களை சுழற்றிக் கழுவுங்கள். ஆப்ட்ரெக்ஸ் கண்களின் களைப்புணர்ச்சியை அகற்றி இதமளிக்கிறது. மேலும், அவற்றை மெல்லமைதிப்படுத்துகிறது. நிலைப் பொழுதில் கண்களுக்கு புத்துணர்ச்சியை அளிக்கும் ஆப்ட்ரெக்ஸ் ஐ-பாத் உலகெங்கும் பயன்படுத்தப்படுகிறது.



நிலைப் பொழுதில் புத்துணர்ச்சி பெற்ற கண்கள்

ஆ ப் ட் ர க் ஸ் ஐ லோ ஷ ன்

அமைச்சர் அழகு. திருநாவுக்கரசு:

“முதல் பணி மாநகராட்சி தேர்தல்களே!”

1980 ம் வருடம். பாராளுமன்றத் தேர்தலில் அ. இ. அ. தி. மு. க. படு தோல்வி அடைந்திருந்த நேரம். போதாத தற்கு ஆட்சி வேறு கலைக்கப்பட்டது. எம்.ஜி.ஆர். உட்பட அ. தி. மு. க. தொண்டர்கள் அனைவரும் மிகவும் சோர்ந்து போயிருந்தனர். மக்களைச் சந்தித்து ''நான் செய்த தவறு என்ன?'' என்று எம்.ஜி.ஆர். கேட்க முடிவெடுத்தார். எந்த



இடத்தில் முதல் கூட்டத்தைப் போடலாம் என்று யோசித்துக் கொண்டிருந்த சமயத்தில், அழகு திருநாவுக்கரசு தலைவரைச் சந்திக்கப் போயிருந்தார். அவரைப் பார்த்ததும் எம். ஜி. ஆர். திடீரென உற்சாகம் அடைந்து, ''தம்பி, மன்னார்குடியில் கூட்டம் ஏற்பாடு செய்! நான் வந்து பேசறேன்'' என்று பாசக் கட்டளை இட்டார். அழகு திருநாவுக்கரசுவுக்குக் கையும் ஓடவில்லை; காலும் ஓடவில்லை. எனினும் தலைவர் சொல்லி விட்டாரே என்பதால் பிரமாதப்படுத்தி விட வேண்டும் என்று பல சங்கடங்களைச் சமாளித்து முனைப்பாகக் கூட்டத்திற்கான ஏற்பாடுகளைச் செய்தார். அன்று எம். ஜி. ஆர். பேச்சைக் கேட்க லட்சக்கணக்கான மக்கள் மன்னார்குடியில் குழுமினார்கள். அதன் பிறகு தமிழ் நாடு முழுவதும் சென்று பேசி, சட்டமன்றத் தேர்தலில் எம். ஜி. ஆர். வெற்றி வாகை சூடியது தனிக் கதை.

தலைமை கட்டளையிட்டால் அந்தக் காரியத்தைத் தலையே போனாலும், செய்து

முடிக்கும் வழக்கத்தைக் கொண்டவர், இப்போது உள்ளாட்சித் துறை அமைச்சராக இருக்கும் அழகு திருநாவுக்கரசு. ஏன், சமீபத்தில் கிழக்குத் தஞ்சை, தேர்தல் நிதியாகப் பத்து லட்சம் தர வேண்டும் என்று ஜெயலலிதா சொன்ன போது பணக்காரர்களிடம் செல்லாமல் மக்களிடம் சென்றே காரியத்தை முடித்தவர் இவர்.

அமைச்சருக்குச் சொந்த ஊர் மன்னார்குடி பக்கம் எடமேலையூர். பள்ளியில் படிக்கும்போதே கழக அரசியலின் பால் ஈர்க்கப்பட்டவர். இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் இறங்கியவர். காரைக்குடியில் இளங்கலை படிப்பை முடித்தவர். ''1969ல் தி. மு. க. வுக்குக் கலைஞர் தலைவராக வந்த போது, அவரது எதேச்சாதிகாரப் போக்குப் பிடிக்காமல் ஒதுங்கியிருந்தேன். தி. மு. க. மாணவர் அமைப்புக்குத் தேர்தல் மூலம் தான் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று நான், செஞ்சி ராமச்சந்திரன், சேடப்பட்டி முத்தையா போன்றவர்கள் குரல் கொடுத்த போது, கலைஞர் தமது ஆள் ஒருவரை மாணவர் அணி அமைப்பாளராகக் கொண்டு வர வேண்டும் என்பதற்காக எங்களை ஒடுக்கினார். பின்னர் 1972-ல் எம். ஜி. ஆர். தனிக் கழகத்தை ஆரம்பித்த போது அவருடன் என்னை இணைத்துக் கொண்டேன்'' என்கிறார் அமைச்சர்.

அழகு, அ. இ. அ. தி. மு. க. வில் மாணவர் அணி அமைப்பாளராகப் பல ஆண்டுகள் பொறுப்பு வகித்து எம். ஜி. ஆரின் பாராட்டுதல்களைப் பெற்றவர். கட்சியின் போராட்டங்களில் கலந்து கொண்டு பலமுறை உள்ளே போனவர். உணர்ச்சிக்கு ஆட்பட்டு ஒருமுறை அ. இ. அ. தி. மு. க. விலிருந்தும் விலகியிருக்கிறார். இரண்டு முறை தேர்தலில் தோற்றும் போயிருக்கிறார்.

''எம். ஜி. ஆரை விட்டுப் பிரிந்து எஸ். டி. எஸ். 'நமது கழகம்' என்ற கட்சியைத் துவங்கிய போது அதில் சேர்ந்தேன். பின்னர் தவறை உணர்ந்து அ. இ. அ. தி. மு. க. வில் மீண்டும் என்னை இணைத்துக் கொண்டேன். எனக்குப் பிறகு எஸ். டி. எஸ்.ஸும் கழகத்தில் இணைந்து கொண்டார்'' என்று கூறும் அழகு, முதல்வர் ஜெயலலிதாவின் பரந்த அறிவைப் பற்றிப் புகழ்ந்து தள்ளுகிறார்.

''பதவியேற்றவுடன் அரசு செயலாளர்கள் மத்தியில் தொடர்ந்து நாள்கைந்து நாட்கள் முதல்வர் பேசினார். அப்போது அவர்களுக்கே தெரியாத பல விஷயங்களைத் தெளிவுபடுத்தினார்! அதிகாரிகளுக்கு மிகவும் ஆச்சரியமாகப் போய் விட்டது.''

ஏது எப்படி இருந்தாலும் செப்டம்பர் (இந்த வருடம்தான்!) மாதத்துக்குள் மாநகராட்சித் தேர்தல்களை நடத்தியே தீர வேண்டும் என்று முதல்வர் உத்தரவிட்டுள்ளாராம். ''எனது முதல் பணி தேர்தல்களை நடத்தி முடிப்பதுதான்'' என்று சொல்லும் அமைச்சர், உள்ளாட்சி அமைப்புக்களில் ஆதி திராவிடர் மற்றும் பெண்கள் நியமன விஷயமாகத் தி. மு. க. வினர் செய்து வரும் தவறான பிரசாரத்தைப் பற்றிக் குறிப்பிட்டார் :

''இந்த விஷயத்தில் கோர்ட்டுக்குப் போவதால் அடிக்கடி தேர்தல் ஏற்பாடுகள் நிறுத்தி வைக்கப்படுகின்றன. ஆகையால், தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களே குறிப்பிட்ட சதவித அளவு பெண்கள், ஆதி திராவிடர்கள் மீறத்தில் இல்லாவிட்டால், தங்களுக்குள் தேர்தல் நடத்தி ஆட்களைத் தேர்ந்தெடுத்து இடங்களை நிரப்பலாம். இதனால் உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை உயருவதற்கும் வாய்ப்பு இருக்கிறது. அதற்கு அரசு வழிவகை செய்யும். தி. மு. க. வினர் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள்.''

அரசியலே வாழ்க்கையாகிப் போனதால், அமைச்சருக்குக் காலதாமதமாகத் தான் கல்யாணம். மனைவி பெயர் சாந்தி. இரண்டரை வயதில் ராஜா என்றொரு மகன்.

''பதவியேற்க வந்ததிலிருந்து இன்னும் ஊர்ப் பக்கம் போகவேயில்லை'' என்று சொல்லி, மகனைப் பற்றிய நினைவுகளில் மூழ்கினார் அமைச்சர். கையில், பச்சை குத்திக் கொண்ட அ. தி. மு. க. கொடி பளிச்சௌத் தெரிந்தது.

சந்திப்பு : **தில்லப்பா**

படம் : **ராஜன்.**

''தற்போதைய கவர்னர் பேர் என்ன சொல்லு?''

''கவர்னர் பதவியே தேவை இல்லை என்ற கருத்துள்ளவன் நான் ஆகவே...''



"எந்தப் பாத்திரத்தில் சமைத்துச் சாப்பிடுவது நல்லது? அலுமினியம் கெடுதல் என்கிறார்களே? ஆனால் அதுதானே மலிவு விலையில் கிடைக்கிறது?" என்று வாசகர் சா. கிருஷ்ணசாமி கேள்வி எழுப்ப, அவர் யோசனையை ஏற்றுக் கொஞ்சம் ஆய்வு நடத்தினோம்.

தங்கமும் வெள்ளியும் தீங்கு பயக்காதவைதாம். ஆனால் அவற்றை வாங்கப் பணத்துக்கு எங்கே போவது? அடுத்த சாதுவான உலோகம் இரும்பு. துருப்பிடிக்காத வரை இரும்பு உடம்புக்கு எந்தக் கெடுதலும் செய்வதில்லை. இரத்தத்தின் சிவப்பு



சமையலைக் கெடுக்கும் நச்சுப் பாத்திரங்கள்!

அணுக்கள் எனப்படும் ஹீமோக்குளோபின் இரும்புச் சத்துக்கள்தாம். எனவே இரும்புப் பாத்திரங்களில் சமைப்பது குறிப்பாக இரும்புச் சட்டியில் எண்ணெய் ஊற்றிப் பொரிப்பது போன்றவற்றில் எந்தக் கெடுதலும் இல்லை. (அந்த எண்ணெய் கலப்படமில்லாததா, தரமானதா என்பது வேறு விஷயம்!)

தாமிரப் பாத்திரங்கள் சமையலுக்கு உகந்தவை அல்ல. அமிலத் தொடர்பு ஏற்படாதவரை தாமிரம் விஷமற்றதுதான். ஆனால் சில ரசாயன மாற்றங்களால் கடுமையான விஷமாக மாறக் கூடியது. காப்பர் சல்பேட் என்னும் மயில்துத்தம் உயிர்க் கொல்லிகளுள் ஒன்று.

தாமிரமும் ஸிங்க் என்னும் துத்தநாகமும் இணைந்தது பித்தளை. தாமிரமும் வெள்ளீயமும் கலந்தது வெண்கலம். இவ்விரண்டில் வெண்கலத்தில் கலந்துள்ள தாமிரம்தான் அமிலக் கலப்பால் இன்னும் சீக்கிரம் பாதிக்கப்பட்டு நச்சுத் தன்மை உண்டாக்கும்.

கிராமங்களில் முன்பெல்லாம் வெண்கலத் தட்டுக்களில் உணவு அருந்தும் பழக்கம் உண்டு. 'ஏதோ உட்கார்ந்தோம் சாப்பிட்டோம்' என்று விரைவாக உணவு கொள்பவர்களுக்குப் பாதிப்பு இல்லை. ஆனால் சிறு குழந்தைகள் தட்டத்தில் நீண்ட நேரம் அளைந்து கொண்டிருந்து சாப்பிடும் போது விஷத்தன்மை ஏறி வாந்தி மயக்கம் போன்றவை ஏற்படும்.

பித்தளைப் பாத்திரங்களின் உட்புறம் வெள்ளீயக் கலவை பூசி விட்டால், பித்தளை - தாமிரம் உணவில் கலப்பது தடுக்கப்பட்டுப் பாதுகாப்புப் பெறுகிறது. ஆனால் வெள்ளீயம் பூசிய பாத்திரத்தைக் காலியாக அடுப்பில் வைத்தால் ஆபத்து - வெள்ளீயம் உருகி விடும்! மோர் வைப்பதற்கு ஈயச் செம்புகளை முன்பு பயன்படுத்தினார்கள். இதிலும் நீண்ட நேரம் வைப்பதால் நச்சுத் தன்மை உண்டாகி விடும். மனித உடலுக்கு அதிகம் தீமை விளைவிப்பவை தாமிரமும் ஈயமும்தான்.

இந்த நூற்றாண்டில் அலுமினியம் வீட்டுப் புழக்கத்துக்கு அதிகம் பயன்பட்டது. Poor man's Silver என்பதாகக் கூட ஒரு கௌரவம் பெற்ற உலோகம் இது. எடை குறைவான உலோகம் என்பதால் விமானக் கட்டுமானத்துக்கும் மாத்திரைகள் பொதிந்து வரும் ஃபாயில் காகிதங்கள் தயாரிப்பிலும் தாமிரத்தை விட விலை குறைவென்பதால் மின்கடத்தும் கம்பிகள் தயாரிக்கவும் பயன்படுகிறது.

ஆயினும் சமையலுக்கு என்று வரும் போது யோசிக்க வேண்டியதுதான். சீக்கிரமே, தண்ணீரிலும் காற்றிலும் உள்ள ஆக்ஸிஜனுடன் வினைபுரிந்து புள்ளி புள்ளியாய்த் தோன்றி, உப்புப் படிந்து தரமிழந்து விடும்.

இந்த நிலை ஏற்பட்ட பிறகு அலுமினியப் பாத்திரங்களை உணவுப் பொருட்கள் தயாரிக்கவும் வைத்திருக்கவும் பயன்படுத்துவது ஆரோக்கியக் குறைவு.

காலியான அலுமினியப் பாத்திரத்தை,



''என்னங்க! உங்களைப் பார்த்து அறிவிருக்கான்னு கேட்டுட்டுப் போறான். கம்முன்னு இருக்கீங்க?''

''அட நீங்க வேற! அவர் 'எது' இருந்தாலும் கடன் கேட்கிறார்; அதான்!''

- செங்குன்றம் பாலசுப்ரமணியன்.

சற்றுச் சூடேறட்டும் என்று அடுப்பில் போடும் பழக்கம் சிலரிடம் உண்டு. அப்போது சற்றுக் கவனிக்கத் தவறி விட்டால் பாத்திரம் நன்றாகச் சூடேறி அதிலிருந்து தொண்டையைக் கமற வைக்கும் மோசமான நெடியுடன் ஓர் ஆவி கிளம்பும். இதை வைத்தே அலுமினியம் எவ்வளவு தீங்கானது என்று புரிந்து கொள்ளலாம். ஓர் அலுமினியப் பாத்திரத்தில் பாதியளவு நீர் வைத்து இரண்டு மூன்று நாட்கள் வைத்திருந்தால் போதும். நீர் மட்ட விளிம்பில், உப்பாய்ப் பொரிந்து ஒட்டிக் கொண்டிருக்கும்.

ஆபத்தில்லாத எவர்ஸில்வர் (ஸ்டெய்ன்லெஸ் ஸ்டீல்) இன்று புழக்கத்துக்கு வந்து விட்ட போதிலும் எல்லாவற்றையும் விட அற்புதமானவை, ஆபத்தில்லாதவை மண்பாண்டங்களும் கற்சட்டிகளும்தான். 'இங்கு மண்பாண்டச் சமையல்' என்று விளம்பரப்படுத்துகிற உணவு விடுதிகளே தென்மாவட்டங்களில் உண்டு. அதன் சுவையே அலாதியானது. இடம் பெயர நேர்கிற போது உடைத்துப் போட்டு விட்டுப் போய் விட முடிவதால் தேவையற்ற சுமையும் இல்லை.

மண் பானைகளில் 'கருஞ்சூளைச் சட்டி' என்று ஒரு வகை உண்டு. உலோகப் பாத்திரங்கள் போல் உறுதியும் மெருகும் உடையவை இவை.

'ஸோப்ஸ்டோன்' என்னும் மாக்கல்லில் கற்சட்டிகள் சமையலுக்குப் படு சுகமானவை. அமிலச் சுரப்புடைய மாவடு ஊறுகாய்கள் போன்றவற்றையும் உப்புக் கலவைகளையும் ஆண்டுக் கணக்கில் கூட வைக்கலாம். எவ் வகையிலும் தீங்கற்றவை இந்தக் கற்சட்டிகள். ஆனால் இவற்றின் பளுதான் சங்கடம்!

- சுப்ர. பாலன்

மத்தாப்பூவாய் உதிர்ந்த உயிர்கள்

சிவகாசி பட்டாசு தொழிலகத்தில் நடந்த விபத்தில், குழந்தைகள் பலர் இறந்ததாக முதலில் வந்த செய்திகள் கூறிய போதிலும், பின்னால் வந்த தகவல்கள் அதை மறுத்துப் பெண்கள் மட்டுமே அதிகம் மடிந்ததாகக் கூறுகின்றன. குழந்தைகள் இறக்கவில்லை என்பது ஓர் அதிர்ஷ்டமேயன்றி வேறில்லை. ஏனெனில் சிவகாசியில் தீப் பெட்டித் தொழிற்சாலைகளிலும் பட்டாசுத் தொழிலகங்களிலும் குழந்தைகளைக் கூலிக்கு அமர்த்துவது சகஜமான செயல். அரசு விழித்துக் கொண்டு தக்க நடவடிக்கை எடுத்தாலொழிய இனியும் தொடரப் போகிற காரியம்.

சிவகாசியில் மட்டுமின்றி வேறு பல ஊர்களிலும் பள்ளிக்குப் போக வேண்டிய பிள்ளைகள், சட்டத்தையும் மீறி வேலைக்கு அனுப்பப்படுகிறார்கள் என்றால், அதுவும் ஆபத்தான இடம் என்று தெரிந்தும் பெற்றோரால் அனுப்பப்படுகின்றனர் என்றால் பணத்தாசையால் அல்ல; பணத் தேவையால் தான்! மக்களின் வாழ்க்கைத் தரம் ஓரளவாவது உயர்ந்தாலன்றி இந்த அவல நிலை தொடரும். இந்த நோக்கில்தான் கிராமப்புறப் பொருளாதார மேம்பாட்டுக்கு முக்கியத்துவம் தர வேண்டும் என்ற காந்திஜியின் கருத்து முக்கியத்துவம் பெறுகிறது. சத்துணவு மட்டுமே குழந்தைகளைப் பள்ளிக்கு ஈர்த்து விடுவதில்லை. சத்துணவுக்கு மட்டுமே ஈர்க்கிறது. பிறகு குடும்பத்துக்கு உதவப் போய் விடுகிறார்கள் என்பது புரிகிறது.

இந்த விபத்தில் குழந்தைகள் மடியாவிட்டாலும் இறந்த 37 பேரில் பெரும்பான்மையினர் பெண்களே. மிக ஆபத்தான பணிகளில் பெண்களை ஈடுபடுத்துவது என்பது, குழந்தைகளை ஈடுபடுத்தும் கொடுமைக்கு ரொம்பக் குறைந்தது அல்ல. தாயற்ற குழந்தைகளின் கதியை எண்ணிப் பார்த்தால் இதை ஒப்புக் கொள்வது எளிது. இந்தியாவில் தீ விபத்தில் இறந்து போவோரைக் கணக்கிட்டால், ஒவ்வொரு ஆணின் மரணத்துக்கும் மூன்று பெண்கள் என்ற விகிதத்தில் மடிகிறார்கள், புள்ளி விவரப்படி. இந்த மும்மடங்கு சாவுக்கு வரதட்சணைக் கொடுமையும் ஒரு காரணமாக இருக்கலாம். என்றாலும், தொழிற்சாலை விபத்துக்களும் அதிகம்தான். சிவகாசி விபத்தில் பெண்கள் அடையாளம் காண முடியாதபடி கருகிச் செத்திருக்கிறார்கள்.

'இந்த விபத்து நடந்தே இருக்க வேண்டியதில்லை' என்று சொன்னால், 'அதெப்படி? எதிர்பாராமல் நடப்பது தானே விபத்து?' என்று திருப்பிக் கேட்கலாம். ஆனால், சிவகாசியில் இப்படி விபத்து நடப்பது இது முதல் முறையல்ல; மூன்றாம் முறையும் அல்ல; ஒருவேளை முப்பதாவது தடவையாக இருக்கலாம் என்பதால், தொழிலதிபர்களிடம் பாடம் கற்கும் மனப்பான்மை இல்லை; பாதுகாப்பு பற்றிய சிந்தனையும் இல்லை; செயல்பாடும் இல்லை; மனித உயிர்களை அவர்கள் மதிக்கவில்லை என்பது தெளிவு. அவர்கள்தான் அப்படி எனில், அவர்களுடைய செயல்பாடு சரியாக உள்ளதா, விதிமுறைகள் சரியாக அநுசரிக்கப்படுகின்றனவா என்று கண்காணிக்க வேண்டிய அதிகாரிகளின் நிலை என்ன? கோர விபத்துக்கும் மரணங்களுக்கும் லஞ்ச ஊழல் அரசியல் எவ்வளவு தூரம் காரணமாக இருந்திருக்கிறது? சிந்தித்தால் போதாது, ஆராயப்பட வேண்டும்; நடவடிக்கையும் எடுக்கப்பட வேண்டும். ஒழுங்கீனம் ஏதும் இல்லாவிட்டால் கூட, கவனக் குறைவுக்காகத் தொழிலதிபர் மட்டுமின்றி, அவரைக் கண்காணிக்கும் கடமையில் தவறிய அரசு அதிகாரிகளும் தண்டிக்கப்பட வேண்டும்.

தாய்மார்கள் நலன் கருதி பல திட்டங்கள் வகுக்கும் முதல்வர், இந்த விஷயத்தில் தீவிர கவனம் செலுத்தட்டும். இதில் தவறினால், ஒருவேளை மீண்டும் ஒரு விபத்து நிகழுமானால், (நிகழ வேண்டாம் என்பதே பிரார்த்தனை) கவனக் குறைவுக்காகப் பொறுப்பேற்க வேண்டியவர்களுள் முதல்வர் முதன்மையானவராக இருப்பார்!

இது பெயர்


என்ன! உங்க பெயரை மாத்தணும்னு மனுவா?
என் பேரு முருகன், பொஞ்சாதி பேரு தனினி... பேஜாரா கீது தாயீ... நீதான் டெய்லி புச்சா பேரு வைக்கறியே நம்முதையும் மாத்திடு!
கே. கே. நகர்ங்கற பேரை மட்டும் மாத்த முதல்வருக்குத் தைரியமில்லை பார்த்தீங்களா?
மாத்தாட்டியும் அது பொருத்தமாத்தான் இருக்குன்னு விட்டிருப்பாங்க... கோட்டையைக் கோட்டை விட்டவர் நகர்!
சசிகலா–நடராஜ மன்றம்
புது ஆட்சியோட நாமும் ஒத்துப் போகணுமில்ல... அதான் சகலகலா நடன சபா பெயரை இப்படி மாத்திட்டேன்!
அது என்ன PTMKA யூனிவர்சிடி...? புதுசா இருக்கு?
புதுசில்லே, பழசுதான். பேர் மட்டும்தான் புதுசு: புரட்சித் தலைவரின் மனம் கவர்ந்த அண்ணா பல்கலைக்கழகம்!

மாற்றும் சீசன்


அடுத்த வாரம் வாசகர்களுக்கு என்ன போட்டி அறிவிக்கிறது...?
முதல்வர் அறிவிக்கப் போகிற அடுத்த பெயர் மாற்றம் என்னவாயிருக்கும்னு கணிக்கச் சொல்லிப் போட்டி வைக்கலாமே!
மதுரைப்பூ! மதுரைப்பூ!
என்னம்மா புதுப் பேரு?
'மல்லிகைப்பூ'ன்னு கூவி வித்தா யாரையோ கேலி பண்ணுற மாதிரி இருக்குன்னு இப்படி மாத்திட்டாங்க...
ம்ம துறைமுகத் தொகுதிக்குப் பேரை மாத்தணும்னா என்ன பெயர் வைக்கலாம்?
நம்ம எம். எல். ஏ. செய்த காரியத்துக்கு நட்டாத்துத் தொகுதின்னுதான் பேர் வைக்கணும்!
லேட்டஸ்ட் பெயர் மாற்றம் என்ன...?
தினமும் வாங்க முடியலைன்னு மக்கள் குறைப்படுறாங்க... அதனால தக்காளிக்குத் 'தங்கம்'னு பெயரை மாத்திடலாம்னு விவசாயத் துறை அமைச்சர் சொல்லியிருக்கார்!



டெலிபோனில் கேட்ட சினிமா பாட்டு!

தொலைபேசியில் நண்பருடன் பேசிக் கொண்டிருந்த சுகாராஜ் (மதுரை), பேச்சுக் குரலுடன் வானொலி ஒலிபரப்புப் பாடலும் இணைந்து கேட்டது என்று ஆச்சரியம் வெளியிடுகிறார். நண்பரோ தாம் ரேடியோ போடவில்லை என்று சத்தியம் செய்கிறார். 'டெலிபோனுக்குள் வானொலி எப்படிப் புகுந்தது?' வியந்து கேட்கிறார் சுகாராஜ்.

கேரள வானொலி ஒலிபரப்பிய நிகழ்ச்சியினூடே, அம் மாநிலத்தில் பொதுக் கூட்டம் ஒன்றில் பேசிக் கொண்டிருந்த வி. பி. சிங்கின் பேச்சும் இணைந்து அசரீரி போல் கேட்டதாகச் செய்தி வந்ததே, இது எப்படிச் சாத்தியம்? - கேட்பவர் சிறுமுகை கதிரேசன்.

விளக்கம் தருகிறார் - பௌதிகப் பேராசிரியர் டாக்டர். ஏ. வில்லியம், (லயோலா கல்லூரி) :

ஒலி கடத்தலில் மூன்று நிலைகள் : ஒலியை கிரகித்துக் கொள்வது முதல் நிலை. இதற்கு ஒரு க்ரிஸ்டல் தேவைப்படும்; க்ரிஸ்டலை - டயோட் (Diode) என்றும் சொல்லலாம். அது கிரகிக்கும் ஒலியைச் சுமந்து செல்ல ஒரு கண்டக்டர்; அந்த ஒலியைப் பெருக்கி வெளியிட ஒரு ஆம்ப்ளிஃபயர்.

தொலைபேசி இணைப்பகத்தில் ஏதேனும் ஒரு எலக்ட்ரானிக் உபகரணம், டயோடாகச் செயல்பட்டிருக்கக்கூடும். (இந்த உபகரணம் மிகச் சிறிய டிரான்ஸிஸ்டராகக் கூட இருக்கலாம்) அது வானொலி ஒலிபரப்பாகிய பாடலை ஈர்த்துக் கொண்டிருக்கக்கூடும்.



◆ வில்லியம்ஸ்

இந்த ஒலி, தொலைபேசி கேபிள் மூலமாகப் பயணம் செய்து டெலிபோன் ரிசீவர் ஆம்ப்ளிஃபயராகச் செயல்பட, சுகாராஜ் காதில், எதிர்முனைப் பேச்சோடு, சேர்ந்து ஒலித்திருக்கும். இது போன்ற சம்பவம் அபூர்வமாகத்தான் நடைபெறும்.


வானொலியில் கேட்ட வி. பி. சிங் உரை இடைச் செருகலும் இதே போன்ற முறையில் ஏற்பட்டிருக்கலாம். ஸாடிலைட் மூலமாகச் சக்திவாய்ந்த ஒலி அல்லது ஒளிபரப்பு, ஏற்பாடு செய்யப்படுவதை நாம் அறிவோம். அத்தகைய ஒரு சாடிலைட் வி.பி. சிங்கின் உரையை ஈர்த்துக் கொண்டிருக்கலாம். பிற ஒலி அலைகளுடன் அந்த உரை அலையும் பூமிக்கு அடித்து வரப்பட்டு, கேரள வானொலி மூலமாக ஏசகு பிசகாக ஒலிபரப்பப்பட்டிருக்கும். இவ்வாறான ஒலி ஈர்ப்பும், ஒலிபரப்பும் எப்போதாவது, ஏடாகூடமாக நிகழ்வது உண்டு.

ஓர் ஒலிபரப்பைத் திட்டமிட்டுச் சிதைக்கவும் முடியும். போர்க் காலத்தில், தவறான சங்கேத ஒலியை அனுப்பி எதிரி நாட்டின் விமானங்களைத் திசை மாறச் செய்வார்கள்.

நமது எல்லையில் பாகிஸ்தான், சீன வானொலி ஒலிபரப்புகள், இந்திய வானொலி ஒலிபரப்பு அலைகளைச் சிதைத்து விடும் வல்லமை படைத்தவை. இந்திய அரசின் கொள்கை விளக்கங்களை வானொலி மூலமாக எல்லைப்புற மக்களுக்குத் தெரிவிக்க முற்படும் போது அவ்வாறு செய்யவிடாமல் பாகிஸ்தான் அல்லது சீன ரேடியோவின் ஒலியலைகள் இடையூறு செய்து, இந்தியச் செய்தி மக்களுக்கு எட்டவிடாமல் பண்ணும்.

இன்னொரு அதிர்ச்சித் தகவலும் சொல்கிறார்கள் - இலங்கையில் பி.பி.ஸி. வானொலி நிலையம் அமைக்கப் போகிறார்கள். இதனால் இந்திய வானொலி - குறிப்பாகச் சென்னை வானொலி - பெரிதும் பாதிக்கப்படும். பி.பி.ஸி. உலகளாவிய ஒலிபரப்பு வன்மை வாயந்தது. அதற்கு ஈடுகொடுக்க வேண்டுமானால் அதே அளவு வலிமை மிக்கதாக நம் வானொலியை மேம்படுத்த வேண்டும். இல்லாவிட்டால் முன்பு இலங்கை வானொலியே இங்கு சக்கை போடு போட்டது போல இனி பி.பி.ஸி.யைக் கேட்க வேண்டியதுதான்!

பேட்டி : பிரபுசங்கர்



● பாலியஸ்டர் - உடுத்த அழகு. பராமரிப்பது எளிது.

வளரும் பாலியஸ்டர் மோகம்

அமெரிக்காவில் சமீபத்தில் ஆயிரம் ஆண்களையும், ஆயிரம் பெண்களையும் பேட்டி கண்டார்கள். 'ஒரு பெண்ணைச் சந்தித்தால் முதலில் உங்களைக் கவர்வது எது?' என்று ஆண்களிடமும், 'ஒரு ஆணைச் சந்தித்தால் முதலில் உங்களைக் கவர்வது எது?' என்று பெண்களிடமும் கேள்வி கேட்கப்பட்டது. மிகப் பொரும்பாலானவர்கள் அளித்த விடை : உடை.

அமெரிக்காவைப் போலவே இந்தியாவிலும் மடிப்புக் கலையாமல், விதவிதமாக உடுத்துவது என்பது எல்லாத் தரப்பு மக்களிடையேயும் வாழ்க்கை முறையாகி வருகிறது. இந்த வாழ்க்கை முறையில் இன்று முக்கியப் பங்கு பாலியஸ்டருக்கு இருக்கிறது. எல்லோரும் விரும்பி அணியும்

இந்தத் துணி ரகத்துக்கு ஒரு சரித்திரம் உண்டு.

சுமார் 7000 ஆண்டுகளாக நெசவுத் தொழில் நடந்து வருகிறது என்று சொல்கிறார்கள். பருத்தி, ஆட்டு உரோமம், பட்டு, நார் (இழை) தன்மையுடைய மரங்கள், இவற்றிலிருந்து தான் நெசவுக்கு நூல் தயாரிக்க முடியும் என்ற கருத்துக்கு, சம்மட்டி அடி கொடுத்தவர் டாக்டர் வேலஸ் கரோத்தர் என்னும் விஞ்ஞானி. செயற்கையான நைலான் இழை உருவாக்க முடியும் என்பதை உலகுக்கு உணர்த்தியவர் இவர்தான். இந்தக் கண்டுபிடிப்பு பல அபிவிருத்திகளை அடைந்ததில் தோன்றியதுதான் பாலியெஸ்டர். இதற்கு மூலப் பொருள், பெட்ரோல், டீசல் முதலியவற்றுக்கு மூலப் பொருளாக உள்ள கச்சா எண்ணெய்.

பாலியஸ்டர் இழை தயாரிக்கும் முறையை விளக்கினார் டெக்ஸ்டைல் டெக்னாலஜி துறையைச் சேர்ந்த டாக்டர் சங்கரன் :

''கச்சா எண்ணெயைச் சுத்திகரிக்கும் போது பெட்ரோல், பாரபின் மெழுகு, மண்ணெண்ணெய், தார், நாஃப்தா என்று பல உப பொருட்கள் கிடைக்கின்றன. இன்னமும் பிளந்து கொண்டு போய், பின்னர், சில ரசாயன சேர்க்கைகள் மூலம், செயற்கை இழைகளைத் தயாரிக்க உதவும் மூலப் பொருள்களை அடையாளம் காணலாம். பிளாஸ்டிக், நைலான் போன்றவைகளுக்கான மூலப் பொருட்களும் இப்படித்தான் கிடைக்கின்றன. பாலியஸ்டர் செயற்கை இழை தயாரிக்க உதவும், மூலப் பொருட்களான டி. எம். டி. மற்றும், பி. டி. ஏ. ஆகியவை கச்சா எண்ணெயைச் சுத்திகரிக்கும் போது வெளிப்படும் கடைசிக் கட்டப் பொருள்கள். ஆனால் இவற்றைப் பெற நமக்குத் தேவை, மிகச் சமீபத்திய தொழில்நுட்பம். இதைத்தான் ஆரோமாடிக்ஸ் என்று சொல்கிறார்கள்.''

''ஓஹோ. நமது முன்னாள் முதல்வர் கூட மணலியில் ஆரோமாடிக்ஸ் தொழிற்சாலை வர இருக்கிறது என்று சொல்லிக் கொண்டிருந்தாரே!''

''கரெக்ட். நமது மணலி எண்ணெய் ஆலையில், கச்சா எண்ணெயிலிருந்து, செயற்கை இழைகளைத் தயாரிப்பதற்கான மூலப் பொருட்களைப் பிரித்து எடுக்க தற்போது வசதி இல்லை. ஆரோமாடிக்ஸ் தொழிற்சாலை மணலி ஆலைக்குப் பக்கத்தில் வந்து விட்டால் இந்த வசதி கிடைத்து விடும்...'' என்றார் டாக்டர் சங்கரன்.



✱ பட்டிலேயே பல விதங்கள். இதில் பாலியஸ்டர், பட்டை அடையாளம் காணத் தெரிய வேண்டும்.



✱ செயற்கை இழை தொழிற்சாலை.

போகிற போக்கைப் பார்த்தால் பாலியஸ்டர், பருத்திக்கு டாட்டா காட்டி விடும் என்பது பேராசிரியர் சங்கரனின் கருத்து. புள்ளி விவரங்களும் அதையே உணர்த்துகின்றன. 1985 - ஆம் ஆண்டு, தனிநபர் ஒருவர் பயன்படுத்திய பருத்தித் துணிகளின் அளவு 10.79 மீட்டர். ஆனால் இன்று அது எட்டு மீட்டராகக் குறைந்து விட்டது. இந்த நூற்றாண்டின் முடிவில் மூன்று மீட்டராகக் குறைந்து விடும் என்று நிபுணர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். பருத்தி காலி செய்யும் இடத்தைப் பிடித்துக் கொண்டு வருவது பாலியஸ்டர் துணி வகைகள்தாம்.

அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளில், 1950-ம் வருடங்களிலேயே பாலியஸ்டர் துணி வகைகள் வந்து விட்டன. ''ஆனால் நமது நாடு இந்த விஷயத்தில் கொஞ்சம் லேட்'': என்றார் சங்கரன். ''முதலில் நாம், பாலியஸ்டர் நூல்களை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்து வந்தோம். இதற்குக் காரணம் இந்த நூல் தயாரிப்பதற்குத் தேவையான மூலப் பொருள்களை நாம் உற்பத்தி செய்யாதது தான். ஆனால் கடந்த ஐந்து வருடங்களாக

நிலைமை மாறியிருக்கிறது.''

நமது நாட்டில், பாலியஸ்டர் செயற்கை இழைகளைத் தயாரிக்க உதவும் மூலப் பொருட்களை உற்பத்தி செய்ய, ஏகப்பட்ட பிரச்னைகளிடையே உரிமை பெற்றது ரிலையன்ஸ் நிறுவனம். ஆனாலும் இவர்கள் உற்பத்தி செய்பவை, இறக்குமதி பாலியஸ்டர் விலையை விட அதிகம். இதற்குக் காரணம் எக்கச்சக்கமான தீர்வைகள்தான். பி. டி. ஏ. எனப்படும் பொருள், இறக்குமதி செய்தால் அதன் விலை ஒரு டன்னுக்கு 28000 ரூபாய்தான். ஆனால் உள்நாட்டுத் தயாரிப்பை வாங்கினால் ஒரு டன் விலை 35000 ரூபாய்! ''இப்படி இருந்தால் நாம் இந்தியனாக இருப்போமே தவிர, இந்தியப் பொருளை வாங்குவோமா'' என்று கேட்டார் சங்கரன்.

மூலப் பொருட்களுக்கு வரி, அதிலிருந்து தயாரிக்கப்படும் இழைக்கு வரி, பின்னர் உருவாக்கப்படும் நூலுக்குத் தீர்வை, வரி, நூலிலிருந்து நெய்யப்படும் துணிக்கு வரி, தீர்வை!

''இதனாலெல்லாம் விலை ஏறினாலும், இன்று நடுத்தர மக்களைக் கவர்ந்திழுப்பது பாலியஸ்டர் கலவைத் துணிகள்தான்'' என்கிறார் மொத்த வியாபாரியான குமாரசாமி. முழுக்க முழுக்க பாலியஸ்டர் துணிகளை விட, நமது மக்கள், பாலியஸ்டர் - பருத்தி, கலவையையே மிகவும் விரும்புகிறார்கள் என்கிறார் அவர். அது உண்மைதான் என்று சொல்கிறது புள்ளி விவரம். 1985-ல் ஒரு தனி மனிதன், சுமார் இரண்டு மீட்டர் அளவுள்ள 'பாலியஸ்டர் - பருத்தி' துணியைப் பயன்படுத்தினான் எனில் இப்போது அது மூன்று மீட்டராக உயர்ந்து விட்டது. இந்த நூற்றாண்டின் முடிவில் இந்த அளவு எட்டு மீட்டராக உயர்ந்து விடுமாம்!

'பாலியஸ்டர் - பருத்தி' கலவையைத் தவிர, 'பாலியஸ்டர் - பட்டு', 'பாலியஸ்டர் - கதர்' கலவைகளும் மார்க்கெட்டுக்கு வந்து விட்டன.

''என்னதான் பளபளப்பு, கவர்ச்சி, பாலியஸ்டர் துணி வகைகளுக்கு இருந்தாலும், பருத்திக்கு ஈடு இணை கிடையாது'' என்று சொல்கிறார் குமாரசாமி. செய்வது பாலியஸ்டர் துணி வியாபாரம் ஆனாலும், குமாரசாமி அணிவது பருத்தித் துணிகள்தான்!

''இந்தியா போன்ற சீதோஷ்ண நிலை உள்ள நாடுகளில், பெரும்பாலும் மக்களுக்கு ஏற்றவை பருத்தித் துணிகள்தான். இதில் இழைகளினூடே காற்றோட்டம் அதிகம். மேலும் வியர்வையை உறிஞ்சும் தன்மை கொண்டது பருத்தி'' என்றார் டாக்டர் ஸ்ரீநிவாசன். ''பாலியஸ்டர் கலந்த துணிகளில், உறிஞ்சும் தன்மை மிகவும் குறைவு. இதனால், வெய்யில் காலங்களில், பாலியஸ்டர் வகைகளை அணியும் போது வேர்க்குரு, தோலில் எரிச்சல் போன்றவை சிலருக்கு ஏற்படுவது உண்டு.''

''பாலியஸ்டர் துணி வகைகள் உடம்போடு உராயும் போது லேசான மின் அதிர்வு கூட உண்டாகும் என்று சொல்லப்படுகிறதே'' என்று சங்கரனிடம் கேட்ட போது அவர் சொன்னார்:

''அது உண்மைதான். மேலும் பாலியஸ்டர் துணி வகைகள் அழுக்கைச் சீக்கிரம் பிடித்துக் கொள்ளும் என்றும், உடுத்துவதற்கு மிகவும் அசௌகரியமாக இருக்கும் என்றும், எளிதில் தீப்பற்றிக் கொள்ளும் என்றும் பல எதிர்வாதங்கள் எடுத்து வைக்கப்பட்டன. ஆனால் இவை அனைத்தையும் தாண்டி பாலியஸ்டர் இன்று உலகெங்கிலும் வெற்றிக் கொடி நாட்டிக் கொண்டிருக்கிறது. காரணம், பாலியஸ்டர் இழை உற்பத்தி நிலையிலேயே, ஆபத்தையும், குறைகளையும் நீக்கும்விதமாகப் பல ரசாயன முன்னேற்றங்கள் செய்யப்பட்டன. ஆதலால், பாலியஸ்டருக்கு எதிரான வாதங்கள் பலமிழந்து போயின.''


மத்திய அரசில் வேலை பார்க்கும் நடுத்தர வயதினரான திருமதி கீதா, வருடத்துக்குப் பத்து சேலைகள் வாங்குகிறார்.

''நீங்க குடி இருக்கிற வீட்டுக்கு மூணாவது வீட்டிலேதான் நான் குடித்தனம் இருக்கேன்!''

''இப்ப அதுக்கென்ன?''

''சும்மாதான்...! கைமாற்றோ கடனோ வாங்கறதுக்கு ஒரு அறிமுகம் வேணுமில்லையா!''

- சீந்தாதம்பி.



இவற்றுள் ஐந்து சேலைகளாவது பாலியஸ்டராக இருப்பதையே விரும்புகிறார். காரணம்? ''இருநூறு, முந்நூறு ரூபாய்க்கு நல்ல புடைவையாகக் கிடைக்கிறது. ஆபீஸுக்குப் பளிச்சென்று கட்டிக் கொண்டு போக முடிகிறது. மிகவும் இலேசாக இருக்கிறது. மழை நாட்களில் கூட தோய்த்து உலர்த்துவது சுலபம். இஸ்திரி பண்ணவும் தேவையில்லை. இந்தச் சௌகரியங்களையெல்லாம் விட, சுலபமான மாதத் தவணைகளில் புடைவைகள் வாங்க முடியும்'' என்று கூறிச் சிரிக்கிறார் கீதா.

''தரமான பாலியஸ்டர் சாயம் போவதில்லை, சுருங்குவதில்லை, புது மெருகு குன்றாமல் ரொம்ப நாட்களுக்கு இருக்கிறது. இந்தக் காலத்தில் ஏராளமான தையல் கூலி கொடுத்து உடைகளைத் தைக்க வேண்டி இருப்பதால் நீடித்து உழைக்கும் பாலியஸ்டரைப் பயன்படுத்துவதே லாபகரமானது'' என்கிறார் திருமதி நளினி வினாயக் (அட்டை).

சுத்தமான பட்டுப் புடைவை வாங்க முடியாதவர்கள் பாலியஸ்டர் - பட்டு கலவைப் புடைவைகளை நாடுகிறார்கள். சேலம் சுற்று வட்டாரங்களில் இந்த வகைச் சேலைகள் அதிகம் உற்பத்தி ஆகின்றன. காஞ்சிபுரத்துத் தறிக்காரர்கள் கலவைச் சேலைகள் போடுவதில்லை. ''சுத்தமான பட்டுக்குப் பேர் போன காஞ்சிபுரத்தில் கலவைச் சேலை போடுவாங்களா ஸார்?'' என்று கேட்கிறார் குமாரசாமி.

எக்ஸ்போர்ட் துணி வகைகள் நிறுவனத்தில் மாதச் சம்பளம் ரூ.300 பெறும் குமாரி மீனாட்சி, ''அரைசாண் ஜரிகை வைத்த ஒரு பட்டுப் புடைவையை வாங்கிக் கட்டிக் கொள்ள எனக்கும் ஆசைதான். ஆனால் பணத்துக்கு எங்கே போவது? எங்களைப் போன்ற குடும்பங்களில் கல்யாணம் அல்லது இதர விசேஷங்களுக்குக் கைகொடுப்பது, ''பாலியஸ்டர் - பட்டு''ப் புடைவைகள்தான். இவை தத்ரூபமாய்ப் பட்டுப் புடைவையின் நிறங்களிலும் டிசைன்களிலும் கிடைக்கின்றன. பாலியஸ்டரைக் கண்டுபிடித்தவருக்கு ஆயிரம் வணக்கங்கள்!'' என்கிறார்.

விவரம் தெரியாதவர்கள் பாலியஸ்டர் பட்டைத் தூய பட்டு என்று எண்ணி ஏமாறும் சாத்தியக் கூறுகளும் உள்ளன. கவனம் தேவை.

பிரபல மில்கள் எல்லாமே நவீன பாலியஸ்டர் இழையைக் கொண்டு பாரம்பரிய டிசைன்களில் துணிகளைத் தயாரிக்கும் முயற்சியில் இப்போது இறங்கியுள்ளன.

அன்புள்ள வாசகர்களே...


இரண்டு வருடங்களுக்குப் பிறகு கல்கியின் விலையை உயர்த்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. இந்த இரண்டு வருட காலத்தில் நமது நாட்டில் தயாரிக்கப்படும் நியூஸ் பிரிண்ட் விலை 25 சதவிகிதம் வரை உயர்ந்துள்ளது. ரூபாயின் மதிப்பு சமீபத்தில் இரண்டு முறை குறைக்கப்பட்டதால் இறக்குமதி செய்யப்படும் நியூஸ் பிரிண்ட் விலை இப்போது 30 சதவிகிதம் வரை உயர்ந்து விட்டது. இது மட்டுமல்ல. அட்டைப் படம் அச்சடிக்கத் தேவையான மாப் லித்தோ பேப்பர் விலையும் அபரிமிதமாக உயர்ந்து விட்டது. இங்க், ஃபிலிம் போன்ற இதர மூலப் பொருள்களின் விலைகளும், ரயில் பார்சல் கட்டணம், தபால் செலவு போன்ற செலவினங்களும் இன்று கணிசமாக உயர்ந்துள்ளன. எனவே தவிர்க்க முடியாத நிலையில் ஆகஸ்ட் 4-ந் தேதி இதழிலிருந்து கல்கியின் விலையை ரூ.3/- ஆக உயர்த்தியுள்ளோம். மங்கையர் மலர் விலையும் ஆகஸ்ட் இதழ் முதல் ரூ. 6/- ஆக உயர்த்தப் பட்டுள்ளது. வாசக அன்பர்கள் இந்த விலை உயர்வை ஏற்றுக் கொண்டு தொடர்ந்து நமது பத்திரிகைகளுக்கு ஆதரவு அளித்து வருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

மானேஜர்,
கல்கி.

அப்படியிருந்தும் பாலியஸ்டர் சேலைகளை மார்வாடி பெண்கள் விரும்பி உடுத்துவதில்லையாம். காரணம், மெல்லிய பருத்தி சேலை உடுத்தி, தலைப்பை முக்காடு இட்டுப் பழகிய இவர்களுக்கு, பாலியஸ்டர் சேலை முக்காடுகள் வழியே பார்ப்பது சிரமமாக இருக்கின்றது!

– ப்ரியன்

(அட்டையில் - ப்ரீதி, நளினி வினாயக்)
வண்ணப்படம் : யோகா
நன்றி: காலி கிளாத் ஷோ ரூம், சென்னை - 17.
பாலியஸ்டர் நெசவாலை வண்ணப் படம் உதவி : லக்ஷ்மி மில்ஸ்.


பிரதமர்–ஜெயலலிதா சந்திப்பு!
பொன்னாடை போர்த்தினார்...
பொன்னாடை போர்த்திப்புட்டு காவேரித் தண்ணீர், மதுவிலக்கு நஷ்ட ஈடு, எல்லைப்புற மாகாணமின்னு அதிக நிதி ஒதுக்கீடு, அது இதுன்னு கேட்டுகிட்டே இருந்தா எப்படி? அங்கேயும் சாஷ்டாங்கமா காலிலே விழுந்தாத்தான் நடக்கும்!
ரெயில்வே கட்டணங்கள் உயர்வு
ஐயய்யா... நீ அதிர்ஷ்டக்காரன்... பிளாட்பாரம் டிக்கெட்டு பழைய விலையேதான், பைசா கூட உயரலே!
உங்களுக்குப் பொருத்தமா இல்லே... அட, இவருக்கு அழகா பொருந்தும் போலிருக்கே... உஹும், இவரை விட இவருக்குத்தான் நல்லா இருக்கு!



கல்கி

1991 ஜூலை 28
மலர் : 49 இதழ் : 52
பிரஜோத்பத்தி ஆடி 12



போகுது பார், ரயில் வண்டி! ஏறுது பார் விலைவாசி!

விலைவாசிகளை ஏதோ ஓர் ஆண்டின் (எந்த ஆண்டு என்பது முக்கியமல்ல) நிலைக்குக் குறையச் செய்வோம் என்று காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அறிக்கை கொட்டி முழக்கியது! மக்கள் அதை நம்பினார்கள் என்று கூற இயலாது. ராஜீவ் அனுதாப அலை இருந்தும் கூட, காங்கிரஸ் மைனாரிட்டி அரசுதான் அமைக்க முடிந்தது என்பது இந்தக் கருத்தை வலியுறுத்தும். என்றாலும், பதவிக்கு வந்தவர்களுக்குக் குறைந்தபட்சம் விலைவாசிகள் மேலும் உயராமலாவது பார்த்துக் கொள்ளும் பொறுப்பு இருக்க வேண்டாமா? அந்த நம்பிக்கையையும் இழந்து நிற்கிறோம் நாம்.

இருபத்தோரு சதம் ரூபாய் மதிப்புக் குறைப்புக் காரணமாக இறக்குமதிப் பண்டங்களின் விலை எக்கச் சக்கமாக உயர, அந்த மூலப் பொருள்களைக் கொண்டு இங்கே தயாராகும் பண்டங்களின் விலைகளும் உயர்கின்றன. இப்போது, அடுத்த கட்ட விலை உயர்வு நடவடிக்கையாக, ரயில்வே பட்ஜெட் வந்திருக்கிறது.

'ரயில்வே பட்ஜெட்டினால் விலைவாசி உயர்வு துக்குளியூண்டுதான் இருக்கும்' என்று ரயில்வே போர்டு கூறுவது சிரிப்புக்கு இடமளிக்கிறது. அமைச்சர்களோ அதிகாரிகளோ விஷயம் தெரியாதவர்கள் அல்ல. 'விலை உயரும்' எனக் கூறப் பயந்தும், 'விலைவாசி உயராது' எனக் கூறத் தயங்கியும் இரண்டுங்கெட்டானாகப் புளுகித் தப்பிக்கப் பார்க்கிறார்கள்.

பட்ஜெட்டில் அதிகரிக்கப்பட்டுள்ளது பயணக் கட்டணங்கள் மட்டுமல்ல; சரக்குக் கட்டணங்களும்தாம். ஏதோ சில சரக்குகளுக்கு விலக்கு அளிக்கப்பட்டிருப்பதால், அத்யாவசியப் பண்டங்களின் விலைவாசி, ஆணி அடித்தாற்போல் அப்படியே நின்று விடாது. எல்லா விலைவாசிகளுமே ஏறும். இதனை அனுதாப விலை உயர்வு என்பர். பொருளாதார நியதிகளை அரைவேக்காடு யுக்திகளால் மாற்றி விட முடியாது.

''சரக்குக் கட்டண உயர்வு எதிர்பார்த்த அளவு அதிகமில்லை!'' என்று சந்தோஷப்படுகிறது தமிழ்நாடு மின்வாரியம். மின்வாரியத்தின் நஷ்டங்களையெல்லாம், 'தலையெழுத்தே' என்று தாங்கிக் கொண்டிருக்கும் வரி செலுத்தும் குடிமகன், இதைக் கேட்டு வயிறு எரிகிறான்!

அந்த எரியும் நெருப்பில் பெட்ரோல் ஊற்றுவது போல், அவனுக்குப் பயணக் கட்டணங்களும் உயர்த்தப்பட்டுள்ளன. முதல் பத்து கி.மீ.க்குக் கட்டண உயர்வு இல்லையாம்! அடேயப்பா, எவ்வளவு பெரிய சலுகை! இனி எல்லாரும் பத்துப் பத்து கி.மீ.யாகப் பயணம் செய்து, போக வேண்டிய ஊருக்கு ஒரு மாதம் இரண்டு மாதம் கழித்துப் போய்ச் சேரலாம்! புறநகர் ரயில்களில் பயணக் கட்டணங்களும் சீசன் டிக்கெட்டுகளும் விலை உயர்ந்த பிறகு, இந்தப் பத்து கி.மீ. சலுகை அபத்தமானதாக விளங்குகிறது. இதைக் கேட்டு நாடாளுமன்றம் சிரித்த சிரிப்பே நாடெங்கும் ஒலிக்கிறது.

'ஏஸி வகுப்புக்கும் முதல் வகுப்புக்கும்தான் கட்டணம் மிக அதிகமாக உயர்த்தப்பட்டுள்ளது; இரண்டாம் வகுப்புக்கு அதிகபட்சம் ரூ 20தான் என்று வழக்கமான மாய்மாலம் காட்டுகிறார் ரயில்வே அமைச்சர். ஏஸி, முதல் வகுப்புக்களில் பயணம் செய்வோர் யார்? அமைச்சர்கள், அரசு உயர் அதிகாரிகள் அல்லது பெரிய பெரிய தொழிலதிபர்களே. இவர்கள் கை விட்டா செலவழிப்பார்கள்? செலவுக் கணக்கு எழுதும் போது அதற்கேற்ப வரி உயர்வு, அல்லது விலைவாசி உயர்வால் பாதிக்கப்படப் போவது சராசரி இந்தியக் குடிமகனே. மேலும் இரண்டாம் வகுப்புக் கட்டண உயர்வால் அரசுக்குக் கிடைக்கப் போகும் தொகைதான் மிக அதிகமாக இருக்கும் என்பதும் கவனிக்கத்தக்கது.

ரயில்வே பட்ஜெட்டைத் தொடர்ந்து, மத்திய பட்ஜெட்டும் இதே போல் கடுமையாக அமைந்து விட்டால் போதும், மாதச் சம்பளக்காரன் மூச்சுத் திணறப் போகிறான்; அன்றாடம் காய்ச்சிகள் அனலிலிட்ட மெழுகாய் அவதிப்படப் போகிறார்கள்.

விலைவாசிகள் உயர, சம்பள உயர்வுப் போராட்டமும், ஸ்டிரைக் - லாக் அவுட் இத்யாதிகளும் தொடரும். உற்பத்தி பாதிக்கப்படும். இப்படியே விஷ வட்டத்தில் வளைய வந்து கொண்டிருந்தால் நாடு உயர்வது எப்போது?

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.

கல்கி

அடுத்த இதழ்

பொன்விழா ஆண்டு மலர்

128 பக்கங்கள்

புலி ராஜா

அமரர் **கல்கி**





ஜெயலலிதா

பள்ளிச் சிறுமி முதல்
முதல்வர் பதவி வரை!


முதல்தர எழுத்தாளர்களின் சிறப்புச் சிறுகதைகள் :

அசோகமித்திரன் * பாலகுமாரன் * பிரபஞ்சன் * அகஸ்தியன் * ம. வே. சிவகுமார்.

டைரக்டர் ஸ்ரீதர்

திரைக்கதை உருவாவது எப்படி?





ஹைதராபாத்-400

நாலு நூற்றாண்டுகள் கண்ட இரட்டை
நகர் பற்றிய அதிசயத் தகவல்கள்

ரூ.2000

முதல் பரிசு பெறும்
பொன் விழா போட்டிக் கதை

50

பாலு ஜுவல்லர்ஸ் **கல்கி**

பொன் விழா ஆண்டினையொட்டி
வாசகர்களுக்குப் பொன் நகைப் பரிசுத் திட்டம்!

மாதம் ஒரு சவரன்!

இன்னும் எத்தனையோ சிறப்பம்சங்கள்!



கல்கி

4-8-91

பொன்விழா ஆண்டு மலர்

புதுமைத் தொடர்கதை

கம்ப்யூட்டர் கிராமம்

சுஜாதா எழுதுகிறார்

பொண்டாட்டி

'நகைச்சுவை - நகைச்சுவை தவிர வேறொன்றறியேன் பராபரமே' என்று முடிவாகத் தீர்மானித்து விடும்போது, வையம் அடி எல்லையென்றால் வானமே மேல் வரம்பாகி விடுகிறது. அப்புறம் என்ன? இடைப்பட்ட எல்லாமே அதனுள் அடக்கம். அதுவும் தாம்பத்யம் கதையின் தண்டு வடமாகிவிட, கணவன் மனைவி உறவும் பிரிவும் அதன் காரணமாக ஏற்படும் விளைவும் முக்கியத்துவம் பெற்று, மற்ற ரசங்களை விட அங்கங்கே பரவலாகப் பூசுப் பெற்றுப் பளபளக்கிறது விரசம்.

அடிப்படையில் அப்பாவியென்றாலும் தனக்கென்று சில விருப்பு வெறுப்புக்களை வைத்துக் கொண்டு அவ்வப்போது பிடிவாதம் பிடிக்கும் பேரன் எஸ். வி. சேகர் ஒரு புறம். அந்தப் பேரனை வழிக்குக் கொண்டு வர ஒவ்வொரு முறையும் வீட்டுத் திண்ணையின் மீது நின்று கொண்டு ஊர் மக்களைப் பொதுக் கூட்டமாகக் கூட்டி, அந்தப் பேரனைப் பிறந்ததிலிருந்து இன்று வரை தான் வளர்த்த பிரலாபத்தை விலாவாரியாக எடுத்துச் சொல்லி நியாயம் கேட்கும் பாட்டி மனோரமா இன்னொரு புறம். இவர்கள் இருவரும் ஒரு பக்கம் தான் கிளப்புகிறார்கள் என்றால் -

இன்னொரு பக்கம் ஜனகராஜு"ம் செந்திலும் அட்டகாசிக்கிறார்கள். அதுவும், பிறர் மனத்தை நோக வைக்கக் கூடாது என்பதில் குறியாக இருக்கும் செந்தில் அவ்வாறு செய்து விட்டதாகத் தானே கற்பனை செய்து கொண்டு ஊர்முழுதும் சொல்லிப் புலம்பும் குணம் கொண்டவராக, ஜனகராஜின் மனைவி சம்பந்தப்பட்ட நிகழ்ச்சியொன்றை ஒவ்வொருவரிடமும் சொல்லிச் சொல்லி அழ, அவர்கள் வரிசையாக, இடைவெளியின்றி ஜனகராஜிடம் துக்கம் விசாரிப்பதைப் போலக் கேட்கத் தொடங்க, சட்டையைக் கிழித்துக் கொள்ளாத குறையாக ஜனகராஜ் தவித்துப் போக, அரங்கில் சிரிப்பலைகளின் ஆரவாரம்.

தொட்டுக் கொள்ள ஊறுகாயாக வெ. ஆ. மூர்த்தி, கோவை சரளா, டிஸ்கோ சாந்தி.

பாடல்கள், இசை - கங்கை அமரனாம்!

சிரிப்பு என்று வந்து விட்ட பிறகு லாஜிக் எல்லாம் பார்க்கலாமோ? மூச்!

- கி. ஆர். கே.

பொண்டாட்டிதான்



புகையாய் நகரும் பொழுது

மேலாண்மை பொன்னுச்சாமி

அவளுக்கு விழிப்புத் தட்டிய போது, இருட்டு மிச்சமிருந்தது. இன்னும் விடியலியா?

சற்றுத் தள்ளி மாரியப்பன் சுகமாகத் தூங்கிக் கொண்டிருந்தான். இடுப்பு வேட்டியை உருவி மூடிச் சுருண்டு ஒருக்களித்துப் படுத்திருந்தான். நடுவில் ராஜி விரலைச் சூப்பிக்கொண்டு படுத்திருந்தாள்.

தொட்டில் ஆடுகிறது. முத்துப் பயல் உதைத்த உதையில் அசைகிறது. நல்ல வேளை... அவன் அழவில்லை. பூவனத்துக்குக் கண்கள் சொருகிக் கொண்டு வருகிறது. உடம்பு முழுக்க அயற்சி 'இன்னும், இன்னும்' என்று தூக்கத்துக்குக் கெஞ்சுகிற உடம்பு. பேயாகப் போட்டு அமுக்குகிற களைப்பும், சோர்வும்...

''ஹாய்.... ஆய்க்''

பால் சொஸைட்டிக்குப் பால் பீச்ச எருமைகளைப் பற்றிக் கொண்டு போகிற சப்தம். எருமை சாணம் போடுகிற 'சத, சத,சத' சப்தம். 'ஊர் விழித்து விட்டதா, நான்தான் பிந்தி விட்டேனா?'

வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தாள். நெட்டி முறித்துக் கொள்ளக் கூட நிதானமில்லை. விருட்டென்று வெளியே வந்து தலையை எட்டிப் பார்த்தாள்.

இருட்டு விலகாத காலை நேரம். கிராமம் சுறுசுறுப்பான உயிர்ப்போடு நடைபோடத் துவங்கி விட்டது. ஆனி மாசக் காலையில் கூதல் இல்லாத குளிர்ந்த காற்று முகத்தில் மோதியது.

''அட இழவே, அசந்து ஒறங்கிட்டமே,... பொழுது பொறப்படப் போகுதே...''

ஒரு சிறிய பதைப்பு. அவளுக்குள் முகம் காட்டுகிற பரபரப்பு. சுவிட்சைத் தொட்டவுடன் தடதடக்கும் மோட்டார் என்ஜினைப் போல, சுழலத் தொடங்கி விட்டாள்.

அடுப்புச் சாம்பலை அள்ளிக் கூடையில் தட்டினாள். கையோடு சேர்த்து முகத்தையும் கழுவிக் கொண்டாள். காப்பிச் சட்டியை அடுப்பில் வைத்து, தண்ணீரை ஊற்றினாள். வெல்லத் துண்டு, தேயிலைத் தூளைப் போட்டாள். அடுப்பை மூட்டினாள். புகை மண்டியது. கண்களைக் கரித்தது. கூடுதலாய்க் கொஞ்சம் விறகைத் திணித்து விட்டு, கிளாஸுடன் பால் சொஸைட்டிக்கு ஓடினாள். அவசரப்படுத்தி, ஆளுக்கு முந்தி, பாலை வாங்கிக் கொண்டு ஓட்டமும் நடையுமாகத் திரும்பி வந்தாள். 'அடுப்புத் தீ அமர்ந்திருக்குமோ...'

நல்லவேளை... சிறு தீயாக எரிந்து கொண்டிருந்தது. மாரியப்பன் விழிப்பதற்குள் காப்பி தயாராக இருக்க வேண்டும். விறகைத் தள்ளி விட்டாள்.

சட்டிப் பானைகளை, வட்டில், கிளாஸ்களை விரல்களுக்கிடையில் இடுக்கிக் கொண்டு வெளிப் பானைக்கு வந்தாள். சாம்பலைப் போட்டு, பரபரவென்று தேய்த்து மினுக்கினாள். இடையிடையே எழுந்து போய் அடுப்பைப் பார்த்துக் கொண்டாள்.

கொதித்த காப்பிச் சட்டியை இறக்கி விட்டு, குழம்புச் சட்டியை வைத்தாள். ரெண்டு வெங்காயத்தை அறுத்துப் போட்டு, மிளகாயைக் கிள்ளிப் போட்டு, சீரகத்தை உள்ளங்கையிலேயே நசுக்கிப் போட்டு... எண்ணெய் ஊற்ற பாட்டிலைப் பார்த்தாள். ஒட்டிக் கொண்டு கொஞ்சமாய்க் கிடந்தது. எல்லாமே துரித கதி.

வேலை ரெக்கை கட்டிக் கொண்டு பறந்தது. பூவனமும் சக்கரம் கட்டிக் கொண்டவளைப் போல... அங்கும் இங்குமாய்ப் பரபரத்தாள். ஓரிடத்தில் நிற்க முடியாமல், மின்னலைப் போல 'விருட்' 'விருட்' டென்று ஓடிப் பாய்ந்தாள். வீட்டின் ஒவ்வொரு மூலையிலும் அவள் கையை எதிர்பார்த்துக் கிடக்கிற வேலைகள். மோவாயில் முத்து முத்தாகப் பூத்து நிற்கிற வியர்வைத் துளிகளைக் கூட துடைக்கப் பொழுதில்லை.

மாரியப்பன் காப்பியைக் குடித்து விட்டு 'வெளியே' போனவன்தான். தெருவிலும் டீக்கடையிலும் உட்கார்ந்து என்னதான் பேசித் தீர்ப்பார்களோ - எட்டு மணிக்கு மேல்தான் திரும்பி வந்தான்.

வரும் போதே காலில் கொதிநீரை ஊற்றிக் கொண்டு வந்தான்.

''வேலைக்குப் போவனும். நேரமாச்சு. வெருசா கஞ்சி ஊத்து!''

''வாங்க, கலெக்டரய்யா, இம்புட்டு நேரமா எங்க போயிருந்தீக?''

''என்ன விஷயம்? எதுக்குக் கேக்கே?''

''ஊரைச் சுத்திட்டு... இப்ப வந்து, 'பறந்தா' எப்படி?''

''பொம்பளை மாதிரி மூலையிலேயே முடங்கிக் கிடக்கச் சொல்றியா? ஆம்பளைன்னா... நாலு இடம் போகத்தான் செய்வான். நாலு மனுச மக்களைப் பாத்துப் பேசத்தான் செய்வான். ஒனக்கென்ன வந்துச்சு? நீ சோலியைப் பாரு.''

வீடு பெருக்கிக் கொண்டிருந்த பூவனம், புருஷனை நிமிர்ந்து பார்த்தாள்.

''ம்... ஆம்பளைகதான் மனுசர். பொம்பளைங்கன்னா... மிஷின். ஊம், அப்படித் தானே?''

''இந்தா! இதெல்லாம் நமக்குத் தெரியாது. வேலைக்கு நேரமாச்சு. கஞ்சியை ஊத்து. கடிச்சிக்கிடை இருக்கு இல்லே?''

''இருக்கு, இருக்கு. உக்காருங்க.''

மாரியப்பன் மண்வெட்டியைத் தூக்கிக் கொண்டு புறப்பட்டான். நாலு வயசு ராஜி தெருப் புழுதியில் விளையாடிக் கொண்டிருந்தாள். அவளை நாலு அதட்டு அதட்டிக் கூட்டிக் கொண்டு வந்தாள். மேலுக்கு ஊற்றி, சட்டை போட்டு, தலையில் எண்ணெய் வைத்து இழுத்து ரப்பர் மாட்டி விட்டு...

எல்லாமே அவசர கதியில்தான்.

அதற்குள் -

தெற்குத் தெரு ராமாயம்மாள் கடாப் பெட்டி, உப்புத் தாளோடு வந்து விட்டாள். அவள் புஞ்சையில்தான் இன்று வேலை. பருத்தி எடுப்பு.

''என்ன பூவனம், இன்னும் கௌம்பலியா?''

''இந்தா கிளம்பிட்டேன்க்கா.''

''சாப்ட்டுட்டியா?''

''இன்னும் இல்லே. எல்லாம் நொடியிலே முடிஞ்சிரும். நீங்க போங்க. நா பின்னாலேயே ஓடியாரேன்.''

''எட்டு மணிக்கு மேலாச்சு. வெருசா பெறப்படு. கூலி பத்து ரூவா வேணும்ங்கே. இப்படி வீட்லேயே பொழுதைக் கழிச்சா.. எப்படி?''

''இல்லேக்கா.. சோலியை முடிச்சுட்டு பெறப்பட்டுட்டேன்.''

எரிச்சலும் கோபமுமாய் ராமாயம்மாள் முனகி விட்டுச் செல்ல... இவளுக்குள் தீப்பற்றிக் கொண்டது.

ராஜியை அரைக் கிளாஸுக்கு அனுப்பி விட்டு, இவளும் வாயில் ரெண்டை அள்ளிப் போட்டு முடிக்க.... முத்துப்பயல் தொட்டிலில் வீறிட்டான். 'மடியில் கிடத்தி அவன் பசியமர்த்த இப்போது பொழுதில்லையே...' இன்னும் தாமதித்தால் ராமாயம்மாள் தொலைத்து விடுவாள்.

முத்துப்பயலை நினைக்க நினைக்க அவளுக்குள் ஆயாசம். விரக்தியின் விளிம்பில் அவள். அடிவயிற்றில் ஒரு கொதிப்பு.

''ச்சே... அழுகிற புள்ளையை அமர்த்தக் கூட உட்கார முடியாம... பொட்டச்சி ஓடிச் சாக வேண்டியிருக்கு. பொட்டச்சியா பூமியிலே ஜெம்மமெடுத்ததே கொடுமை. அதுலேயும் ஏழையாப் பொறக்குறது அதை விடக் கொடுமை...''

மனசின் வெப்பம் கண்ணோரங்களில் துளிகளாய்ப் பூக்க... முத்துப் பயலை



அள்ளிக் கொண்டாள். தொட்டிலைக் கழற்றிச் சுருட்டிக் கொண்டாள். மதியக் கஞ்சிக்கான தூக்குச் சட்டியோடு புறப்பட்டு விட்டாள். மனத்தில் அதே உளைச்சல்.

ராமாயம்மாள் என்ன சொல்லி வையப் போகிறாளோ... தாமதமாகி விட்டது. நாற வசவு வைது விடுவாள்... எத்தனை திட்டித் தீர்த்தாலும் கேட்டுத்தான் தீரணும். சகித்துத் தான் ஆகணும். மான அவமானம் பார்த்தால் கதை நடக்காது.

கூரை பிய்ந்து வாயைப் பிளந்து கிடக்கிறது. தோல் கிழிந்த எலும்புகளாக கூரை முகடு துருத்திக் கொண்டு வெயிலில் காய்கிறது. இந்த வருஷம் கட்டாயமாக வேய்ஞ்சாகணும். ராமாயம்மாள் புஞ்சை

யில் பயிரிட்டிருக்கிற கோடைக் கம்பந் தட்டையை நம்பித்தான் கூரை முகடு காத்துக் கிடக்கிறது.

அவளுக்குள் பதைப்பு. பரபரப்பு. நடையை எட்டிப் போட்டாள். செம்மறி யாட்டு மந்தையைக் கடந்தாள். 'தக்,தக்' கென்று அவள் நடந்த வேகத்தில் அதிர்ந்து போய், ஆடுகள் சிதறின.

பலசரக்குக் கடையில் பாக்கி ஏறி விட்டது. எழுபத்தேழு ரூபாய்க்கும் மேல். நேற்றே கடைக்காரர் வெறித்துப் பார்த்தார். ஏலச் சீட்டுக்குப் பணம் கட்டணும். பாத்திரச் சீட்டு வேறு கிடக்கிறது.

நினைவுகள் உள்ளே கூடு கட்டிக் கொண்டிருந்தன. தேனீக்களின் இரைச்ச லாய் மொய்க்கிற நினைவுகள். அழுத்தும் பாரமாய்ப் பிரச்னைகள். கழுத்து நரம்பை முறிக்கும் சுமையாய் வாழ்க்கை. மூச்சுத் திணறுகிற சூழல். முட்டிக் கொண்டு வந்து நெஞ்சை அடைத்துக் கொள்கிற உணர் வுகள்....

'நாமதான் இப்படி 'பாடு பாடு'ன்னு ஓடிச் சாகுறோம். மாடி மனைகளிலே சில மகராசிமார்கள் வெயில் முகம் பாராமல் ஆக்கி, அவிச்சிப் பொழுதைப் போக்குறாக. அவுகளுக்கும் கூத்துவன் படியளக்கத்தானே செய்றான்...

என்ன இழவோ... பொழப்பு இப்படிக் கிழிஞ்சு கிடக்கு ஹூம்...'

வேளலாய்க் கொதிக்கிற வெயில். உள்பாவாடையைப் பிடித்து முரட்டுத்தன மாய் இழுக்கிற காய்ந்த பருத்திச் செடிக் குச்சிகள். பூவனம் ஓடி ஓடிப் பருத்தி எடுத்தாள். மடிமடியாய்ப் பருத்தி நிறைய வும், பெரிய உப்புத் தாளில் தட்டினாள். வியர்த்துக் கொட்டுகிறது. இரண்டு கைக் கட்டை விரல்களும் காந்துகின்றன.

பூவனத்தின் பார்வை அடிக்கொருதரம் மஞ்சணத்தி மரத்துக்குப் போய் விட்டு வரு



கிறது. மரத்தில் கட்டியிருக்கிற தொட்டிலில் முத்துப்பயல்.

அரைக் கிளாஸ் சத்துணவுக் கூடத்தில் இருக்கிற ராஜி, பூவனத்தின் மனசுக்குள் வந்தாள்.

எப்படியிருக்காளோ.. எந்தப் பிள்ளையோடு சண்டை போடுகிறாளோ... அழுது கரைவாளோ... ஆறுதல் சொல்ல அம்மாவைத் தேடித் தேம்பி நிற்பாளோ...

பூவனத்துக்குள் ஓர் இனம்புரியாத தவிப்பு. ஒரு பிசைவு. ராஜியைப் போய்ப் பார்த்து விட்டு வரணும் என்று ஒரு துடிப்பு. ஓடப் பரபரக்கிற கால்கள். ராமாயம்மாளின் அதட்டல் சப்தம் கேட்கிறது. தவித்த மனம் அரண்டு போய், உள்ளுக்குள் ஒடுங்குகிறது.

நாலு மணிக்கு வேலை முடிந்து புறப்பட்டனர். ராமாயம்மாளிடம் கேட்டு, புஞ்சைத் தலைமாட்டில் இருந்த மிளகாய் மார்ப் படப்பில் ஒரு கட்டு கட்டிக் கொண்டாள். விறகுக்கு வேண்டுமே! தொட்டில் சுருளும், முத்துப் பயலுமாய்ப் புறப்பட்டாள். சாயங்கால வெயில் கண்களில் குத்துகிறது.

உடம்பெல்லாம் பரவிப் பிசைகிற அலுப்பு. இடுப்பைச் சுற்றிலும் கொத்திப் பிடுங்குகிற வலி. முழங்கால் மூட்டுகளில் ஊசிக் குத்தலாய் ரணம். 'உட்காரணும், நீட்டிப் படுக்கணும்' என்று ஏங்குகிற உள் எலும்புகள். தேகமெங்கும் சோர்வும், களைப்புமாய்...

வீடு வந்து சேர்ந்தாள் பூவனம். ராஜி திண்ணையில் விரலைச் சூப்பிக் கொண்டு உறங்குகிறாள். சத்துணவுச் சாம்பார் அவளது வாயைச் சுற்றி மஞ்சளாய்க் காய்ந்து... மூக்கில் சளி வழிந்து... சுற்றிலும் ஈக்கள் படைமொய்த்து...

> **"சட்டசபையில் ஃபேன் தேவையில்லைன்னு நம்ம எம். எல். ஏ. அறிக்கை விட்டு இருக்காரே, ஏன்?"**
>
> **"சட்டசபையின் கண்ணியம் காற்றில் பறக்காமல் இருக்க அதுதான் ஒரே வழியாம்!"**
>
> **- குடந்தை எல். ராம்பிரபு.**



நாதியற்ற பிள்ளை போலக் கிடக்கிறாளே...

பூவனத்தின் குலை பதறியது. பதைத்தது. விறகைப் போட்டாள். பெற்ற மனம் தவித்துத் துடிக்க ராஜியை அள்ளி... உள்ளே பாயை விரித்துப் படுக்கப் போட்டாள்.

முத்துவையும் பக்கத்தில் படுக்க வைத்தாள். சேர்ந்து இவளும் படுத்துக் கொள்ள உடம்பு ஏங்கித் தவித்தது. உடம்பின் ஒவ்வொரு அணுவும் 'படு,படு' என்று கெஞ்சியது. முந்தியை விரித்தாள். தலை சாய்க்கப் போனவள் தயங்கினாள். உள்ளுக்குள் எறும்பு கடித்த மாதிரி ஓர் உணர்வு.

மாரியப்பன் வந்து விடுவான். உழைத்துக் களைத்துப் போய் - உயிர் கழன்று - வருகிற மனுசர். வந்தவுடன் சோறு போடணும். சோறு இல்லா விட்டால் கதை கந்தலாகி விடும்.

விதியையும் படைத்தவனையும் நொந்து கொண்டே எழுந்தாள். எலும்புகள் மொறு மொறுத்தன. கடைக்கு ஓடினாள். மனசுக்குள், என்ன குழம்பு வைக்கலாம், என்னென்ன சாமான்கள் வாங்கலாம் என்கிற யோசிப்புகள்...

அடுப்பு மூட்டணும். சோறு காய்ச்சணும். தண்ணீர் சுமக்கணும். அவருக்கு வெந்நீர் போட்டு வைக்கணும். தலைக்கும் மேலாகக் குவிந்து கிடக்கிற வேலைகள். சுவிட்ச போட்டு அவளை முடுக்கி விட்டுத் துரத்தியடிக்கிற வேலைகள்... கடமைகள்... அன்றாடச் சுமைகள்... நிரந்தரமான பாரம்.

மாரியப்பன் வந்து சேரும் போது, பொழுது அடைந்து கொண்டிருந்தது. கன்றிச் சிவந்த மேற்கு வான மேகத்திரளின் வெளிச்சம்தான் மிச்சமாக இருந்தது.

பூவனம் சக்கரம் கட்டிக் கொண்டவளைப் போல அங்குமிங்குமாய் வேலையோடு அலைந்து கொண்டிருக்க, ராஜியோடு கொஞ்ச நேரம் விளையாடிக் கொண்டிருந்தான்.

வெந்நீரில் குளித்தான். அவள் எடுத்துத் தந்த மாற்று வேட்டியைக் கட்டிக் கொண்டான். சாப்பிட்டு முடித்ததுதான் தாமதம், ஆள் மறைந்து விட்டான்.

பீடி வாங்குகிற சாக்கில் வெளியேறி விட்டான்.

இனி படுக்கத்தான் ஆள் வரும். தெருக் காட்டில் அப்படி என்ன பேச்சோ... என்ன இழவு வேலையோ...

முத்துப் பயலைக் குளிப்பாட்டி, வேறு சட்டை மாட்டி, பவுடர் பூசி, திருஷ்டிப்

பொட்டு வைத்து... சிறு துரும்பைத் தலை முடியில் போட்டு... திண்ணையில் தவழ விட்டாள்.

அய்யாவோடு சேர்ந்து சாப்பிட்டு விட்ட ராஜி, தம்பியுடன் கொஞ்சிக் கொஞ்சிப் பேசினாள். விளையாடினாள்.

இவளுக்குத்தான் மாளாத வேலையாயிற்றே!

புருஷன் உரித்துப் போட்டுப் போன வேட்டி, துண்டு, பிள்ளைகளின் சட்டைகள், கவுன்கள் எல்லாவற்றையும் துவைத்துக் காயப் போட்டாள். கடைக்குப் போய் விட்டு வந்தாள். இவள் சாப்பிடும் போது - எட்டு மணிக்கும் மேலாகி விட்டது. சாப்பிடவே மனசில்லை.

அவளுக்குக் கோபம் கோபமாய் வந்தது. யார் மேல் கோபப்பட? எதற்காக எவர் மீது கோபப்பட?

ஒன்றும் புரியவில்லை. முகமில்லாத எதிரியாய் வாழ்க்கையே முற்றுகையிட்டு, அவளை உதைத்துப் புரட்டி எள்ளி நகையாடுகிற போது... யார் மீது ஆத்திரப்பட?

பாயை விரித்தாள். தூங்கி விட்ட ராஜியை உள்ளே கொண்டு வந்து படுக்க வைத்தாள். தொட்டிலில் முத்துவைக் கிடத்தி விட்டு, ரெண்டு ஆட்டு ஆட்டி விட்டு...

குளிக்கக் கூட மனசில்லாமல் களைப்போடு படுத்து விட்டாள், பூவனம். உடம்பெல்லாம் அடித்துப் புரட்டிய மாதிரி வலியெடுத்தது. முதுகு முழுக்க வலி. காலை நீட்டினாள். முழங்காலின் வலி சுள்ளென்று உறைத்தது.

கசந்து அழுறுகிற நினைவுகள் மனசை மொய்க்க, அப்படியே கிடந்தாள். உறக்கம் கண்களைச் சொருகிக் கொண்டு வரும் போது தூக்கத்தின் தாய் மடியில் முகம் புதைத்துத் தன்னிலையிழக்கும் தருணத்தில்

மாரியப்பன் வந்தான். கதவைத் தாழ் போட்டான். கிட்டத்தில் வந்து நின்றான். அவளை ஒட்டிக் கொண்டு படுத்தான். இவளுக்குள் குமைச்சல். இவள் எரிச்சலுடன் எதிர்பார்த்ததைப் போலவே... தாபத்துடன் அவன் கை மேலே விழுந்தது.

பூவனத்துக்குப் பூரான் ஊர்வதைப் போன்றதோர் உணர்வு. உறக்கத்தையும் தட்டிப் பறிக்க வந்த பாவியாகத் தோன்றுகிற பூரான்.

கண்கள் எரிந்தன. மனசும்தான்...

பூவைப் போல் புல்லரிக்கச் செய்ய வேண்டிய தாம்பத்ய சுகம் கூட... பாறையைப் போல அழுத்துகிறதே...

''சும்மா இருங்க.. தள்ளிப் படுங்க'' கண்டனக் கனலாய்ச் சீறினாள்.

''முடியாது.'' அவன் குரலில் ஒரு மிருது. கெஞ்சல்.

''எனக்கு ஒறக்கம் வருது.''

''எனக்கு வரலை.''

''நா செத்துத் தொலைஞ்சாத்தான் உங்களுக்கு வரும்.''

''எதுக்குச் சாகணும்?''

''இந்தப் பாடுபட்டு இப்படிச் சீரழி யறதை விட, சாகுறது எம்புட்டோ மேல்.''

''நானுந்தான் பாடுபடுதேன்.''

''நா பொட்டச்சி. காட்லேயும் சாக ணும். வீட்லேயும் வந்து வேகணும். இப்படித் திமிரெடுத்து வர்ற ஆம்ப ளைக்கும் தீனியாகணும்.''

''என்ன... ரொம்பத்தான் நொந்துக் கிடுதே...? நீ மட்டுமா அதிசயம்? எல்லா வீட்லேயும் உள்ளதுதானே நம்ம வீட்லே யும்?''

''எல்லா வீட்லேயும் பொட்டச்சிக ளுக்குக் கண்ணீரும் சாவும்தானே மிச்சம்?''

அவளது இறுகலான சீறல், இவனுக்கு அநியாயமான அனாவசியமாகப்பட்டது.

மௌனமானான். கோபம் நிறைந்த மௌனம். தாம்பத்ய உரிமை மறுக்கப் பட்ட கோபம். அவளது புஜத்தைப் பற்றிய அழுத்தத்தில் அது தெரிகிறது.

இவளுக்குள்ளும் இறுக்கம். உழைப் பின் அயர்ச்சியை உணர மாட்டேன் என்கி றானே என்கிற எரிச்சலை உள்ளடக்கிய இறுக்கம். சபிக்கப்பட்ட பெண் பிறவியாய் ஜென்மமெடுத்து விட்ட கோபத்தால் மொறு மொறுக்கிற இறுக்கம்.

கொஞ்ச நேரத்தில் -

அடியும், உதையும், அழுகையும் புலம் பலுமாய் அங்கே மென்மையான தாம்பத்யம் ரணப்பட..... இரவு கனத்துக் கொண்டிருந்தது, வாழ்க்கையைப் போல.

அவன் உறங்கிப் போனான். பூவனம் ரொம்ப நேரம் பலதையும் நினைத்து விசும்பிக் கொண்டிருந்தாள். விரக்தி வசப்பட்ட மனசில், சாவைப் பற்றிய நினைவு முகம் காட்டிக் கொண்டே யிருந்தது.

தொட்டில் ஆடியது. முத்துப் பயல் திமிறினான். வீறிட்டு அலறினான். பசிக் கான அழுகை.

பெருமூச்சுடன் யந்திரமாய் எழுந்தாள். முத்துவைத் தூக்கி மடியில் கிடத்தி... யந்திர மாய் ஜாக்கட் ஊக்கைக் கழற்றினாள்.

அந்தப் பிஞ்சு உதடுகளின் எச்சில் ஸ்பரிசம் பட்ட கணத்தில், அவள் மேனி யெங்கும் ஜில்லென்று பரவிப் பாய்ந்த பரவசம். தாய்மைப் புல்லரிப்பு.

முத்துப் பயலுக்கும் குஷி. பிஞ்சுக் கையால் இவளது மோவாயைத் தடவி னான். பிஞ்சுக் காலால் ஆனந்தமாய் உதைத் தான். மடியில் கிடந்த மகனைப் பார்த்தாள். அவளுள் பரவச உணர்வைப் பரப்பி, வாழ்க்கையின் ஈர்ப்புச் சக்தியாக மடியில் கிடக்கிற உயிர்ச் சிற்பம்.

கனிந்து மிருதுவாகிப் போன தாய் மைப் பரிவோடு முத்துப் பயலின் மென் மையான தலைமுடியைக் கோதி விட்டாள்.

இப்போது அவள் யந்திரமில்லை. மனுஷி. தாய்மை உணர்வு ததும்புகிற மனுஷி.

பக்கத்தில் உறங்கிய மாரியப்பனைப் பார்த்தாள். அவளுக்குள் மெல்லிய அன்பு ணர்வு சுரந்தது. 'முத்துவைத் தந்தவன்.'

அவனது தலைமுடியையும் கோதி விடு வதற்கு மனம் தவிக்கிறது.



ஆபிசிலிருந்து வந்ததும் வராததுமாக ராம்குமார் உதிர்த்த வார்த்தைகள் :
''சாந்தி...! நாளைக்கு ஊர்லயிருந்து கலா வர்றாளாம்... லட்டர் போட்டிருக்கா ....''
நேராக உள்ளறைக்குப் போனான்.



குழந்தை மெய்மறந்து தூங்கிக் கொண்டிருந்தது - தூளியில். துணி விலக்கிப் பார்த்துக் கொண்டான் ராம்குமார்.

''இப்ப எதுக்கு வர்றாளாம்? கடன்காரி!''

- பின்னாலேயே சாந்தி வந்து நின்றிருந்தாள். கையில் வைத்திருந்த வாராந்தரியைக் கட்டிலில் கடாசினாள். மனசுக்குள் முள் குத்திய வலி அவளுக்கு. கலா வருவதை எண்ணிக் கவலை.

''பிள்ளையைப் பாக்கணும்ன்னு ஆசையாயிருக்காம். கண்முன்னாலே நிக்கிறானாம் இவன். பிள்ளை பொறந்திருந்தப்ப வந்ததுதானே... அதுதான் இப்ப வர்றேன்னு துடிக்கிறாப் போலிருக்கு...''

விகல்பமில்லாமல் சொல்லிவிட்டு லுங்கிக்கு மாறிக் கொண்டிருந்தான் ராம்குமார்.

''பொய்...! பிள்ளையைப் பாக்கணும்ன்னு அவ சொல்றதெல்லாம் பொய்! அண்ணன் வீட்டுக்கு வந்தா ஏதாவது பலிக்காதான்னுதான் நினைப்பு அவளுக்கு. புருஷனும் பொண்டாட்டியும் நல்ல



காளைங்க மாதிரிதான இருக்காங்க? அவுங்களுக்கென்ன புள்ளையா குட்டியா? என்ன கஷ்டம் அவுங்களுக்கு? அடிக்கடி அண்ணன் வீட்டுக்கு வந்து, 'எனக்கு அதக் குடு, இதக் குடுன்னு பறிச்சிட்டுப் போறாளே!' கொஞ்சமும் வெக்கமே இல்லியே. அவ கண்ணுமுன்னாலே ஒரு நல்ல சேலை, துணிமணி உடுக்க முடியுதா? கண்ணுல கண்ட சேலையை எல்லாம் எடுத்துக்கிட்டுப் போயிடுறா. அதுவும் கேக்காம கொள்ளாம. 'இவ கிட்ட என்ன கேள்வி... என் அண்ணன் உழைக்கிற உழைப்புத் தானே' என்கிற திமிரு. வரட்டும் இப்ப. பீரோவைப் பூட்டிச் சாவியையெல்லாம் என் இடுப்புல செருகிக்கிடுறேன். எப்படி அவ இஷ்டம் போல சேலையையெல்லாம் எடுக்கிறா பார்க்கிறேன்....!''

கட்டிலில் உட்கார்ந்து ஒரு பாட்டத்துக்குக் கொட்டித் தீர்த்தாள் சாந்தி. வார்த்தைகள் வெளிவந்த வேகத்தில் உதடுகள் சூடாகிப் பொரிந்தது போலத் துடித்தன. கண்கள் அனலுக்குள் கிடந்து அவிந்தது போல் தவித்தன.

என்று கண்களால் முறையிடுகிற மனைவி. மறுபுறம், 'எனக்கு உன்னவிட்டா வேற அண்ணன் தம்பி யாரண்ணா இருக்காங்க?' என்று முகத்திலே எழுதி வைத்து அசடு வழிகிற தங்கை. அண்ணி ஒரு அன்னைக்குச் சமமானவளாயிற்றே என்ற இங்கிதம் கூட அவளிடம் இல்லையா? எல்லாம் அண்ணனின் வரும்படியில் வந்த வாழ்க்கைதானே என்ற வறட்டுக் கௌரவமா? வரும்போது சாந்தியென்ன வகைதொகையோடவா வந்தாள் என்ற இளக்காரமா?

பத்மநாபனின் கையில் கலாவைப் பிடித்துத் தந்து ஆறு வருஷங்கள் முடியப் போகின்றன. ஆயினும் நிம்மதியில்லாத வாழ்க்கை அவளுக்கு. நிரந்தரமில்லாத உத்தியோகம் பத்மநாபனுக்கு... அது கல்யாணத்துக்குப் பிறகுதான் தெரியவந்தது. ஒரு பொய்யில் ஆயிரங்காலத்துப் பயிரான அவளின் கல்யாணம் 'கானல் நீராய் அரங்கேறியிருந்தது!

எல்லாம் அப்பா அம்மாவின் தடாலடி ஏற்பாட்டில் நடந்தவைதான். அவர்களுக்

அண்ணியின் மனசு

வழக்கமாய்க் கலா வந்து விட்டுப் போன பிறகு ஆரம்பிக்கிற பல்லவியை, இப்போது அவள் வருவதற்கு முன்னமே சாந்தி ஆரம்பித்து விட்டதாக நினைத்துக் கொண்டான் ராம்குமார். அவனுக்கு எரிச்சல் தலை நீட்டியது.

''ஏன் என்கிட்ட ஒப்பாரி வைக்கிற? அவகிட்டேயே சொல்லிட வேண்டியது தானே? அவகிட்டே சொல்ல உனக்குப் பயமா?''

''ஆமா.... எனக்கென்ன பயமாம்! வரட்டும் பாத்துக்கிறேன்.''

இதுவரை மூன்று சேலைகள் வரை பறிபோய் இருப்பதாக அவனிடம் பிரலாபித்திருக்கிறாள் சாந்தி. எல்லாம் அவனின் கைப்பட பெண்டாட்டியின் நிறத்திற்குப் பொருத்தமாய் எடுத்துத் தந்திருந்த சேலைகள். சும்மாச் சும்மா வரும் போதெல்லாம் ஒரு சேலையோடே திரும்பிப் போகிறாள் கலா. அப்போதெல்லாம் ராம்குமாருக்குச் சங்கடமே தலை தூக்கிப் பார்க்கும். ஒருபுறம் 'என்சேலை பறிபோகுதே...'

கென்ன! கல்யாணமான கையோடு வருஷத்திற்கொருவராக மேலோகம் போய்ச் சேர்ந்து விட்டனர். ராம்குமார்தான் இப்போது மெழுகாய்க் கரைந்து கொண்டிருக்கின்றான். 'இன்னும் நிரந்தரம் ஆகவில்லையே அண்ணா' என்று கலா வந்து கண்ணீர் விடும்போதெல்லாம் ராம்குமார் தான் புண்ணாகிப் போகிறான். அதே சமயம் சாந்தியின் முறையீடுகளின் போதெல்லாம் கலாவைக் கடிந்து பேசச் சிரமப்பட்டுப் போகிறான்.

வாம்மா.... இப்பத்தான் வரியா?''

''ஆமாண்ணா....''

''மாப்பிளை வரல்லியா?''

மௌனமாய் நடுக்கூடத்திற்குப் போனாள் கலா. ஈஸிச் சேரில் தினசரியோடு சாய்ந்திருந்த ராம்குமார் பட்டென்று எழுந்து கலா பின்னாலே தொடர்ந்து போனான்.

அபிமானி

ஒற்றையொரு சூட்கேசுடன் மட்டும் வந்திருந்தாள் கலா. அவளைப் பார்க்கப் பார்க்க எதையோ பறிகொடுத்ததுபோல் பதைபதைத்தது அவனுக்குள். முன்னைப் போல உதாரமாயில்லை அவள். வற்ற லாய்... கொடுக்காய்த் தெரிந்தாள். கன்னங்கள் ஒட்டிப்போய் கண்கள் கூர்மை விழந்து தெரிந்தன. அ ல ங் கா ர மு ம், சடையை ஒழுங்காகக்கூடப் பி ன் னி க் கொள்ளாத அசாதாரணமும்....

''என்னம்மா... சு க மி ல் லை ய ா உனக்கு?''

பக்கத்தில் போய் நின்று கேட்டான்.

கட்டிலில் சூட்கேஸை சாவதானமாய்ப் போட்டுவிட்டு, ''அப்படில்லாம் இல்லண்ணா. நா நல்லாத்தான் இருக்கேன்...'' என்று தீனமாய்ப் பதிலிறுத்துக் கொண்டு நின்றாள் கலா.

சற்றைக்கெல்லாம் தீர்க்கமான மௌனம் நிலவிற்று அவனிடம்.

''வாவா... இப்பத்தான் வந்தியா?''

பிள்ளையைக் குளிப்பாட்டிவிட்டு பாத்ரூமிலிருந்து குழந்தையோடு ஓடி வந்தாள் சாந்தி. அவளின் தலை, முகமெல்லாம் சோப்பு நுரை. உதட்டளவில்தான் கலாவை வரவேற்கிறாள் இவள் என்று நினைத்துக் கொண்டான்.

சாந்தியின் கையிலிருந்த குழந்தையை அவசரமாய் வாங்கிக் கொண்டாள் கலா. ஆறுமாதக் குழந்தை. பொக்கைவாய் காட்டி 'பச்'சென்ச் சிரித்தது அது. ஆழமான பெருமூச்சொன்று கலாவிடமிருந்து வெளியேறியதைக் கண்டு சந்தேகப்படத் தோன்றிற்று அவனுக்கு. எதையோ இழந்திருக்கிறாள்? அல்லது எதையோ பிரிந்திருக்கிறாள். எதை?

''மாப்பிள்ளை வரலியா கலா?''

இந்த முறை சுத்தியல் அடி மாதிரி அழுத்தமாய் விழுந்தது அவனின் கேள்வி.

நொறுங்கிப் போயிருக்க வேண்டும் கலா. கலவர முகத்தோடு அண்ணனை ஏறிட்டாள்.

''சொல்லாம கொள்ளாம ஓடிப் போயிட்டாருண்ணா. முந்தா நாள்தான் லெட்டர் வந்திருக்கு. மெட்ராசுல ஏதோ பிளாஸ்டிக் கம்பெனில சேர்ந்திருக்காராம். கொஞ்ச நாள்ல என்னையும் அங்கே கூட்டிக் கொள்ளுறதாய் எழுதியிருக்காரு...''

இனம் புரியாத சூன்யம் நிலவிற்று அங்கே. யாரும் எதுவும் பேச முடியாத இறுக்கம்.

''எவ்வளவு நாளாச்சு?'' - அமைதியை உடைத்துக் கொண்டு சாந்திதான் கேட்டாள்.

''ரெண்டு வாரமாச்சு.''

''ஏன் அதைப் பற்றி எங்களுக்கு லெட்டர் ஒண்ணும் போடல? நீயும் இங்கே வரல... ஏன்?'' - ஆத்திரம் தெரித்த ராம்குமாரின் கேள்விகள்.

''மனசுக்குக் கஷ்டமாயிருந்தது... உங்களுக்கும் கஷ்டம்தர வேண்டாமேன்னு தான்....''

''நல்ல பொம்பள நீ...! ஆத்திர அவசரத்துக்கு ஒண்ணுன்னா உனக்கு யாரிருக்கா? நாங்கதானே?''

பொ று க் க மா ட் டா ம ல் சாந்திதான் பொரிந்து தள்ளினாள்.

''எனக்குத் துணையாய் மாமாவும் அத்தையும்தான் இருக்காங்கல்ல....''

சமாதானம் சொல்லிவிட்டு குழந்தைக்குப் பவுடர் போடத் தலைப் பட்டாள் கலா.

''சரி.... நீயொண்ணும் ஊருக்குப் போக வேண்டாம். உன் மாப்பிள கிட்டயிருந்து லெட்டர் வந்த பிறகு நேரே மெட்ராசுக்குப் போயிக்கோ...'' - சாந்தியே சொன்னாள்.

''அது எப்படி அண்ணி... வயசானவங்கள விட்டுட்டு நா இங்க இருக்கிறது நல்லதா? என்னோட அப்பா அம்மா மாதிரிதானே அவுங்களும்?''

கலாவின் பெருந்தன்மையை நினைத்



''உண்ணாவிரதம்னு சொல்லிட்டு, உண்ணாவிரதப் பந்தல்லேயே பகிரங்கமாச் சாப்பிடுறீங்களே?''

''வெறும் வயித்தில மாத்திரை சாப்பிடக் கூடாதுன்னு டாக்டர் சொல்லியிருக்கார்!''

- குடந்தை. எல். ராம்பிரபு.



கேடி 1 : ''அந்தப் போலீஸ் ஸ்டேஷன்ல முதல் தேதிக்குள்ளே மாமூல் கொடுத்துடணும்!''

கேடி 2 : ''இல்லாட்டி...?''

கேடி 1 : ''லேட்டானா வட்டி கேட்பாங்க!''

– எஸ். முகம்மது யூசுப்.

துப் பெருமைப் பட்டுக் கொண்டான் ராம் குமார். மனசுக்குள் மத்தாப்புக் கொளுத்திக் கொண்டது போலிருந்தது அவனுக்கு.

இந்த இரண்டு நாட்களும் கண்களில் எண்ணெயை ஊற்றிக்கொண்டுதான் கவனித்து வருகிறான் ராம்குமார் - சாந்தியின் நடவடிக்கைகளில் ஒன்றும் மாற்றம் இருந்ததாகத் தெரியவில்லை.

பீரோ சாவி பீரோவிலேயே கிடந்திருந்தது. முன் மாதிரி கலாவும் அனாவசியமாய் பீரோவைத் திறந்து உபத்திரவம் தரவில்லை. குளித்துவிட்டு மாற்றுவதற்கு மட்டும் அண்ணியிடம் சேலை கேட்டு வாங்கிக் கட்டிக் கொண்டாள்.

சாந்திக்கே ஆச்சரியமாய்ப் போயிருக்க வேண்டும்.

''என்ன கலா..... புதுசா கேட்கிறே. நீயே திறந்து சேலைய எடுத்துக்க வேண்டியதுதானே?'' - என்று பொய்யாய்க் கோபப்பட்டு சாந்தி கேட்க,

''இல்ல அண்ணி... உங்களுக்குத்தான தெரியும், வீட்டில கட்டிக் கொள்ள வச்சிருக்கிற சேலையைப் பத்தி....'' என்று நயமாக மறுத்து விட்டாள் கலா.

சாந்திக்குத் தெரிந்தது - முன் மாதிரி எதிலும் அதிக ஒட்டுறவு இல்லாமல் இருக்கிறாள் கலா. பிள்ளையை மட்டுமே அடிக்கடி அவளோடு காண முடிந்தது. அடுப்படி வேலைகளில் கூட அவள் தலை நீட்டிக் கொள்ளவில்லை. அண்ணனிடம் 'அது வேண்டும் இதுவேண்டும்' என்று பரபரப்பாய்ப் பட்டியல் போட்டுக் கேட்டுக் கொண்டிருக்கவில்லை. அருவியோட்டமாய் முழங்கும் அவளின் கலகல பேச்சுக் கூட காய்ந்து வறண்டு போய்க் கிடந்தது.

அந்நியப்பட்டுப் போனவளைப் போல காட்சி தரும் தங்கையைப் பார்க்க ராம்குமாருக்கு வேதனையாயிருந்திருக்க வேண்டும். கண்கள் கலங்கியிருந்தான். இன்னும் எத்தனை நாட்களுக்குத்தான் இவள் இந்த விரதத்தை அனுஷ்டிக்கப் போகிறாளோ என்று சிந்தனையில் கரைந்திருந்தான்.

அமைதியாய்க் கழிந்த இரண்டு நாட்களுக்குப் பிறகு புறப்படத் தயாரானாள் கலா.

''சரிம்மா... உன் மாப்பிள்ளை லெட்டர் போட்டதும் எங்களுக்குத் தெரியப் படுத்து.''

''ஆகட்டுமண்ணா....''

''இந்தப் பணத்தை வச்சிக்கம்மா...''

சட்டைப் பையிலிருந்து கத்தையாயிருந்த நோட்டுக் கட்டை எடுத்துத் தந்தான் தங்கையிடம். முதலில் மறுப்புக் காட்டி, அவர்கள் கட்டாயப்படுத்தியதும் வாங்கிக் கொண்டாள்.

திடீரெனச் சாந்தியின் மூளைக்குள் ஏதோ பொறி தட்டியதுபோல் உறுத்தியிருக்க வேண்டும். அவசரமாய்ப் பிள்ளையைக் கலாவிடம் தந்துவிட்டு வேகமாய் உள்ளறைக்குள் ஓடினாள்.

போன வேகத்தில் கையில் ஒரு புதுச் சேலையுடன் திரும்பி வந்தாள்.

''இந்தா கலா... இதுதான் கம்ப்யூட்டர் பாலியஸ்டர்... போன மாசந்தான் எடுத்தது.''

தயங்கினாள் கலா. ''எனக்கெதுக்கண்ணி சேலையெல்லாம். அவரில்லாம நா எங்க கட்டிக்கிட்டுப் போறது?''

''இப்ப இல்லாட்டியும் மெட்ராசுக்குப் போன பிறகாவது உடுத்திக்க. அங்க எல்லாரும் நல்ல நல்ல சேலையா உடுத்து வாங்க....''

கலாவின் கையில் திணித்தாள் சாந்தி. சேலையை வாங்கி சூட்கேசில் அடைத்துக் கொண்டு வெளிநோக்கி நடை போட்டாள் கலா. அவள் தனிமையாய் நடந்து போனதைப் பார்க்க மனசுக்குள் கஷ்டமாயிருந்தது ராம்குமாருக்கு.

வீட்டிற்குள் நுழைந்ததும் சாந்தியிடம் கேட்டான் : ''என்னம்மா வீராப்பாய்ப் பேசின நீ.... இப்ப என்னாச்சு? நீயாத்தான சேலைய எடுத்துக் குடுத்த...?''

திடமாய் சாந்தி சொன்னாள் : ''அவளுக்குச் சேல தாரதுபத்தி எனக்கொண்ணும் ஆட்சேபனை இல்லியே... என்கிட்ட கேக்காம எடுக்கிறதுலதான் கோபம் எனக்கு....''

சிவகாமியின் சபதம்

நாற்பத்தேழாம் அத்தியாயம்

மழையும் மின்னலும்

சிவகாமிக்குச் சுய உணர்வு வந்தபோது தான் பாறையில் சாய்ந்துகொண்டு தரையில் உட்கார்ந்திருப்பதையும், சக்கரவர்த்தி தனக்கு அருகில் உட்கார்ந்து ஆசுவாசப் படுத்துவதையும் கண்டாள். பயபக்தியுடன் சட்டென்று எழுந்திருக்க அவள் முயன்றபோது மகேந்திரர் அவளுடைய கரத்தைப் பிடித்து உட்காரவைத்து, ''வேண்டாம்!'' என்று கூறினார்.

சற்று முன்னால் தன் காதில் விழுந்த விஷயம் உண்மைதானா அல்லது தன்னுடைய சித்தப் பிரமையா என்று கேட்பவள்போல் மகேந்திர பல்லவரைச் சிவகாமி இரங்கி நோக்கினாள்.

சக்கரவர்த்தி, ''குழந்தாய்! மாமல்லனிடம் உன்னுடைய அன்பு எத்தகையது என்பதைக் காட்டிவிட்டாய். அவனுக்கு உன்னால் அபாயம் நேர்ந்தது என்றதும் உன் உணர்வையே இழந்து விட்டாய். இத்தகைய அன்பு நிறைந்த உன் இருதயத்தை நான் மேலும் புண்படுத்த வேண்டியவனாயிருக்கிறேன்'' என்றார்.

''ஐயோ! இன்னும் என்ன?'' என்று சிவகாமி விம்மினாள்.

''முக்கியமான விஷயத்தை இன்னும் உனக்கு நான் சொல்ல வில்லை, சிவகாமி! உன்னிடம் ஒரு வாக்குறுதி நான் கேட்கப் போகிறேன்! மாமல்லனுடைய க்ஷேமத்துக்காகக் கேட்கப் போகிறேன். நீ மறுக்காமல் தரவேண்டும்'' என்றார் மகேந்திரர்.

சிவகாமியின் குழம்பிய உள்ளத்தின் அடிவாரத்தில் ஒரு சிறிது தெளிவு ஏற்படத் தொடங்கியது. சக்கரவர்த்தியின் பேரில் அவளுக்கு ஏற்கெனவே இருந்த சந்தேகங்கள் மீண்டும் தோன்றின. 'இவர் நம்மை ஏமாற்றி ஏதோ ஒரு சூழ்ச்சியில் அகப்படுத்தப் பார்க்கிறார் : ஜாக்கிரதையாகயிருக்க வேண்டும்!' என்று எண்ணினாள் :

தன்னால் மாமல்லருக்கு அபாயம் நேர்ந்ததாகச் சற்றுமுன் சக்கரவர்த்தி கூறியதில் கூட அவநம்பிக்கை ஏற்பட்டது. தன்னைத் தனிமைப்படுத்தி வைத்துக் கொண்டு எதற்காக இப்படியெல்லாம் இவர் பேசுகிறார்? இவருடைய நோக்கங்கள் என்ன?

தலை குனிந்த வண்ணம், ''பல்லவேந்திரா! மன்னிக்க வேண்டும். தாங்கள் சொல்லுவது ஒன்றும் என் மனத்தில் பதிய வில்லை. மாமல்லருக்கு என்னால் அபாயம் நேர்ந்தது என்று சொன்னீர்களே? அது எப்படி?'' என்று கேட்டாள்.

''குழந்தாய் உன் மனத்தை அதிகமாக வருத்தப்படுத்த வேண்டாம் என்று அதை நான் சொல்லவில்லை. நீயே கேட்கிற படியால் சொல்கிறேன். காஞ்சியில் உன்னுடைய அரங்கேற்றம் நடந்த இரண்டு நாளைக்கெல்லாம் உங்கள் அரண்ய வீட்டுக்கு நான் வந்தேனல்லவா? அப்போது உன் தந்தையிடம் சில விஷ யங்கள் சொன்னேன். நீயும் கேட்டுக்கொண்டிருந்தாய். உன்னு டைய கலை தெய்வீகக் கலையென்றும், அதைத் தெய்வத்துக்கே அர்ப்பணமாக்க வேண்டும் என்றும் சொன்னேன். உனக்கு நினைவு இருக்கிறதா?''

சிவகாமிக்கு நினைவு வந்தது. அதை இப்போது எதற்காகச் சொல்கிறார் என்று அவள் உள்ளம் சிந்தித்தது. முகத்தை நிமிர்த்தாமல் குனிந்தவண்ணம், ''நினைவு வருகிறது, பிரபு!'' என்றாள்.

''குழந்தாய்! தெய்வத்துக்கு உரிமையாக்க வேண்டிய பொருளை மனிதர்களுக்கு உரிமையாக்க முயன்றால், அதனால்

அமரர் கல்கி



தீங்குவராமல் என்ன செய்யும்? ஏதோ இந்த மட்டும் மாமல்லன் உயிர்த்தப்பிப் பிழைத்தது பல்லவ ராஜ்யம் செய்த பாக்கியந்தான்!''

அப்போது சிவகாமி சட்டென்று தலையை நிமிர்த்தி நீர் ததும்பிய கண்களினால் சக்கரவர்த்தியை ஏறிட்டுப் பார்த்து, ''பல்லவேந்திரா! தாங்கள் ஏதோ கூடமாகப் பேசுகிறீர்கள். நான் கல்வி கேள்வியற்றவள்: ஏழைச் சிற்பியின் மகள். என்னைச் சோதிக்க வேண்டாம்!'' என்று விம்மினாள்.

மகேந்திரர் அப்போது சிவகாமியின் விரிந்த கூந்தலை அருமையுடன் தடவிக் கொடுத்து, அன்பு ததும்பும் குரலில் கூறினார்,:

'அம்மா! சிவகாமி! உன்னை நான் சோதிக்கவில்லை. உன் தந்தை ஆயனருக்கும் எனக்கும் எப்பேர்ப்பட்ட சிநேகம் என்பது உனக்குத் தெரியாதா? அவருடைய மகளாகிய நீ எனக்கும் மகள் தான்! கனவிலும் உனக்குக் கெடுதல் எண்ண மாட்டேன். உன் தந்தை எப்படிச் சிற்பக் கலையில் ஈடும் இணையும் இல்லாத பெருமை வாய்ந்தவரோ, அதேபோல் நீயும் பரதக்கலையில் சிறந்து விளங்குகிறாய். உன்னுடைய கலைத் திறமை இன்னும் மகோந்நதத்தையடைந்து பரத கண்டமெங்கும் உன்னுடைய புகழ் விளங்கவேண்டும் என்பது என் மனோரதம். அதற்கு எதுவும் குறுக்கே நிற்கக் கூடாது; யாரும் தடையாயிருக்கக் கூடாது என்பது என் எண்ணம். அப்படிக் குறுக்கே தடையாக நிற்பவன் என்னுடைய சொந்த மகனாகவே இருந்தபோதிலும், அந்தத் தடையை நான் நீக்க முயல்வேன்.''

சிவகாமி திடுக்கிட்டவளாய் முகத்தில் அவநம்பிக்கை தோன்ற மகேந்திர பல்லவரை ஏறிட்டுப் பார்த்தாள்.

'கொஞ்சம் பொறு, குழந்தாய்! முழுமையும் சொல்லிவிடுகிறேன், பிறகு, உன் இஷ்டம் போல் தீர்மானம் செய்து கொள். சற்றுமுன் நான் ஏதோ கூடமாய்ப் பேசுகிறேன் என்று கூறினாய். உண்மைதான். உன்னிடம் வெளிப்படையாய்ச் சொல்வதற்குச் சங்கோசப்பட்டுக் கொண்டுதான் அவ்விதம் கூறினேன். நீ அறிவாளியாகையால் தெரிந்து கொள்வாய் என்று நினைத்தேன். ஆனால், தற்சமயம் உன் மனம் பல காரணங்களினால் குழம்பிப் போய் இருக்கிறது. அதனால் நீ தெரிந்து கொள்ளவில்லை. எனவே, நான் சொல்ல விரும்பியதை உன்னுடைய நன்மைக்காகச் சொல்ல வேண்டியிருப்பதை - பச்சையாகவே சொல்லிவிடுகிறேன். அதனால் உன் மனத்திற்கு வருத்தம் நேர்ந்தால், என்னை மன்னித்து விடு!'' என்று கூறி மகேந்திர பல்லவர் ஒரு பெருமூச்சு விட்டார். அச்சமயம் அவருடைய முகக்குறி மிகவும் கடினமான காரியத்தைச் செய்வதற்கு ஆயத்தமாகிறவரைப் போலக் காணப்பட்டது.

சிவகாமி மறுபடியும் தலைகுனிந்து தரையைப் பார்த்த வண்ணம் இருந்தாள். ஏதோ ஒரு பெரிய விபரீதத்தை எதிர்பார்த்து அவளுடைய இருதயம் விம்மிற்று; இடையிடையே இரண்டொரு சொட்டுக் கண்ணீர் பூமியில் விழுந்தது.

''சிவகாமி கேள்! உன் தந்தை கல்லைக் கொண்டு உயிர்ச்சிலைகளைச் சமைக்கிறார். அதுபோலவே பிரம்மதேவன் மண்ணைக் கொண்டு பூலோகத்திலுள்ள சகல ஜீவராசிகளையும் படைக்கிறான். ஆனால், அசாதாரண அழகு படைத்த ஸ்த்ரீகளைப் பிரம்மதேவன் சிருஷ்டிக்கும்போது தன்னுடைய நாலிருகண்களிலிருந்தும் சொட்டும் கண்ணீரையும் மண்ணுடனே கலந்து சிருஷ்டிப்பதாகச் சொல்வதுண்டு. அப்படிப்பட்ட அசாதாரண சௌந்தரியவதிகளால் உலகத்திலே எத்தனையோ துன்பங்கள் உண்டாகுமென்று பிரம்மதேவனுக்குத் தெரிந்தபடியினாலேதான் அப்படி அவன் கண்ணீர் விட்டுக் கொண்டே அவர்களைப் படைப்பானாம்! குழந்தாய் உன்னைப் படைக்கும்போது பிரம்மதேவன் கண்ணீர் பெருக்கிக் கொண்டுதான் படைத்தானோ என்று நான் சிலசமயம் எண்ணுவதுண்டு. அத்தகைய அற்புத சௌந்தரியம் உன் மேனியில் குடிகொண்டிருக்கிறது. அது போதாதென்று உலகிலேயே இணையற்ற சௌந்தரியக் கலையும் உன்னிடம் சேர்ந்திருக்கிறது. நீ குழந்தையாயிருந்த வரையில் இதெல்லாம் எனக்குத் தோன்றவில்லை. ஆயனரைப் போலவே நானும் உன்னை என் செல்வக் கண்மணியாக எண்ணி மடியில் வைத்துக் கொண்டும், தோளில் போட்டுக் கொண்டும் கொஞ்சிக் குலாவி மகிழ்ந்தேன். ஆனால், நீ யௌவனப் பிராயம் அடைந்த பிறகு, உன்னைப் பார்க்கும்போதெல்லாம் எனக்கு, 'ஐயோ! இந்தப் பெண்ணால் உலகில் விபரீதம் எதுவும் ஏற்படாமல் இருக்கவேண்டுமே!' என்ற பச்சாதாபம் உண்டாகும். இரண்டு வருஷத்துக்கு முன்னால் விபரீதத்துக்கு அறிகுறிகள் தோன்றின. குழந்தைப் பிராயத்தில், உனக்கும் மாமல்லனுக்கும் ஏற்பட்டிருந்த குற்றமற்ற சிநேகம் திடீரென்று காதலாக மாறியதைக் கண்டேன். இந்தத் தகாத காதலை எப்படித் தடுப்பது, உங்கள் இருவருடைய மனமும்

புண்படாமல் எப்படி உங்களைப் பிரிப்பது என்று நான் யோசித்துக் கொண்டிருந்த போதே, இந்த மகாயுத்தம் வந்தது. நான் அவசரமாகப் போர்க்களத்துக்குப் போக வேண்டியதாயிற்று. நான் இல்லாத சமயத் தில் நீயும் மாமல்லனும் சந்திக்கக்கூடாது என்பதற்காகவே அவன் காஞ்சிக் கோட் டைக்கு வெளியே வரக் கூடாதென்று கண் டிப்பான திட்டம் போட்டுவிட்டுப் போனேன்...''

குனிந்து கொண்டிருந்த சிவகாமி தன்னையறியாத ஆத்திரத்துடன் மகேந்திர பல்லவரை ஏறிட்டுப் பார்த்தாள். கண்ணீர் ததும்பிய அவளுடைய கூரிய கண்களிலே தோன்றிய கோப ஜ்வாலை, 'சோ'வென்று மழை பெய்து கொண்டிருக்கும் போது இருண்ட வானத்தில் பளிச்சிடும் மின்ன லைப்போல் ஜொலித்தது! அதனால் ஒரு கணம் தயங்கிவிட்டுச் சக்கரவர்த்தி பின்னர் தொடர்ந்து கூறினார் : ''சிவகாமி! உன்னை யும் மாமல்லனையும் அவ்வாறு பிரித்து வைத்தபோது, அதனால் உங்களுடைய நேயம் குன்றிவிடும் என்ற எண்ணம் எனக் கில்லை. காற்றினால் பெரு நெருப்புக் கொழுந்து விட்டுக் கிளம்புவதுபோல் கட்டாயப் பிரிவினால் உங்களுடைய காதல் இன்னும் ஜ்வாலைவிட்டு வளரக் கூடும் என்பதை ஒருவாறு நான் எதிர்பார்த்தேன். எனவே, உங்களுடைய காதலைத் தடுக்கும் எண்ணத்துடன் உங்களை நான் பிரித்து வைக்கவில்லை. நான் இல்லாத சமயத்தில் மாமல்லனும் நீயும் சந்தித்தால் அதனால் வேறு பெரும் அபாயம் நேரும் என்று என்னுடைய உள்ளுணர்ச்சி சொல்லிற்று. புதையலைப் பூதம் காக்கிறதென்றும், ஜீவ ரத்தினத்தை நாக சர்ப்பம் காக்கிறது என்றும் சொல்வார்களே, - அதுபோல், கலைப் பொக்கிஷமாகிய உன்னைக் காப்பாற்று வதற்கோ அல்லது கபளீகரம் செய்வதற்குத் தானோ, - ஏதோ ஒரு மாயசக்தி உன்னைத் தொடர்வதாக எனக்குத் தோன்றியது. அத னாலேயே மாமல்லன் உன்னை நெருங்க முடியாதபடி நான் ஏற்பாடு செய்துவிட்டுப் போனேன். நான் எதிர்பார்த்தபடியே, உங் களைப் பிரித்து வைத்ததனால் உங்கள் காதல் குன்றாமல் கொழுந்துவிட்டு வளர்ந் தது. இதை மாமல்லன் உனக்கு எழுதிய ஓலைகளினால் அறிந்தேன்.''

''என்ன?'' என்று சிவகாமி அளவில் லாத வியப்புடனும் அருவருப்புடனும் சக்கரவர்த்தியை நோக்கினாள்.

''ஆமாம், சிவகாமி! மாமல்லன் உனக்கு எழுதிய ஓலைகள் - நீ மரப் பொந் தில் பத்திரப்படுத்தியிருந்த ஓலைகள் - என்னிடந்தான் வந்து சேர்ந்தன. அவ்வளவு நீசத்தனமான காரியத்தை நான் செய்ய வேண்டியிருந்தது. எல்லாம் இந்தப் பல்லவ இராஜ்யத்துக்காகத்தான். குழந் தாய்! சாதாரண மனிதர்களுக்குத் தர்மம் வேறு; அரச குலத்தினருக்குத் தர்மம் வேறு. உன் தந்தையைக் கேட்டால் இதைச் சொல்வார். மாமல்லன் ஒரு வியாபாரியின் மகனாகவோ அல்லது சிற்பியின் மகனா கவோ இருந்தால், அவனுக்கும் உனக்கும் நடுவில் நான் ஒருநாளும் நிற்கமாட்டேன். உங்களுடைய தெய்வீகமான காதலைக் கண்டு நான் களிக் கூத்தாடுவேன். ஆனால், இந்தப் பல்லவ சாம்ராஜ்யத்தின் நன்மைக் காக உங்கள் இருவரையும் பிரித்து வைக் கும் கொடுமையான கடமை எனக்கு ஏற் பட்டது...''

சிவகாமிக்கு அப்போது எங்கிருந்தோ அசாத்தியமான தைரியம் பிறந்தது. முக பாவத்திலும், குரலிலும் நிகரில்லாத கர்வம் தோன்ற, ''பிரபு! எங்களை நீங்கள் பிரித்து வைக்கப் பார்த்தீர்கள். ஆனால் அரசர் களைக் காட்டிலும் அதிக சக்தி வாய்ந்த விதி எங்கள் பக்கத்தில் இருந்தது. ஏரி உடைப் பையும் வெள்ளத்தையும் அனுப்பி எங்களை இந்தக் கிராமத்தில் சேர்த்து வைத்தது!'' என்றாள்.

''ஆம், சிவகாமி! ஆனால், உங்களைச் சேர்த்துவைத்த அதே விதி நான் செய்திருந்த ஏற்பாடு எவ்வளவு அவசியமானது என்ப தையும் எடுத்துக் காட்டியது. இந்த விஷக் கத்தியே அதற்கு அத்தாட்சி!'' என்று மகேந்திர பல்லவர் கூறி, மீண்டும் அந்த விஷக்கத்தியை எடுத்துச் சிவகாமியின் கண் முன்னால் காட்டினார்.



நாற்பத்தெட்டாம் அத்தியாயம்

மகேந்திர பல்லவர் தோல்வி


சிவகாமி வெருண்ட கண்களுடன் அந்த நாகப் பிடி அமைந்த கத்தியைப் பார்த்தாள். குரல் நடுங்க, நாத் தழுதழுக்க விசித்திர சித்தரைப் பார்த்துக் கூறினாள்:

''பல்லவேந்திரா! எந்தப் பாவியின் கரம் இந்த விஷக் கத்தியைப் பிடித்து மாமல்லருடைய முதுகில் செலுத்த யத்தனித்தது? கிருபை கூர்ந்து அதைச் சொல்லுங்கள். என்னால் இது நேர்ந்ததாயிருக்கும் பட்சத்தில்...'' என்று மேலும் அவள் பேசுவதற்குள் சக்கரவர்த்தி குறுக்கிட்டார்! ''ஆத்திரப்பட்டுச் சபதம் ஒன்றும் செய்ய வேண்டாம் சிவகாமி! இந்தப் பெரும் அபாயம் உன்னால் நேர்ந்ததுதான். ஆனால், நீ அறியாமல் நேர்ந்தது. இந்தக் கத்தி யாருடையதாயிருக்கும் என்று உனக்கு ஒன்றும் தெரியவில்லையா?'' என்று கேட்டார்.

''இம் மாதிரி கத்தியை நான் பார்த்ததேயில்லை, பிரபு!''

''பெயரிலேயே பாம்பையுடைய மனிதர் ஒருவரை உனக்குத் தெரியாதா, அம்மா?''

''நாகநந்தியடிகளா?'' என்று சிவகாமி கேட்ட போது, அவளுடைய குரலில் வியப்





பும் பயமும் ததும்பின.

''ஆம்! அவரேதான்!''

''ஐயோ! அவர் எதற்காக மாமல்லரைக் கொல்ல முயல வேண்டும்? நம்ப முடிய வில்லையே?''

''ஏன் நம்ப முடியவில்லை! இதைவிட அதிசயமான பயங்கரத் துவேஷங்களைப் பற்றி நீ கேட்டதில்லையா?''

''நாகநந்தி எதற்காக மாமல்லரைத் துவேஷிக்கிறார்? ஐயோ! காவித் துணி தரித்த புத்த பிக்ஷுவா இவ்விதம்...''

''சிவகாமி! புத்த பிக்ஷுவாயிருந்தா லென்ன? யாராயிருந்தால் என்ன? ஸ்திரீ சௌந்தரியத்தினால் புத்த பிக்ஷுவின் மனம் கெட்டுப் போகாதா? விசுவாமித்திரருடைய கடுந்தவத்தையே மேனகையின் சௌந்த ரியம் கலைத்து விட்டதே! புத்த சங்கங்கள் சீர்கெட்டுப் போயிருக்கும் இந்த நாளில் இது என்ன அதிசயம்?''

''என்ன சொல்கிறீர்கள்? எனக்கு ஒன் றும் விளங்கவில்லையே! நாகநந்தி எதற் காக மாமல்லரைக் கொல்லப் பார்த்தார்?''

''உன்னுடைய சௌந்தரியமாகிய விஷம் பிக்ஷுவின் தலைக்கேறியதனால் தான், அம்மா! வேறு என்ன இருக்க முடி யும்? புத்த பிக்ஷுவின் கடின உள்ளத்தையும் உன் மேனி அழகு கவர்ந்தது; மாமல்ல ருடைய கோமள இருதயத்தையும் கவர்ந் தது. ஆனால், நீ உனது தூய உள்ளத்தை மாமல்லனுக்கே கொடுத்தாய். பிக்ஷுவின் துவேஷத்துக்கு அதுதான் காரணம். இந்தப் பாறையில் நீயும் மாமல்லனும் நேற்று இரவு பேசிக் கொண்டிருந்த போது, இதே பாறைக்குப் பின்னால் புத்த பிக்ஷு கையில் இந்த விஷக் கத்தியுடன் ஒளிந்திருந்தார். கிராமத்துக்கருகில் உள்ள கோயில் வரை யில் உங்களைப் பின்தொடர்ந்து வந்தார். கடவுளின் அருளும் குண்டோதரனுடைய சர்வ ஜாக்கிரதையும் சேர்ந்துதான் மாமல்ல னுடைய உயிரைக் காப்பாற்றின....''

''குண்டோதரனா காப்பாற்றினான்? எப்படி, பிரபு?''

''உங்களுக்கும் பிக்ஷுவுக்கும் தெரியா மல் குண்டோதரன் உங்களைப் பின் தொடர்ந்து வந்தான். பிக்ஷு கோயில் மதில் மேல் ஏறிக் குதித்த போது இந்தக் கத்தி தவறிக் கீழே விழுந்தது. அதை அவன் எடுத்துக் கொண்டான். பிக்ஷுவை நள்ளிர வில் கோயில் மடைப் பள்ளியில் விட்டுக் கதவைத் தாழிட்டுக் கொண்டு வந்து எங்க ளிடம் எல்லா விவரங்களையும் சொன் னான். நாங்கள் வந்து பார்ப்பதற்குள் பிக்ஷு மடைப்பள்ளியிலிருந்து மாயமாகி விட் டார்.''

இவ்விதம் மகேந்திர பல்லவர் சொல்லிய போது சிவகாமியின் முகத்தில் அவ்வப்போது ஏற்பட்ட அதிசயமான மாறு தல்களையெல்லாம் அவர் கவனியாமல் இல்லை.

உண்மையில் நாகநந்தியைப் பற்றிப் பேச்சு வந்ததிலிருந்து, சிவகாமியின் பாதி மனம் இங்கேயும் பாதி மனம் மடத்தி லேயும் இருந்தது. மடத்து உள் அறையில் தூண் மறைவில் நாகநந்தி நின்ற தோற்றம் அவள் மனக்கண்முன் வந்து கொண்டே யிருந்தது.

இன்னும் அந்தப் பாதக பிக்ஷு அங் கேயே இருப்பாரா! இருந்தால், சக்கர வர்த்தியின் கையிலுள்ள கத்தியை வாங்கிக் கொண்டு போய் அவரைத் தன் கையா லேயே கொன்று விட வேண்டும் என்று சிவகாமிக்கு ஆத்திரம் பொங்கிக் கொண்டு வந்தது.

''பல்லவேந்திரா! அப்பா எங்கே? நான் உடனே மடத்துக்குப் போக வேண்டும்!'' என்றாள் சிவகாமி.

''தாயே! என் கோரிக்கையை இன்னும் நீ கேட்கவே இல்லையே? நான் கோரி வந்த வரத்தைக் கொடுக்கவில்லையே?''

''பிரபு! இப்படியெல்லாம் பேசி ஏன் என்னை வதைக்கிறீர்கள்! சிற்பியின் மக ளுக்குக் கட்டளையிடுங்கள்!''

''கட்டளை இல்லை, அம்மா! உன்னி டம் வரந்தான் கோருகிறேன். அதுவும் எனக் காகக் கோரவில்லை. பல்லவ சாம்ராஜ்யத் திற்காகக் கோருகிறேன். இந்த சாம்ராஜ்யத் தைப் பெரும் விபத்திலிருந்து காப்பாற்றும் சக்தி இப்போது உன் கையில் இருக்கிறது.''

''நான் என்ன செய்ய வேண்டும்?''

''மாமல்லனுக்கு ஓலை எழுதித் தர வேண்டும்!''

''என்ன ஓலை?'' என்று சிவகாமி கேட் டாள்.

''மாமல்லனை நீ விடுதலை செய்வ தாக எழுத வேண்டும். உன்னை மறந்து விடும்படி எழுத வேண்டும்.''

''பிரபு! இந்த ஏழைப் பெண்ணை ஏன் இப்படிச் சோதனை செய்கிறீர்கள்? மாமல் லரையாவது நான் விடுதலை செய்வா வது? என்னை மறக்கும்படி அவருக்கு நான் எப்படி எழுதுவேன்? நான் சம்மதித்தாலும் இந்தக் கை சம்மதியாது, சுவாமி!''

''சிவகாமி! காஞ்சிக்கு மூன்று காத தூரத்தில் வாதாபியின் படைகள் வந்திருக் கின்றன. ஆயினும் நான் இங்கே உன்னுடன் வாதாடிக் கொண்டிருக்கிறேன். இதிலி ருந்தே என்னுடைய கோரிக்கை முக்கிய மானதென்று உனக்குத் தெரியவில்லையா? உண்மையை இன்னும் பட்டவர்த்தனமாய்ச் சொல்கிறேன், கேள்! வாதாபியின் சமுத் திரம் போன்ற சைனியங்களை எதிர்த்து நிற்பதற்கு வேண்டிய படைபலம் இப்

போது பல்லவ இராஜ்யத்துக்கு இல்லை. இந்த நிலைமையில் தெற்கேயிருந்து பாண்டியனுடைய பெரும் படையும் பல்லவ இராஜ்யத்தைத் தாக்க வருகிறது. நீ மனம் வைத்து என் கோரிக்கையை நிறைவேற்றினால், பாண்டிய சைனியம் பல்லவ சைனியத்துடன் சேர்ந்து விடும். இரண்டும் சேர்ந்தால் வாதாபிப் படைகளை வெற்றி கொள்ளலாம். சிவகாமி! பல்லவ இராஜ்யத்துக்கு இந்த மகத்தான உதவியை நீ செய்வாயா?''

''எனக்கும் பாண்டியர் படையெடுப்புக்கும் என்ன சம்பந்தம் பிரபு! பல்லவ இராஜ்யத்துக்கு இந்த ஏழைச் சிற்பியின் மகள் என்ன உதவியைச் செய்ய முடியும்?''

''உன் மனத்தைப் புண்படுத்த வேண்டாம் என்று பார்த்தால் நீ விட மாட்டேன் என்கிறாய். சிவகாமி! பாண்டிய இராஜகுமாரியை மாமல்லனுக்குக் கலியாணம் செய்து கொள்ளுமாறு தூது அனுப்பினார்கள். அதற்கு மாமல்லன் இணங்காதபடியால் பாண்டியனுடைய சைனியம் நம்மீது படையெடுத்து வருகிறது. கலியாணம் செய்து கொள்வதாகச் சம்மதம் தெரிவிக்க வேண்டியதுதான். உடனே பாண்டிய சைனியம் நம்முடன் சேர்ந்து விடும். நீ மாமல்லனுக்கு விடுதலை கொடுத்தால், அவனை இதற்கு இணங்கச் செய்வேன். என்ன சொல்கிறாய், தாயே! பல்லவ இராஜ்யத்துக்கு உயிர்ப் பிச்சை அளிப்பாயா?'' என்று மகேந்திரர் இரைஞ்சினார்.

சிவகாமி பூமியில் சட்டென்று உட்கார்ந்து, ''மாட்டேன். மாட்டேன்! என்னால் முடியாது!'' என்று அலறினாள். பின்னர், விம்மிக் கொண்டே, ''பல்லவேந்திரா! உங்களுடைய கையிலுள்ள விஷக் கத்தியை என் மார்பில் பாய்ச்சிக் கொன்று விடுங்கள். தங்கள் குமாரருக்கு விடுதலை கிடைத்து விடும். பல்லவ இராஜ்யமும் காப்பாற்றப்படும். ஒரு பெரிய இராஜ்யத்தைக் காப்பதற்காக ஓர் அபலைப் பெண்ணைக் கொன்றால் என்ன? கத்தியை எடுங்கள் பிரபு! தங்களுக்கு தைரியம் இல்லாவிட்டால் கத்தியை இங்கே கொடுங்கள். நானே என் மார்பில் செலுத்திக் கொள்கிறேன்!'' என்றாள்.

''சிவகாமி! நீ ஜயித்தாய்! நான் தோற்றேன்'' என்றார் மகேந்திர பல்லவ சக்கரவர்த்தி.

பாறையடியில் மேலே கூறிய சம்பாஷணை நடந்து ஒரு நாழிகைக்குப் பிறகு சிவகாமியும் ஆயனரும் மண்டபப்பட்டுக் கிராமத்தை அடைந்தார்கள். மடத்து வாசலை அணுகியதும் சிவகாமி மிகவும்



''தாலி கட்டுறதுக்கு முந்தி, மாப்பிள்ளை மூச்சை வேகவேகமா இழுத்து விடறாரே, ஏன்?''

''சுதந்திரக் காற்றைக் கடைசியா சுவாசிச்சுக்கறாராம்!''

- சீர்காழி. வி. ரேவதி.•

பரபரப்புடன் முதலில் பிரவேசித்து அறைக்குள்ளே சென்று பார்த்தாள். தூண் மறைவில் பிக்ஷுவைக் காணவில்லை. மடத்திற்குள் வேறு எங்கேயும் அவரைக் காணவில்லை.

ஏதோ ஒரு சந்தேகம் உதிக்கவே, அவசரமாகச் சென்று தனது ஆடை ஆபரணப் பெட்டியைத் திறந்து பார்த்தாள். கையினால் பலமுறை துழாவிப் பார்த்தாள். ஆடை ஆபரணங்களையெல்லாம் எடுத்து உதறிப் பார்த்தாள்.

எப்படிப் பார்த்தும் சக்கரவர்த்தி கொடுத்த சிங்க முத்திரையுள்ள இலச்சினையைக் காணவில்லை!

அதே சமயத்தில் வராக நதிக்கு அக்கரையில் ரதசாரதி கண்ணபிரானிடம் புத்த பிக்ஷு மேற்படி சிங்க இலச்சினையைக் காட்டிக் கொண்டிருந்தார். காட்டி, தன்னை அவனுடைய ரதத்தில் காஞ்சிமா நகருக்கு விரைவாக அழைத்துப் போகும்படி கட்டளையிட்டார். கண்ணபிரான் தயக்கத்துடன் அந்தக் கட்டளையை ஒப்புக் கொண்டு பிக்ஷுவை ரதத்தில் ஏறும்படி கூறினான்.

இதையெல்லாம் சற்றுத் தூரத்தில் மரங்களின் மறைவில் நின்று சக்கரவர்த்தியும் சத்ருக்னனும் பார்த்துக் கொண்டிருந்தார்கள். சத்ருக்னன் பாய்ந்து சென்று கண்ணபிரானைத் தடுப்பதற்கு யத்தனித்த போது சக்கரவர்த்தி அவனுக்குச் சமிக்ஞை செய்து நிறுத்தினார்.

புத்த பிக்ஷு ரதத்தில் ஏறுவதையும், கண்ணபிரான் வேண்டா வெறுப்பாக ரதத்தின் குதிரைகளைத் தட்டி விடுவதையும், வீரர்கள் ரதத்தைப் பின்தொடர்ந்து செல்வதையும் அவ்விருவரும் பார்த்துக் கொண்டு சும்மா நின்றார்கள்.

சத்ருக்னனுடைய முகத்தில் கோபம் கொதித்தது. சக்கரவர்த்தியின் முகத்திலோ புன்னகை தவழ்ந்தது.

(தொடரும்)



◆ ஆதியும் பகவனும் - குழந்தை வள்ளுவருடன்...

திருவள்ளுவருக்கு ஒரு திருக்கோயில்

திருவள்ளுவருக்குத் தனிக் கோயில் ஒன்று, அதிலும் சென்னை மாநகரின் முக்கிய குடியிருப்புப் பகுதியான மயிலாப்பூரிலேயே உள்ளது என்று எத்தனை பேருக்குத் தெரியும்! பிரபலமான முண்டகக் கண்ணியம்மன் கோவிலுக்கு மிக அருகே, திருவள்ளுவர் அவதரித்ததாகக் கருதப்படும் இடத்தில் அமைந்துள்ளது இக் கோயில். எல்லாக் கோயில்களையும் போல் கோபுரம், கலசம் என்ற அமைப்புகள் இன்றி, சாதாரணச் சுற்றுச் சுவருடன் அமைந்துள்ளது. ஓர் அலங்கார வளைவு மட்டுமே அந்த வளாகத்துள் கோவில் இருப்பதற்கு அடையாளம்! அதனால்தான், பல மயிலைவாசிகளுக்கே வள்ளுவரின் கோவில் இங்கு இருப்பது தெரியவில்லையோ?

கோவிலின் உள்ளே மூலவரான திருவள்ளுவர் கம்பீரமாகக் கிழக்கு நோக்கி கொலுவீற்றிருக்கிறார். ஒருபுறம் வாசுகி அம்மையார் சன்னதியும், மறுபுறம் ஏகாம்பரேசுவரர் - காமாட்சி அம்மன் சன்னதியும், வாசலுக்கு வலப்பக்கம் நவக்கிரக மேடையும், கோயிலின் இடப்புற பிராகாரத்தின் பின்புறம் காமாட்சி கருமாரி சன்னதியும் அமைந்துள்ளன. அருகே அரச மரத்தடியில் நாகப் பிரதிஷ்டையும் செய்யப்பட்டிருக்கிறது.

வள்ளுவர் சன்னதிக்கு இடப்புறம் பித்தளைத் தகட்டினால் மூடப்பட்டுள்ள இலுப்பை மரத்தின் அடிப்பாகம், ஒரு மண்டபம் போன்று கட்டப்பட்ட அமைப்பினுள் உள்ளது. இலுப்பை மரம் பட்டுப் போக ஆரம்பித்ததால் 1935 ஆம் ஆண்டு பித்தளைக் கவசம் செய்து அதனைக் காத்துள்ளனர். இந்த இலுப்பை மரத்தடியில்தான் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வள்ளுவர் பிறந்ததாகச் சொல்கிறார்கள். அம் மரத்தடியில் வள்ளுவரின் தாய், தந்தையரான ஆதி, பகவனின் சிலைகள் உள்ளன.

தினசரி பூஜை ஆறுமுகம் என்ற குருக்களால் நடத்தப்படுகின்றது. வள்ளுவ



✦ கோயிலின் நுழைவாயில்

ரின் பெருமைகளையும், பெயர்களையும் சொல்லி 'போற்றி போற்றி' எனத் தமிழ் வழிபாடு நடக்கிறது.

கோயிலின் விசேஷ நாட்கள் பற்றிக் கேட்டோம். தைப் பொங்கல் சமயம் வரும் திருவள்ளுவர் தினம் மிகக் கோலாகலமாய்க் கொண்டாடப்படுவதாகவும் அப்போது திருவள்ளுவர் உற்சவ மூர்த்தியாக வீதி உலா வந்து வழிபாடு, விசேஷ அலங்காரம், அபிஷேகங்கள் நடப்பதாகவும் கூறினார். காலையிலிருந்து மாலை வரை கவியரங்கம், பட்டிமன்றம், மாணவர்களுக்குத் திருக்குறள் போட்டி எனப் பல நிகழ்ச்சிகள் பெருந்தலைவர்களாலும் அறநிலையத் துறையினராலும் நடத்தி வைக்கப்படுகின்றன.

மயிலை கபாலி கோயிலில் நடக்கும் அறுபத்து மூவர் உற்சவத்தின் போது திருவள்ளுவரின் உற்சவ மூர்த்தியும் கலந்து கொண்டு வீதி உலா வருவது வழக்கம். மாசி மாதம் உத்திர நக்ஷத்திர குரு பூஜையும், வள்ளுவர் பிறந்த நாளான வைகாசி மாதம் அனுஷ நட்சத்திரமும் அபிஷேகம் திருவீதி உலாவென்று விமர்சையாகக் கொண்டாடப்படுகின்றன.

சைவக் கோயில்களில் 'பன்னிரு திருமறை உற்சவம்' தை மாதம் இரண்டாவது வெள்ளிக் கிழமை நடக்கும் போது, பன்னிரு திருமறைகளைத் தலையில் சுமந்து திருவீதிஉலா வருவது போலத் திருக்குறளைத் தலையில் சுமந்து திருவீதி உலா சென்று ஹரிஜனங்களும், பாட்டாளி மக்களும் நிறைந்துள்ள குடிசைப் பகுதி வழியே வந்து கோயிலை அடைவதை வழக்கமாக வைத்துக் கொண்டுள்ளனர்.

இக் கோயிலுக்குத் தவறாமல் வந்து கொண்டிருந்த பெண் பக்தைகளில் ஒருவர் இங்கு கருமாரி சன்னதி அமைக்கப் பல முறை வேண்டுகோள் விடுத்தார். தற்செயலாக ஒருவர் கருமாரி சிலையைக் கோயிலுக்கு வழங்கவும், காமாட்சி கருமாரி என்ற பெயரில் அம்மன் இங்கு பிரதிஷ்டை செய்யப்பட்டாள். ஒவ்வொரு சித்ரா பௌர்ணமியன்றும் காமாட்சி கருமாரிக்கு 133 பொங்கல் பானைகள் வைத்து ஆராதிக்கி

✦ வள்ளுவர் - வாசுகி உற்சவ மூர்த்தங்கள்



✦ ஜம்பா, சங்கரி - "பெண்கள் கோயிலுக்கு வர பயப்படுகிறார்கள்....."





✦ ஆறுமுக குருக்கள்



◆ காமாட்சி - கருமாரி பக்த ஜன சபை மகளிர் செய்து வைத்துள்ள உற்சவ விக்ரகங்கள்



◆ வள்ளுவ பெருமான் மூலவர் சந்நிதி

றார்கள். (வள்ளுவர் கோயிலில் உள்ள கருமாரி அல்லவா? ஒரு சைபர்தானே கம்மி!)

ஆதியும் பகவனும் இக் கோயிலில் உள்ள ஏகாம்பரேசுவரர், காமாட்சி அம்மனை மனமுருகி வேண்டிக் கொண்டதால்தான் அவர்களுக்கு வள்ளுவர் பிறந்தார் என்று நம்பப்படுகிறது. எனவே, குழந்தை வேண்டி சித்ரா பௌர்ணமியன்று பொங்கல் படைத்துப் பலர் பிரார்த்தனை செய்கிறார்கள்; பயன் அடைகிறார்கள்.

காமாட்சி - கருமாரி பக்தஜன சபை என்ற அமைப்பு இக் கோயிலில் பௌர்ணமி உற்சவம், கார்த்திகை மாத சொக்கப்பானை போன்றவற்றை நடத்தி வருகிறது. இந்த அமைப்பின் மகளிர்ப் பிரிவு உற்சாகமாக நவராத்திரி உற்சவம், விளக்கு பூஜை போன்றவற்றை நிகழ்த்துகிறது.

கோயில் ஒரு பொது வழியாக, பலர் தங்கிச் செல்லும் இடமாகப் பயன்படுத்தப்படுவதைச் சுட்டிக்காட்டிய மகளிர் பிரிவு உறுப்பினர்கள் சங்கரியும் ஜம்பாவும், 'இதன் காரணமாகவே பல பெண்கள் கோயிலுக்கு வரப் பயப்படுகிறார்கள்' என்றனர்.

மயிலை திருவள்ளுவர் சங்கம் என்ற அமைப்பும் இக் கோயிலின் உயர்வுக்குப் பாடுபட்டுக் கொண்டிருக்கிறது. இவர்கள் நடத்தும் திருக்குறள் தொடர்பான பல போட்டிகள், இதர நல்ல காரியங்களுக்கு நிதி திரட்டாமல், ஒவ்வொரு செலவையும் ஒரு தனியார் நிறுவனத்தை ஏற்கச் செய்யும் யுக்தியைக் கையாண்டு வருகிறார்கள்.

இக் கோயிலின் பக்கத்தில் அமைந்துள்ள ''திருவள்ளுவர் - வாசுகி திருமண மண்டபம்'' பொது மக்கள் சேவையை முன்னிட்டே ரூ. 685 வாடகைக்குத் தரப்படுகிறது என்பதை நிர்வாகி தெ. ப. ஏகாம்பரம் தெரிவித்தார்.

வருமானம் குறைவானதால் இக் கோயிலை 'முண்டகக் கண்ணி அம்மன்' கோயிலுடன் இணைத்து விட்டது அறநிலையத் துறை. இக் கோயில் பிரபலமடையாமல் இருப்பது பற்றி ஏகாம்பரத்தைக் கேட்ட போது, ''புராணக் கடவுளை வணங்குவது போல வள்ளுவரை வணங்காதது ஒரு காரணமாக இருக்கலாம்'' என்றார்.

வள்ளுவர் கோயில் பிரபலமடையாவிட்டால் என்ன? தாம் எழுதிய நூலுடன் சேர்ந்து அவர்தான் உலகப் பிரசித்தி பெற்றுவிட்டாரே!

- பானுமதி இராமச்சந்திரன்

படங்கள் : **உத்ரா**



நிழலுக்குப் பின் நிஜங்கள் - 9

கோடம்பாக்கத்தில் சில குள்ளநரிகள்!

முந்தைய படம் ஒரு வெற்றிப் படமாக இருந்தாலொழிய ஒரு தயாரிப்பாளர் ஒரு இயக்குனரை அணுகப் போவதில்லை.

அந்தத் தயாரிப்பாளர், சம்பந்தப்பட்ட இயக்குனரை முதன் முதலாக அணுகி ஒப்பந்தம் செய்யும் போது சில்க் வேட்டி, டெர்லின் சட்டை, கமகமக்கும் செண்ட், மைனர் செயின், பிரேஸ்லட் என்று தடபுடலாக, துப்புரவாகத் துடைக்கப்பட்ட 'பளிச்' காரில், கதவைத் திறந்து நடந்து வரும் அழகே அலாதியாக இருக்கும். தம்மை ஒரு பெரிய தயாரிப்பாளர் என்று சம்பந்தப்பட்ட வெற்றி இயக்குனர் நினைக்க வேண்டும் என்பதில் கண்ணுங்கருத்துமாக இருப்பார்.

ஒப்பந்தம் செய்யப்பட்ட மறுநாளில் இருந்தே இலேசாக ஆரம்பிக்கும் முனகல் சப்தம் கடைசியில் மிகப் பெரிய 'பஞ்சப்' பாட்டில் முடிந்து, சென்சார் ஆபீசுக்குச் செல்லும் போது ஆட்டோவிலோ அல்லது டாக்ஸியிலோ கசங்கிய உடைகளுடன், கலைந்த முடியுடன், ஒரு வாரம் ஷேவ் செய்யாத முகத்துடன் வந்து இறங்குவதில் முடியும். இந்த இயக்குனரை வைத்துப் படம் எடுத்தால் 'இந்த நிலை'தான் என்று மற்றவர்களுக்கு 'எச்சரிக்கை' செய்யும் விதத்தில் அவரது நடை, உடை, பாவனை அமைந்திருக்கும்.

அந்தப் படம் வெற்றிப் படமாக அமைந்து விட்டால் சம்பந்தப்பட்ட இயக்குனர் தலை தப்பும். தப்பித் தவறித் தோல்விப்படமாக அமைந்து விட்டால், இயக்குனர் தலை, மூலைக்கு மூலை உருள ஆரம்பிக்கும். அவரது திறமை சந்தேகிக்கப்படும். நடத்தை அலசப்படும். கடைசியாகச் சம்பளமும் குறைக்கப்படும்!

அவரது வாயில் விழுந்து புரளுவதை விட சில ஆயிரம் ரூபாய்கள் போனால் பரவாயில்லை என்று இயக்குனரும் ஒரு வழியாக விட்டு விடுவார்.

கல்யாணம், விழாக்களில் சந்தித்தால், இவர் அந்தப் பக்கம் முகத்தைத் திருப்பிக் கொள்ள - அவர் வேறு பக்கம் முகத்தைத் திருப்பிக் கொள்ள, பார்ப்பதற்கே அருவருப்பாக இருக்கும்.

இந்த மாதிரி நடந்து கொள்ளும் தயாரிப்பாளர்களைப் பார்த்தால் எனக்குச் சிரிப்புத்தான் வரும். ஒரு இயக்குனரால் எல்லாப் படைப்புகளையும் வெற்றிகரமாகத் தந்து விட முடியும் என்று இவர்கள் எப்படி நம்புகிறார்கள்? நினைக்கிறார்கள்?

நான் தயாரிப்பாளர்களை மட்டும் குறைசொல்லவில்லை. சில இயக்குனர்களுக்கும் இந்த மனோபாவம் உண்டு. ஓர் இயக்குனரின் படம் தோல்வி அடைந்தால் அவருடைய அணுகுமுறையே மாறி விடும். அனைவரிடமும் கைகட்டியேதான் பேசுவார். வார்த்தைகளில் அகம்பாவம் இருக்காது. தன்னடக்கத்துக்கு இலக்கணமாகத் திகழ்வார். 'இந்தப் பக்கம் வந்தேன். அதான் எட்டிப் பாத்துட்டுப் போலாம்னு வந்தேன்' என்று நைஸாகத் தயாரிப்பு அலுவலகங்களில் ஏறி இறங்கி சான்ஸ் கேட்கும் பக்குவமே சுவாரஸ்யமாக இருக்கும். தப்பித் தவறி, 'பாவம்! போனால் போகிறது' என்று இரக்கப்பட்டு ஒரு தயா



மதி

ரிப்பாளர் அட்வான்ஸ் கொடுத்து விட்டால் போதும் - வரம் கொடுத்த சாமி தலையிலேயே கையை வைத்த அசுரன் போல, அந்த இயக்குனரின் 'பந்தா' மெதுவாகத் தலைதூக்க ஆரம்பிக்கும். அதுவும் அந்தத் தயாரிப்பாளரிடமே! 'பட்ஜெட்', 'வியாபாரம்' எதைப் பற்றியுமே கவலைப் படாமல் ஷாட்டுக்கு ஷாட் ஊதாரித்தனமும், 'மேதாவி'த்தனமும்தான்!

ஆக, "Cold war" என்பது கிட்டத்தட்ட ஐம்பது சதவீத படங்களில் நடந்து கொண்டிருக்கும். இதில் குளிர்காயும் குள்ள நரிக் கூட்டத்திற்குக் குஷி சொல்லி மாளாது. சினிமா ஒரு 'டீம் ஒர்க்' என்பதையே மறந்து கூட்டணி கூட்டணியாக 'அரசியல்' நடந்து கொண்டிருக்கும். அந்த மாதிரிப் படங்கள் அநேகமாகக் கடைசியில் Crash landing தான். 'தோல்வி' என்ற ஒன்றே இவர்களுக்கு ரசிகர்கள் தரும் தண்டனையாக அமையும்.

''நாம் எடுக்கப் போகும் படம் வெற்றிப் படமாகதான் அமையப் போகிறது என்ற எண்ணத்தையே விட்டு விட்டு, தோல்விப் படமாகவும் அமைய வாய்ப்பிருக்கிறது'' என்ற அணுகுமுறையோடு ஓர் 'இயக்குனர்' நடந்து கொள்ள வேண்டும்.

அதே போல ''அந்த இயக்குனர் கண்டிப்பாகக் கஷ்டப்பட்டுத்தான் உழைத்தார். ஆனால் வெற்றி/தோல்வி என்ற தீர்ப்பு ரசிகர்கள் கையில்தான் இருக்கிறது. அதற்கு அவரைப் பொறுப்பு சொல்ல முடியாது'' என்ற அணுகுமுறையோடு ஒரு 'தயாரிப்பாளர்' நடந்து கொள்ள வேண்டும்.

ஏனெனில் இந்தப் படம் '100 நாள் படம்' என்று பூஜையன்றே எந்தக் கொம்பனாலும் சொல்ல முடியாது.

உலகம் உருண்டை. அதுவும் கோடம்பாக்கம் சினிமா உலகம் சின்னஞ்சிறு 'கமர்கட்' உருண்டை. சுற்றிச் சுற்றி ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துத்தான் தீர வேண்டும். இதைப் புரிந்து கொள்ளும் வரை ஆத்திரமும், அகம்பாவமும்தான்.

நான் அப்போது ஒரு டிராவல் ஏஜென்ஸியில் பணிபுரிந்து கொண்டிருந்த காலம். சினிமாவுக்கு வராத காலம். அந்த நாளைய ஒரு பெரிய தயாரிப்பாளரது அனைத்து ரயில், விமான டிக்கெட்டுகளையும் நான் தான் ஏற்பாடு செய்து கொடுப்பேன். ஒரு படப்பிடிப்புக்காக என்னிடம் கிட்டத்தட்ட அறுபது விமான டிக்கெட்டுகள் வாங்கினார். எங்களுக்கு அவர் பெரிய வாடிக்கையாளர்.

காலப்போக்கில் அவரது படங்களும் தோல்வி அடைந்து, படங்கள் தயாரிப்பதையே விட்டு விட்டார். நானும் நாடகம், சினிமா என்று தாவி, ஒரு கதாசிரியன்/நடிகன்/இயக்குனர் ஆகி விட்டேன்.

கோடம்பாக்கத்தில் காரில் சென்று கொண்டிருந்த நான், அந்தத் தயாரிப்பாளர் சாலையில் நடந்து சென்றதைக் கண்டேன். 'சட்'டென்று காரை நிறுத்தி அவருக்கு வணக்கம் செலுத்தினேன்.

''பரவாயில்லையே! என்னைப் பார்த்துக் காரை நிறுத்தி இறங்கி விசாரிக்கணும்னு தோணிச்சே!'' என்றார்.

"டிராவல் ஏஜென்ஸியில் நான் இருந்த நாட்களில் நீங்கள் செய்த உதவிகளை மறக்க முடியாது'' என்றேன்.

''அதை சினிமா உலகத்துக்கு வந்த பின்னும் மறக்காமல் ஞாபகம் வைத்துக் கொண்டு இருக்கிறீர்களே! அதுதான் அபூர்வம்'' என்றார்.

அவர் சொன்னதின் உள் அர்த்தம் என்ன? சினிமா உலகில் முன்னுக்கு வந்தவர்கள் பழசையெல்லாம் மறந்து விடுவார்கள் என்றா? அப்படி அவர் சொன்னது தவறு. அவர் அப்படிச் சொல்லும்படி யாராவது நடந்து கொண்டிருந்தால் அதுவும் தவறு!

'நிழலில்' காட்டும் கதாபாத்திரங்களை 'நன்றிகுல திலகங்களாக'க் காட்டி விட்டு 'நிஜ' வாழ்க்கையில் அதை மறந்தால் எப்படி?

(நிழல்கள் தொடரும்)



வட்டம்
கோணம்
கற்காடு
கருங்கல்
கற்றுவா...

வியப்பாக இருக்கிறதா? இவை குமரி மாவட்டத்திலுள்ள குக்கிராமங்களாகும்!

- ஆர். கே. லிங்கேசன்.

எங்கும் காணாமல்...

பஸ் சென்ட்ரலைத் தாண்டி ஓடிக் கொண்டிருந்தது. வண்டியில் கூட்டம் வழக்கத்தை விட அதிகம். ஜங்ஷனிலேயே ஸ்டாண்டிங் ஆரம்பித்து விட்டது. இன்றைக்கு முகூர்த்த நாளோ?

நல்லவேளை! உட்கார இடம் கிடைத்து விட்டது. காலையில் முசிறியில்



கிளம்பியது. களைப்பாக இருந்தது. ஜன்னல் வழியே வந்த காற்று இதமாய் இருந்தது. வெளியே வேடிக்கை பார்க்கத் தொடங்கினேன்.

பஸ் கோவில் வாசலைத் தாண்டு கையில் ஒரு குடிமகன் குறுக்கே வர, சடன் பிரேக் போட்ட டிரைவர் மதுவிலக்கை ஆதரித்து அறிக்கை விட்டார்.

சந்திப் பிள்ளையார் கோவில் முக்கில் ஐந்து பேர் ஏறினார்கள். படிக்கட்டைத் தாண்டி முண்டியடித்து ஏற முயல்வது -

கண்டிப்பாக கோமதி சங்கரன்சார்தான்.

என்னமாய்ப் பாடம் எடுப்பார்? கடைசி மாணவனுக்கும் புரிய வேண்டும் என்பதில் எவ்வளவு ஆர்வம் காட்டுவார்! எவ்வ்ளவு சந்தேகம் கேட்டாலும் மனிதர் கொஞ்சமாவது சலித்துக் கொள்ள வேண்டுமே! ஊஹூம்! அதே மாறாத புன்னகைதான்! எந்த மாணவனையாவது அடித்தார் என்பது அவர் வரலாற்றிலேயே கிடையாது! எல்லா மாணவர்களுக்குமே அவர் மீது தனி மரியாதை உண்டு.

'வணக்கம் சார்!' - வாய் வரை வந்த வார்த்தைகளை மனம் அடக்கியது. 'வணக்கம் சொல்லப் போகிறாயே; எழுந்து இடம் கொடுக்கத் தயாராய் இருக்கியா?' எதிர்க் கட்சி வக்கீலாய்க் கேள்வி கேட்டது மனம்.

ஓரக் கண்ணால் மீண்டும் பார்த்தேன். அவர் படிக்கட்டைத் தாண்டி உள்ளே கொஞ்சம் முன்னேறியிருந்தார். ஆனால் எனக்கு முதுகு காட்டிக் கொண்டு எதிர்ப் பக்கமாய்ப் பார்த்துக் கொண்டிருந்தார்.

'நாம இடம் கொடுத்தாலும் அவர் இவ்வளவு கூட்டத்தையும் தாண்டி உள்ளே வரணுமே!' எனக்கு நானே நொண்டிச் சமாதானம் சொல்லிக் கொண்டேன்.

பேட்டை ரயில்வே லைன் தாண்டி விட்டது. அவர் என்னைப் பார்த்திருப்பாரோ? இருக்காது! பார்த்திருந்தால் கூப்பிட்டிருப்பாரே! படிக்கும் நாட்களில் அவருக்கு என் மீது அத்தனை பிரியம்!

சீத்தமல்லி இறக்கத்தில் இரண்டு பேர் இறங்கினார்கள். சார் எதிர்ப் பக்கமாகவே பார்த்துக் கொண்டிருந்தார். எங்கே என்னைக் கவனித்து விடுவாரோ என்று நான் வெளியே பராக்கு பார்க்கத் தொடங்கினேன். பஸ் விரைந்தது.

முகதி. சுபா



. பீகாரின் 'ஒரு பெரிய நகரில் இருந்து இரவு பஸ் ஒன்று புறப்பட்டுச் சென்று கொண்டிருந்தது. திடீரென்று ஒரு கொள்ளைக்காரன் பஸ்ஸை நிறுத்தி, பயணிகளிடமிருந்த பணம், நகை எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டான்! பயணிகள் அனைவரும் நடுங்கிக் கொண்டிருந்த போது, கொள்ளைக்காரன் திடீரென்று தன் உதவியாளர்களிடம், ''எல்லாவற்றையும் அவரவர்களிடமே திருப்பிக் கொடு'' என்று உத்தரவிட்டான். பயணிகளால் நம்ப முடியவில்லை! கொள்ளைக்காரன் சொன்னான் : ''இதை நான் எடுத்துக் கொண்டு போனால் உடனே நீங்கள் போலீசில் புகார் செய்வீர்கள். போலீசார் பங்கு கேட்க என் வீட்டுக்கு வந்து விடுவார்கள். இவ்வளவு குறைவாகத்தான் கிடைத்தது என்றாலும் அவர்கள் நம்ப மாட்டார்கள். இதற்கு மேலேயே பங்கு கேட்பார்கள். அதனால் நீங்களே வைத்துக் கொள்ளுங்கள்!''

தகவல் : சம்பத்குமாரி.

''நடுக் கல்லூர்'' - கண்டக்டர் குரல் கொடுக்க, நாலு பேர் இறங்கினார்கள்.

வண்டியில் கூட்டம் வெகுவாகக் குறைந்திருந்தது. சார் இன்னமும் நின்று கொண்டுதான் இருந்தார்.

எழுந்து இடம் கொடுத்து விடலாமா? வேண்டாம்! இன்னும் கொஞ்ச தூரம் தானே!

சேர்மாதேவி விலக்கில் மூன்று பேர் இறங்க, முன்னால் காலியான சீட்டில் சார் அமர்ந்து கொண்டார்.

அப்பாடி! பஞ்சாப் பிரச்னையையே தீர்த்து விட்டது போல் பெருமூச்சு விட்டேன். இடையில் எப்போதாவது பார்த்திருப்பாரோ? பார்த்திருந்தால்தான் என்ன? நான் கவனிக்கவில்லை என்று சொல்லி விட்டால் போகிறது.

அரியநாயகிபுரத்தில் கோவில் வாசல் ஸ்டாப்பில் சார் இறங்கிக் கொண்டார். அங்கு இறங்கினால் எனக்கும் வீடு கிட்டத்தான். ஆனால் குற்ற மன குறுகுறுப்பால் அதை அடுத்த முருகன் கோவில் ஸ்டாப்பில் போய் இறங்கினேன்.

மறுநாள் ஆற்றுக்குக் குளிக்கச் செல்கையில் வாய்க்கால் பாலத்தில்... எதிரே...

சாட்சாத் கோமதி சங்கரன்சார்!

''வணக்கம் சார்!''

''வாப்பா! பாஸ்கர்! என்ன சௌகரியமா? இப்ப எங்கே இருக்கே?''

''மூசிறில சார்! நேத்துச் சாயந்தரம்தான் வந்தேன்!''

''நேத்து பஸ்ஸில பார்த்தேன்!''

''அப்படியா சார்? நான் உங்களைப் பார்க்கவே இல்லையே!'' - மனசாரப் புளுகினேன்.

''பேட்டை வரும்போதே உன்னைக் கவனிச்சுட்டேன். நீ என்னைக் கவனிக்கல. கூப்பிடலாம்னுதான் நினைச்சேன். ஆனா நீ ரொம்பக் களைப்பா இருந்தே! நான் கூப்பிட்டேன்னு வச்சுக்க; உடனே நீ எந்திரிச்சு எனக்கு இடம்கொடுத்துடுவே! அந்தக் களைப்போட நீ நின்னுக்கிட்டே வர வேண்டியிருக்கும். அதான்...''



தன்னடக்கம் மிக்க ஒருவரை நீதிபதியாக நியமிக்க அரசர் ஆசைப்பட்டார். அப்படிப் பட்ட ஒருவரைத் தேடி வருமாறு ஒரு குழுவினரை அனுப்பி வைத்தார். இந்தச் செய்தி முல்லாவுக்கு எட்டியது. ஒரு மீன் வலையைத் தோள் மீது போட்டுக் கொண்டு முல்லா, அரசரால் அனுப்பப்பட்ட குழுவினர் முன் சென்றார்.

அவர்களுள் ஒருவர், எதற்காகத் தோள் மீது வலையைப் போட்டிருக்கிறீர்கள்?'' என்று முல்லாவிடம் கேட்டார்.

''ஒரு காலத்தில் நான் மீன் பிடித்துக் கொண்டிருந்தேன். அந்தப் பழைய நினைவு மறந்து விடக் கூடாது என்பதற்காகத்தான்.''

இந்த தன்னடக்கத்தைக் கண்டு நீதிபதியாக அவரை அரசர் தேர்ந்தெடுத்தார்.

பின்னர் ஒருநாள், ''முல்லா, எங்கே வலை?'' என்றார்.

''மீன்தான் கிடைத்து விட்டதே. இனி மேல் எதற்கு வலை?'' என்றார் முல்லா!

ஆ. வளையாபதி.



மிருதுவான போஷாக்கு

உங்கள் குழந்தைக்கு 4 மாதங்களாகும் சமயத்தில் அவனது இயற்கை உணவான பாலுடன் எளிதில் ஜீரணிக்க உகந்த போஷாக்கு உணவான நெஸ்டத்தையும் கொடுங்கள்.

பாலுடன் கலந்து தயாரிக்கப்பட்ட நெஸ்டம் உங்கள் குழந்தையின் மிருதுவான முதல் திட உணவாகும். ஏனெனில் இதில் குழந்தை ஆரோக்கியமாய் வளர்வதற்குரிய எல்லா போஷாக்குகளும் சமச்சீர் அளவில் அடங்கியுள்ளன. உங்கள் குழந்தையின் உணவில் வெவ்வேறு சுவையைக் கூட்ட விரும்பினால், அவ்வகை உணவுடன் நெஸ்டத்தை கலந்து கொடுங்கள். உதாரணமாய் வேக வைத்த பழங்கள், வேகவைத்து மசிய வைத்த காய்கறிகள் மற்றும் பருப்பு வகைகள்.

அரிசி சேர்த்த நெஸ்டம், போஷாக்கு நிறைந்த ஸீரியல் ஆகும். உங்கள் குழந்தை இதை எளிதில் ஜீரணிக்கும். உங்கள் குழந்தையின் வளர்ச்சிக்கு மருத்துவர்கள் சிபாரிசு செய்யும் எல்லாவித போஷாக்கும் இதில் உள்ளன. உறுதியான எலும்புகளுக்கும் பற்களுக்கும் தேவையான கால்ஷியம்; ஆரோக்கியமான ரத்தத்திற்கு தேவையான இரும்பு சத்து; பட்டு போல் பளபளக்கும் சருமத்திற்கும், ஒளிவீசும் கண்களுக்கும், நோய் எதிர்ப்பு சக்திக்கும் தேவையான வைட்டமின்களும் இதில் அடங்கியுள்ளன.

உங்கள் செல்லக் குழந்தை நெஸ்டத்துடன் சேர்ந்து வளர்வதை கவனியுங்கள்.

இலவச நெஸ்டம் செய்முறை புத்தகத்திற்கு எழுதுங்கள். போஸ்ட் பேக் 25, புது டில்லி-110016.

எளிதில் ஜீரணிக்க வல்ல பேபி ஸீரியல்.

நெஸ்டம்

TS McCann/NESTUM/191/TM

16 நெஞ்சுவரை

''ஏதோ படிச்சவ. புத்திசாலித்தனமா நடந்துப்பேன்னு நினைச்சேன். இத்தனை அபத்தமா - எவன்கிட்ட மாட்டக்கூடாதோ அங்கே போய் மாட்டுவேன்னு நான் கொஞ்சம் கூட எதிர்பார்க்கலை. இங்கே பாரு, இது என்ன பைத்தியம் மாதிரி... அடடா... கண்ணைத் துடை....''

குமரன், சட்டைப் பையிலிருந்து கைக்குட்டையை உருவி, மீராவின் அருகில் போட்டான்.

அவளோ - இருட்டில் நிழலோவிய மாய்த் தெரியும் பெரிய கோவிலின் விமானத்தைப் பார்த்தபடி உட்கார்ந்திருந்தாள்.

வெட்ட வெளியாய் ஆலயத்தின் வெளிப் பிராகாரத்தில் பரந்து கிடக்கும் கல் தரையில் - பக்கத்தில் ஒப்புக்கு எரிந்து கொண்டிருக்கும் விளக்கு வெளிச்சத்தில் அவள் அப்படி அமர்ந்திருப்பதே பரிதாபத்துக்குரியதாய்....

'இவள் இந்த மண்ணில் எதைத் தேடுகிறாள்?'

'தன் கணவனைப் பறித்த - அந்த விபத்துக்குக் காரணகர்த்தாவையா?'

'அது என்ன - இவள் ஒருத்தியால் முடிகிற விஷயமா... அப்படியே முடிந்தாலும் - அதனால் இனி ஆகப் போவதுதான் என்ன...?'

குமரன் - இவளிடம் கொஞ்சம் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று தீர்மானித்தான்.

''எதுக்கு அப்படி விழுந்தடிச்சுட்டு ஒடி வந்தே?''

''பின்னே... ரவியானா - நிர்மலாவை இங்கே அழைச்சிட்டு வான்னு சொல்லிட்டு காருல உட்கார்ந்திருக்கான். எனக்கு நிர்மலாவை முன்னே பின்னே தெரியாது. ஆனா, அவ ஃபிரண்டுன்னு பொய் சொல்லிட்டேன்.''

''எதுக்காகப் பொய் சொல்லணும்?''

''ரவிக்கு நிர்மலாகிட்டப் பிரியம் இருக்குங்கறதை உங்க கல்யாண வீடியோ மூலமாத் தெரிஞ்சுக்கிட்டேன். எனக்கு எப்படியாவது அவன் கூடக் கொஞ்சம் பேச்சுக் கொடுக்கணும். இந்தக் குண்டு வெடிப்புக்கும் ரவிக்கும் சம்பந்தமிருக்கான்னு தெரிஞ்சுக்கணும். அதுக்கு வேற வழி தெரியலை...''

குமரன், தன் கைக் கடியாரத்தைப் பார்த்தான்.

''இத்தனை நேரம் - நீ சொன்னது அத்தனையும் பொய்னு அவனுக்குத் தெரிஞ்சிருக்கும். அநாவசியமா அந்த ஆள்கிட்டப் போய் வம்பை விலைக்கு வாங்கியிருக்கே.''

''இல்லே. இன்னும் தெரிஞ்சிருக்காது. அவன், நிர்மலாவை அவனோட வீட்டுல சந்திக்கிறதில்லேன்னு தெரியறது. தெரு முனையில் வண்டிய நிறுத்திட்டு, என்னை அனுப்பி, அவளை அழைச்சிட்டு வரச் சொல்வானேன்? அங்கே போக முடியாம, அவனை ஏதோ தடுக்கறது.. அந்த எதிர்ப்பு இருக்கற மட்டும் போக மாட்டான்...''

குமரன் அத்திப் பூத்தாற் போலச் சிரித்தான்.

''வீட்டுல வச்சுப் பார்க்க முடியலைன்னாலும் தினமும் ராத்திரி எட்டு மணி சுமாருக்கு அவங்க ரெண்டு பேரும் - என் மனைவியோட நர்ஸிங்ஹோம்லே அவ உபயோகிச்சிட்டிருந்த அறையில சந்திக்கிறாங்க. இது ஊரறிஞ்ச உண்மை. இதைக் கண்டுபிடிக்கறதுக்காக நீ இத்தனை சிரமம் எடுத்திட்டிருக்க வேண்டாம்.''

அவள், வெகுண்டு அவனைப் பார்த்தாள்.

''என்ன, அப்படிச் சொல்லிட்டீங்க? ரவியும், நிர்மலாவும் சேர்ந்துதான் இந்த விபரீதத்துக்குப் பிளான் போட்டிருக்காங்க. அவங்களோட திருமணத்துக்கு உங்க அப்பா தடையா இருந்திருக்கார். தொலைச்சிட்டாங்க. மோடிவ் இருக்கு இல்லே? போதாக்குறைக்கு - ரவியோட பிஸினஸ்லே கிரானைட் கல்லை பாலீஷ் பண்ணி, வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யறதுதானாம்.. கல்லை உடைக்க டைனமைட் வெடி வைப்போம்னு சர்வ அலட்சியமாச் சொல்றான் அவன்..''

குமரன் இன்னமும் சிரித்தான்.

''ஆக வெடிகுண்டு வைக்கறதுக்கான காரணம் இருக்கு. கல் உடைக்கிற குவாரியில டைனமைட் நிறைய வச்சிருக்காங்க. வேணுங்கறப்ப, முட்டையை ஃபிரிஜ்லேயிருந்து எடுத்து, பொட்டுனு உடைச்சு தோசைக் கல்லுல ஊத்தற மாதிரி - குண்டைத் தூக்கி டைம் செட் பண்ணி

அனுராதா ரமணன்

நந்தவனம்

எங்கே வைக்கணுமோ வச்சிட்டுப் போயிட்டே இருக்கலாம்; இல்லையா...?''

மீரா இதற்கு உடனே பதில் சொல்ல வில்லை. அவனையே வெறித்துப் பார்த் தாள்.

அவன் - அவளை விட்டுச் சற்றுத் தள்ளி, தரையில் தூசு தட்டி உட்கார்ந்தான்.

''இந்த மர்மத்தை நீ வந்துதான் கண்டு பிடிக்கணுமா? எனக்குத் தெரியாதா? ஒரு விஷயம் சொல்றேன். கவனமாக் கேளு. என் கல்யாண ரிஸப்ஷனுக்கு நிர்மலா வோட பாட்டுக் கச்சேரிய ஏற்பாடு செஞ்சது என் மச்சான் ரவிதான். அவளுக்கும் அவ னுக்கும் ஏற்கெனவே சிநேகம் இருந்தி ருக்கு. அப்ப எல்லாம் ரவி சுயமாச் சம்பா திக்கலை. ஒவ்வொரு பைசாவுக்கும் அப்பா வை எதிர்பார்த்து நிற்க வேண்டிய நிர்ப் பந்தம். அப்படியும் எப்படியோ இவ சிநேகம்...''

''..........''

''நிர்மலாவோட அம்மாவுக்கு இது பிடிக்கலை. பணமில்லாதவனோட என்னத் துக்கு மணிக்கணக்குல பேச்சுன்னு கத்துவா. ஏதோ - அக்காவோட கல்யாணத்துக்கு - நிர்மலாவைக் கச்சேரிக்கு ஏற்பாடு செஞ்சா அவளுக்கும் பண உதவி செஞ்ச மாதிரி இருக்கும்; அவ அம்மாவோட மதிப்புலே யும் உயருவோம்னு நினைச்சுத்தான் ரவி, அவளை ஒப்பந்தம் செஞ்சான்.''

''......''

''ஆனா, விதி வேற மாதிரி விளையாடி டுச்சு. எங்கப்பாவோட பார்வை - நிர்மலா மேல விழுந்திடுச்சு. நிர்மலாவோட அம்மா வும், இதைத்தான் ஆதரிச்சா. என் மாம னார்கிட்ட சொல்லி எங்க அப்பா, ரவியை இந்தப் பக்கமே வர விடாம செஞ்சார். அப் படியும் நிர்மலாவை ரவி திருட்டுத்தனமா சந்திக்காம இல்லை. உண்மையில இப்ப அவளுக்கு இருக்கற ஒரு குழந்தையும் ரவியோடதுதான்.. அந்தக் கருவை அழிக் கத்தான் எங்கப்பா, தெய்வானை மிரட்டி னார்.. சொந்த தம்பிக் குழந்தையை, தன் கையாலே அழிக்க மனசு வராமத்தான் தெய்வா என்னையும், என் குடும்பத்தையும் கேவலமாப் பேசிட்டு விலகிப் போனா...''

''அப்படிப்பட்ட அக்காவையே தீர்த் துட்டானே ரவி...''

இப்பொழுது குமரன் கடகடவெனச்



சிரித்தான்.

''நேத்து வரைக்கும் என்னைக் கொலையாளின்னு சொன்னே.. இப்ப ரவியைச் சொல்றே...''

''ரவிதான்.. கண்டிப்பா ரவிதான்.. என் அப்பாவிப் புருஷனையும் சேர்த்துக் கொன்னுட்டான்..''

மீரா, கைகளால் தரையை ஓங்கிக் குத்தினாள். குமரன் 'சட்'டென அவள் கைகளை இறுக்கிப் பிடித்தான்.

''ஒரு விஷயத்தைப் பத்திச் சரிவரப் புரிஞ்சுக்காம, உணர்ச்சிவசப்படறது ரொம்பத் தப்பு. ரவிக்கு எங்க அப்பாவைக் கொல்ல மோடிவ் இருக்கலாம். என் பெண்டாட்டிய ஒழிச்சுக் கட்டினா, முழுச் சொத்தும் அவனுக்கு வருமாயிருக்கலாம். ஆனா, இந்த விபத்துக்குக் காரணம் அவனில்லே!''

மீரா திகைத்துப் போய் அவனையே பார்த்தாள்.

''பின்னே, உங்க சந்தேக லிஸ்ட்டுல இவங்க ரெண்டு பேரும்தான் முக்கியமானவங்கன்னு...''

''அம்மா சொன்னாங்களா?''

''.....''

''உனக்கு எப்படி உன் புருஷனைக் கொன்ற அந்த விபத்துக்குக் காரணம் யாருன்னு தெரிஞ்சுக்கறதுல ஒரு வெறி இருக்கோ, அதே வெறி எங்கம்மாவுக்கும் இருக்காதா? எனக்கு இருக்காதா? இவனாயிருக்குமா, அவனாயிருக்குமான்னு அம்மா கேட்கறப்ப ஏதோ அவ திருப்திக்காக இருக்கலாம்னு சொல்லுவேன். அவ்வளவுதான்.. இந்த விபத்துக்குக் காரணம் - கண்டிப்பா ரவி இல்லே. நிர்மலாவுமில்லே...''

''பின்னே யாரு? கண்டுபிடிச்சிட்டீங்களா?''

''இல்லே. சீக்கிரமா கண்டுபிடிச்சிடுவேன். அதுக்கு முன்னாலே எனக்கு ஒரு விஷயம் தெரிஞ்சாகணும்...''

மீரா, 'என்ன' என்பது போல அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

''குற்றவாளி யார்னு தெரிஞ்சதுக்கு அப்புறம் நீ என்ன செய்யப் போறே?''

''அவனை - இல்லே - அவளைக் கூண்டுலே ஏற்றித் தூக்கு தண்டனை வாங்கிக் கொடுத்துட்டுத்தான் மறு வேலை...''

''அதான்; அந்த மறு வேலை என்னன்னுதான் நான் உன்னைக் கேட்கறேன். கல்யாணமா, உத்தியோகமா, படிப்பா?''

''படிக்க வைக்க அப்பாவால் முடியாது. ஏற்கெனவே என் கல்யாணத்துக்காக நிறையக் கடன் வாங்கிச் செலவழிச்சிருக்கார். ஏதாவது வேலைக்குப் போய் - அவருக்கு என்னால ஏற்பட்டிருக்கற கடனை அடைக்கணும்...''

''ஏன் நீ கல்யாணம் செஞ்சிட்டு வேலைக்குப் போய் - உங்க அப்பாவோட கடனை அடைக்கக் கூடாது?''

இப்பொழுது மீரா புன்னகை செய்தாள்.

''ஆரம்பத்துல எல்லாப் புருஷர்களும், பெண்டாட்டி சம்பாதிக்கற காசுலே ஒரு பைசாக் கூட தனக்கு வேண்டாம்னுதான் சொல்லுவாங்க. போகப் போகத்தானே தெரியும். அவங்க குணமெல்லாம்...''

''நி ஜ ம ா வே நல்ல கணவன் கிடைச்சா?''

''ஊக். அவன் நல்லவனா கெட்டவனான்னு பழகிப் பார்த்துட்டுக் கல்யாணம் செஞ்சுக்க முடியுமா?''

''வேண்டாம். ஏற்கெனவே பழகினவனை - அவன் வேத்து சாதியா இருந்தாக் கூட - நல்லவனா இருந்தா - அந்த ஒரு தகுதிக்காகவாவது அவனைக் கல்யாணம் செஞ்சுக்கக் கூடாதா மீரா?''

மீரா, 'விருட்'டெனத் த லை யை உயர்த்தி, அவனைப் பார்த்தாள்.



- குடந்தை எல். ராம்பிரபு.



அருள்வாக்கு

காலையில் லோகம் முழுக்கத் தூக்கத்திலிருந்து விடுபட்டு மலர்ச்சி அடைகிறது; சூரியன் பல பல என உதிக்கிறான்; உலக காரியங்கள் எல்லாம் தொடங்குகின்றன. எனவே குளிர்ந்த வைகறைப் பொழுதில் நீருண்ட மேகம் போல் குளிர்ந்த ஜகத் பரிபாலகரான விஷ்ணுவின் நாமங்களை உச்சரிக்க வேண்டும். மாலையில் அவரவரும் வேலை முடித்து வீடு திரும்புகிறார்கள்; மாடுகள் கொட்டிலுக்குத் திரும்புகின்றன. பட்சிகள் கூட கூட்டுக்குத் திரும்பி விடுகின்றன. சூரியனும் மலைவாயில் இறங்குகிறான். இப்படி லோக வியாபாரங்கள் ஒடுங்கத் தொடங்குகிற அந்திப் போதில் நம் ஆட்டங்களையெல்லாம் ஒடுக்கி அமைதி தருகிற ஞான மூர்த்தியான பரமேசுவரனின் நாமாவை உச்சரிக்க வேண்டும்.

அண்டம் பிண்டம் இரண்டும் அடிப்படையில் ஒரே சரக்கானதால் வெளி உலக நடப்புக்கும் நம் அக உணர்வுகளுக்கும் சம்பந்தம் இருக்கிறது. உலகில் அருணோதயத்துக்கு முன்பு பட்சி ஜாலங்கள் விழித்துக் கொண்டு கூவத் தொடங்குகிற வேளையில், 'லோகமெல்லாம் நன்றாக இருக்க வேண்டும்' என்ற எண்ணத்தை மனசில் நன்றாகப் பதிய வைத்துக் கொண்டு, சாட்சாத் ஸ்ரீமந் நாராயணனைத் தியானிப்பது எளிதில் கைவரும். இதே போல் வெளியுலகம் ஒடுங்கித் தன்மயமாகி, இருள் கவிந்து வருகிற அந்தி வேளையில் இந்திரியங்களை ஒடுக்கிச் சாந்தமாக சிவபெருமானின் தியானத்தில் அமிழ்வது சகஜமாகவும் சுலபமாகவும் இருக்கும்.

நம்முடைய மனோபாவத்தைப் பொறுத்து இப்படி இரண்டு விதத்தில் உபாசித்தாலும் இரண்டு மூர்த்திகளும் ஒன்றேதான் என்ற நினைப்பு போகக் கூடாது. காலையில் பஞ்சகச்சம் கட்டிக் கொண்டு சந்தியாவந்தனம் செய்த அதே மனிதர் பகலில் ஸூட் போட்டுக் கொண்டு ஆபீஸுக்குப் போகிறார். வெவ்வேறு காரியங்களுக்காக, வெவ்வேறு வேஷங்களைப் போட்டுக் கொண்டாலும் ஆசாமி ஒருத்தர்தான். ஸ்வாமியும் ஒருத்தர்தான்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

அவனோ, நிழல் கோபுரத்தைப் பார்த்தபடி சொன்னான்.

''முன்னே பின்னே பழகாம நீ கீர்த்தியைக் கல்யாணம் செஞ்சிட்டே. நான் தெய்வானைக் கட்டிட்டதும் அப்படித்தான். நானாவது அவளோட குடும்பம் நடத்தி இருக்கேன். நீ அது கூட இல்லை. முகம் தான் பரிச்சயமே தவிர - மனம் எப்படின்னு வாழ்ந்து பார்த்திருந்தாத்தான் தெரியும்.''

''அதுக்குத்தான் கொடுத்து வைக்கலையே...''

''தெய்வமே தெரியாத்தனமா இந்த மாதிரி ஒரு தப்பு செஞ்சிட்டதா வச்சுப்போம். மறுபடி வாழுறதுக்குக் கடவுளே ஒரு சான்ஸ் கொடுத்தா... நான் உன்னை வற்புறுத்தலை தாயே... உனக்குச் சம்மதமிருந்தாச் சொல்லு...''

மீரா, இளக்காரமாய்ச் சிரித்தாள்.

''ஒரு விதவைக்கு வாழ்வு தர்றேன்னு சொல்றீங்களாக்கும்...''

குமரன், அவளை ஒரு கணம் உற்றுப் பார்த்து விட்டு, முகத்தைத் திருப்பிக் கொண்டு கூறினான்:

''ஏன் அப்படி நினைச்சுக்கறே? தர்றதும், எடுத்துக்கறதும்தான் வாழ்க்கை. புருஷனை இழந்த பொண்ணுக்கு விதவைன்னு பேரு இருக்காப்பல - பெண்டாட்டிய இழந்த கணவனுக்கு ஏன் தமிழிலே எந்தவொரு பேருமில்லே? சரி... நானே சொல்றேன். விதவைன்னு ஒண்ணு உண்டுன்னா - நான் விதவன். ஒரு தாயில்லாக் குழந்தைக்குத் தகப்பன். என்னைக் கல்யாணம் செஞ்சிட்டு, எனக்கும், என் குழந்தைக்கும் ஒரு புது வாழ்வு கொடேன்...''

மீரா மலைத்து உட்கார்ந்து விட்டாள்.

இவளது பதிலுக்காகக் குமரன் மட்டுமில்லை, பெரிய கோவிலின் பிரும்மாண்டமான நந்தி கூட மௌனமாய்க் காத்திருந்தது.

(தொடரும்)


GOKULAM
LOOK! A magazine for us!
STORIES!
COMICS!
Hey! They publish children's articles!
FEATURES! POEMS! PUZZLES!
GOKULAM
Mummy! Please buy us GOKULAM!
Hmm! How much does it cost?
Only Rs. 3!
Only Rs. 3!
GOKULAM
YOUR CHILDREN WILL LOVE GOKULAM. BUY THEM A COPY TODAY!
GOK



◆ பாபுஜியை உரிமையுடன் கண்டித்த சர்தார்.

பாரத ரத்னா:
இரும்பு மனிதருக்கு விருது

சர்தார் வல்லபபாய் பட்டேல் பாபுஜியுடன் கடுமையான கருத்து வேறுபாடுகள் கொண்ட தேசியவாதி. பல உண்ணாவிரத முயற்சிகளின் போது பாபுஜியைத் தடுக்க முயலும் துணிவு அவருக்கு மட்டுமே இருந்தது.

''பாபுஜி! வர வர நீங்கள் அரசாங்கத்துக்கும் சரி மக்களுக்கும் சரி நியாயமின்றி நடந்து கொள்கிறீர்கள். 'பாபுஜி உண்ணாவிரதத்தை இப்போது தான் முடித்துக் கொண்டார்' என்று ஜனங்கள் பேச ஆரம்பிக்கும் போதே நீங்கள் அடுத்த உண்ணாவிரதத்தைத் தொடங்கி விடுகிறீர்கள்....'' என்று சொல்லியிருக்கிறார் சர்தார்.

ஒருமுறை பாபுஜி இடக்கையால் நூல் நூற்கத் தொடங்கினார். ''இது வீண் முயற்சி பாபுஜி! ஒரு வயசுக்கு மேல் இப்படியெல்லாம் புதிய பயிற்சிகளில் ஈடுபடுவது அர்த்தமற்றது... நீங்கள் நூலாக மாற்றும் பஞ்சை விட அதிகமான பருத்தியை வீணடித்துக் கொண்டிருக்கிறீர்கள்,'' என்றார் பட்டேல். மறுநாளே அந்த 'மகன்' சர்கா இயங்காமல் போயிற்று. ''சர்தாரின் சாபம் தான் இப்படியாயிற்று'' என்றார் பாபுஜி. ''இல்லை! சற்று அதற்கு ஓய்வு கொடுங்கள். சரியாகிவிடும்,'' என்றார் பட்டேல்.

சிரிக்கச் சிரிக்கப் பேசும் இந்த நல்ல சிறைத் தோழரை பாபுஜிக்கு மிகவும் பிடிக்கும். நேருவையும், சர்தாரையும் இணைத்து வைப்பதே பாபுஜிக்கு மிக முக்கியமான பணியாக இருந்தது. அவருடைய மதிப்பீட்டின்படி 'நேரு மிகச் சிறந்த சிந்தனையாளர். பட்டேல் மிகச் சிறந்த செயல் வீரர்.'

அந்தக் குரூரமான ஜனவரி முப்பதாம் தேதி மாலையில், கோட்ஸேயின் வெற்றிக்குப் பதினைந்து நிமிடங்களுக்கு முன்னர் நிகழ்ந்த சந்திப்பின் போதுதான், கருத்துவேற்றுமைகளை ஒதுக்கி விட்டு நேருஜியோடு இணைந்து செயல்படுவதாய் பாபுஜியின் முன், மனந்திறந்து உறுதியளித்தார் பட்டேல்.

பாபுஜியின் மரணத்தோடு பட்டேலின் சிரிப்பும் குதூகலப் போக்கும் மறைந்து போயின. அவருடைய பேரக் குழந்தை ஸரிவிருந்து வந்தபோது அதனிடம் கூடச் சிரித்து விளையாட விரும்பாத மன நிலையில் அவர் இருந்தார். மகாதேவதேசாய் ஒரு நிகழ்ச்சியைக் குறிப்பிடுகிறார்: ''நீங்கள் போன பின்னர் நான் வாழ விரும்பவில்லை பாபுஜி. நாம் இருவரும் ஒன்றாகவே மரணமடைய வேண்டும் என்பதற்காகவே நான் பிரார்த்தனை செய்கிறேன்....'' என்று சொன்னவராம் சர்தார்.

பாபுஜியுடன் இருந்த காலத்தில் மகாதேவ தேசாயிடம் சம்ஸ்கிருதம் கற்றுக் கொண்டார் பட்டேல். கீதா சுலோகங்களைத் தம் பேச்சுக்களில் மேற்கோள் காட்டவும் தொடங்கிவிட்டார். ஜாபுஜி சொன்னார்: ''அரபிக் குதிரையின் வேகத்தில் இவர் கற்றுக் கொள்கிறாரே!''

மிகவும் சாதாரணமான குஜராத்தி வேளாண் குடும்பத்தில் நாலாவது பிள்ளையாகப் பிறந்தார், வல்லபபாய். ஏகப்பட்ட இடையூறுகளுக்கிடையே மெட்ரிக் முடித்த போது அவருக்கு இருபத்திரண்டு வயதாகிவிட்டது! புத்தகங்கள், பாடங்கள் என்றாலே வெறுத்த பட்டேல், விளையாட்டுக்களில் மிகவும் ஆர்வம் காட்டினார். கிரிட்ஜ் ஆட்டத்தில் படு சூரர்.

பள்ளியில் படித்துக் கொண்டே அப்பாவுக்கு உதவியாக மாடுகன்றுகளைப் பராமரித்தார், வயல் வேலைகளையும் கவனித்துக் கொண்டார். ஏர் பிடித்து நேராகவும் ஆழமாகவும் உழுவதிலும், துண்டு இடம் விட்டுவிடாமல் சீராக விதைப்பதிலும் வல்லவர் அவர்.

சுதந்திர பாரதத்தின் மிகவும் சிரம சாத்தியமான பணியாக, சுதேசி சமஸ்தானங்களைக் கலைத்து அகண்ட பாரதத்தோடு இணைத்தார் வல்லபபாய். அந்த மகத்தான வெற்றிக்குப் பிறகு தம்முடைய எழுபத்து



''முந்தி மீதி சில்லறை 5 காசு 10 காசு தராத கண்டக்டர்கள் ரூபாய் மதிப்பு குறைஞ்சிட்டுதுன்னு இப்ப மீதி 25 காசு 50 காசுகளைத் தர மாட்டேங்கு றாங்களே! இது நியாயமா சார்?''

மூன்றாவது பிறந்தநாளை ஒட்டி ஃபிராண்டியர் மெயிலில் பம்பாய் வந்தார். ரட்லம் ஜங்ஷனில் ரெயில் நின்றது. பெரும் கூட்டம் ஆரவாரம் செய்து தங்கள் தலைவரைத் தரிசிக்கத் துடித்து நின்றது. சர்தாருக்கு இந்த ஆரவாரங்கள் பிடிக்க வில்லை. தாம் பயணம் செய்த பெட்டியை விட்டு வேண்டா வெறுப்போடு வெளிப் பட்டார். நறுக்கென்று சில வார்த்தைகள் பேசினார்.

''கடுமையான உழைப்பிலும், ஒற்று மை உணர்விலும்தான் வாழ்க்கையின் வெற்றி அடங்கிக் கிடக்கிறது. இப்படி வெறுமனே கூச்சல் போட்டு ஆரவாரம் செய்வதில் இல்லை. நீங்கள் இதுபோன்ற கோஷங்களை மூட்டை கட்டி வைத்து விட்டு ஏதாவது உருப்படியான வேலை களைப் பாருங்கள்.''

பாரிஸ்டர் பட்டம் பெற்று பம்பாயில் மிகப் புகழுடன் தொழில் நடத்திய வல்லப பாய் என்கிற இளைஞருக்கு முப்பத்து மூன்று வயது. ஒரு கொலை வழக்கில் வாதாடிக் கொண்டிருந்தார். குற்றம் சாட் டப்பட்டிருந்தவனைத் தூக்குக் கயிற்றிலி ருந்து காப்பாற்றியாக வேண்டிய பொறுப் புடன் ஆனந்த் நீதி மன்றத்தில் இருந்தார். தந்தி ஒன்று வந்தது. வாங்கிப் படித்துவிட்டு அமைதியாக வாதங்களை முடித்து, குற்றம் சாட்டப்பட்டவருக்கு விடுதலையும் பெற் றுத்தந்தார். அதன் பிறகு தந்திச் செய்தியைச் சொன்னார்: சர்தாரின் அன்புக்குகந்த மனைவி ஜவேரிபாய் மரணமடைந்து விட்ட செய்தி அது!

அதன் பிறகு ஆயுள் முழுவதும் 'ஒற்றை யராக'வே இருந்து தம் மனைவிபால் கொண்ட அன்புக்கு அஞ்சலி செலுத்தினார் அந்த இரும்பு மனிதர்.

சர்தார் சிறையிலிருந்த போது அவரு டைய சகோதரர் வித்தல்பாய் பட்டேல் இறந்து போனார். அவருடைய ஈமச்சடங்கு களைத் தாமே செய்ய வேண்டும் என்று விரும்பி அரசிடம் அனுமதி கேட்டார் பட்டேல். இரண்டு நிபந்தனைகளோடு அவரை வெளியில் விட அரசு இணங்கியது: 'அரசியலைப் பற்றிப் பேசக்கூடாது, எந்த அரசியல் நடவடிக்கையிலும் ஈடுபடக் கூடாது.' நிமிர்வும் சுயமரியாதையுணர்வும் மிகுந்த வல்லபபாய் இந்த நிபந்தனைகளை ஏற்க மறுத்து, விடுதலையாகாமலே இருந்து விட்டார். பெரியப்பாவின் இறுதிச் சடங்குகள் சர்தாரின் மகன் தயாபாய் பட்டேலால் நிறைவேறின.

- ஆதாரம் : கே. எஸ். பஞ்சாபி எழுதிய "The Indomitable Sardar" என்னும் நூல்.

தொகுப்பு : 'யெஸ்'.

ஃபிரிஜ் பரிசு : கூப்பன் நெ. 15


''நேற்று வரை நந்தவனம்'' தொடர் கதையில் ஒவ்வொரு வாரமும் வேண்டுமென்றே ஒரு தவறு செய்து வருகிறோம். இந்த வாரம் என்ன? கவனமாகப் படித்து, அதைக் கண்டுபிடித்து, இந்தக் கூப்பனைப் பூர்த்தி செய்து வைத்துக் கொள்ளவும். இப்படியே ஒவ்வொரு வாரமும் கூப்பன் சேகரிக்கவும். தொடர் முடிகின்ற வாரம் எல்லாக் கூப்பன்களையும் சேர்த்து அனுப்பி வைக்கவும். அத்துடன் கதை பற்றிய 5 - 10 வரி விமர்சனம். மிக அதிகமான தவறுகளைச் சரியாகச் சுட்டிக்காட்டியவருக்கு ஃபிரிஜ் பரிசு. அதிகபட்ச சரியான விடைகளைப் பலர் எழுதியிருந்தால், குலுக்கலில் ஒருவர் தேர்வு. ஆறுதல் பரிசுகள் உண்டு. இந்த இதழில் வேண்டுமென்றே செய்யப்பட்ட.....

தவறு :

திருத்தம் :

டெபாசிட் திரட்டுவதில் ரூ.100கோடி என்னும் வெற்றிச் சாதனை படைத்தது சக்தி பைனான்ஸ்.

அதிகப்படியான புரதச்சத்துள்ள மாவு மற்றும் எண்ணெய் தயாரிப்பில் முன்னோடி சக்தி சோயாஸ்.



ஆறே ஆண்டுகளில் ரூ. 100 கோடி - ஆம் டெபாசிட்டர் இவ்வரிய சாதனையின் முன்னோடி நிலையான நம்பிக்கையின் பிரதிபலிப்பு - இன்று நித்தம் நித்தம் பெரும் வளர்ப்பு

சிறந்த சேவைக்கு சக்தி பரிபூரண பாதுகாப்புக்கு சக்தி பாரெங்கும் துவங்கிவிட்டோம் கிளைகள் பயன்பெற்று மகிழ்ந்திடுவீர் அருகில்.

ஆறு மாநிலங்களில் 38 கிளைகள் - அதில் ஆங்காங்கே பாதுகாப்புப் பெட்டகங்கள் அத்தனைக்கும் மேலாக முகவர்கள் அதிவிரைந்த சேவைக்கு நாங்கள்

ரூ. 400 கோடி மதிப்புள்ள சக்தி குழுவின் ஓர் அங்கம் நாணயத்தின் மறுபெயர்தான் இவ்வங்கம்.

பலவகையில் பரந்து விரிந்தது சக்திகுழு நிதி மற்றும் போக்குவரத்துத் துறையோடு நில்லாமல் விவசாய சார்பு தொழிலுக்கும் சக்திதிட்ட ரூ.36 கோடி பெருமதிப்புள்ள சக்தி சோயா நிறுவனத்தைத் துவங்கியுள்ளது.

இது தமிழ்நாடு நிறுவனமான தமிழ்நாடு தொழில்வளர்ச்சிக் கழகத்துடன் இணைந்து செயல்படுகிறது. இந்தத் துறையிலும் முன்னோடியாக விளங்கி மற்றுமொரு சாதனை புரிகிறது சக்தி சோயாஸ்.

அதிகப் புரதச் சத்துடன் கொழுப்பு சத்து நீக்கப்பட்ட "விகர்" மாவு இருமுறை சுத்திகரிக்கப்பட்ட "திரிசூல்" எண்ணெய் இவைகளை வழங்குவது சக்தி சோயாஸ்

மற்ற மேலைநாடுகளைப்போல் பாரதமும் குறைந்த கொழுப்புச் சத்துடன், ஊட்டச்சத்து மிகுந்த எண்ணெய் மற்றும் மாவு உட்கொள்ள உயரிய முயற்சிகளை மேற்கொண்டுள்ளது சக்தி சோயாஸ்.

தோளோடு தோள் சேர்த்து நாம் காணும் வெற்றி
தொடர்ந்து நிலைத்திடவே வேண்டி நிற்போம் சக்தி.

சக்தி பைனான்ஸ் லிமிடெட்

ரூ. 400 கோடி மதிப்புள்ள ''சக்தி'' குழுவின் ஓர் அங்கம்

தலைவர் டாக்டர் நா. மகாலிங்கம்
பதிவு அலுவலகம்: 475, டாக்டர் நஞ்சப்பா ரோடு கோயம்புத்தூர் - 641 018.

ஆளும் கட்சிக்காரங்க



" 'ரத்து செய், ரத்து செய் - கடன்களையெல்லாம் ரத்து செய்'னு கோஷம் போட்டுக்கிட்டுப் போறாங்களே, அவங்க எந்தக் கட்சிக்காரங்க?"

"ஆளும் கட்சிக்காரங்கதான்! உலக வங்கியும் சர்வதேச நிதிநிறுவனமும் கொடுத்திருக்கிற கடன்களை ரத்து செய்யச் சொல்லிப் போராட்டம் நடத்தறாங்க!"

- அ. மணிவாசகன், சேலம் - 3.



"புது மனைவியோட முதன் முதலா சினிமாவுக்குப் போனியே, என்ன படம்?"

"ஆயுள் கைதி!"

- சீனி. ரவீந்திரன், விருத்தாசலம்.

OOOOO

OOOOO

O ஓர் அரசு ஊழியரும் ஒரு வியாபாரியும் காரசாரமாய்ப் பேசிக் கொண்டு வந்தார்கள். 'அரசு உத்யோகத்தில் சுதந்திரமே கிடையாது' என்று சொல்ல, அடுத்தவர், 'எங்களுக்கு வாழ்க்கையில் நிரந்தர வருமானம் கிடையாதே' என்று கூற, விவாதம் முற்றி, அரசு ஊழியர், உச்ச ஸ்தாயியில் சப்தம் போட்டுப் பேசினார். உடனே வியாபாரி, "நீங்க சப்தம் போட்டுப் பேசலாம்! திடீர்னு நெஞ்சு வலி வந்து உயிரு போனா கூட குடும்பத்துக்கு அறுபதாயிரம்! நான் போயிட்டா என் குடும்பம் தெருவுலல்லவா நிக்கணும்; நான் அமைதியாத்தான் பேசணும்" என்றவுடன் எல்லோரும் சிரித்து விட்டோம்!

- மு. இசக்கி, சிவசைலம்.



OOOOO



O பேருந்தில் ஏறியவரிடம் கண்டக்டர் டிக்கெட் வாங்கச் சொன்னார். அதற்கு அவர் "பின்னால் ஒருவர் மீசை வைத்திருக்கிறார், அவர் வாங்குவார்" என்று கூற அதற்கு கண்டக்டர், "பின்னால யாரும் மீசை வைச்சிக்கிறதில்ல, டிக்கெட் எடுங்க சார்" என்றவுடன் பஸ்ஸில் ஒரே கலகல...

- கு. சாமிதாசன், தியாகவல்லி.

OOOOO

ஏன் ஊர்வலம் போறாங்க?



''என்னங்க பக்கத்துத் தெருவுல கல்யாணத்துக்குப் போய்ட்டு இவ்வளவு லேட்டா வர்றீங்க?''

''நான் என்ன செய்யட்டும், செருப்பு 'செலக்ட்' பண்ண லேட்டாயிடுச்சு!''

- கே. ஆறுமுகம், பூவரசக்குடி.

OOOOO




OOOOO

O மாவட்டக் கல்வி அதிகாரி ஆண்டுத் தணிக்கைக்காகப் பள்ளிக்கு வந்திருந்தார்.

ஒன்பதாம் வகுப்பிற்குள் சென்றவர் ''இப்போது என்ன பாடம் நடக்கிறது?'' என்று கேட்டார். ''நீதிபோதனை'' என்று கூறப்பட்டது. உடனே அதிகாரி ஒரு மாணவனைப் பார்த்து, ''ஹரிச்சந்திரன் யார்?'' என்று கேட்டார். அவன் சிறிது விழித்து விட்டு, ''எனக்குத் தெரியவில்லை ஐயா'' என்றான். உடனே அதிகாரி, ''நீதானப்பா ஹரிச்சந்திரன்'' என்றாரே பார்க்கலாம். ஓஹோஹோ சிரிப்பு கூரையை எட்டியது.

- ஏ. பி. துரைராஜ், அழுப்பட்டி..



O கரும்பலகையில் ஒரு குறும்புக்கார மாணவன், 'ஐ லவ் யூ' என்று எழுதி வைத்தான். மணி அடித்ததும் வகுப்பறையில் நுழைந்த பேராசிரியர், ''யாரப்பா அது, பிளாக் போர்ட்டைக் காதலிப்பது?'' என்று கேட்டவுடன் வகுப்பறையே சிரிப்பில் கிடுகிடுத்தது!

- ச. சாதிக் அஹமத், செண்டத்தூர்.

OOOOO

OOOOO

''மந்திரி! அரிசி கையிருப்பு எவ்வளவு உள்ளது?''

''பதினேழு மாதத்திற்கு, அரசே!''

''பதப்படுத்தப்பட்ட இறைச்சி எவ்வளவு உள்ளது?''

''12 மாதத்திற்கு.''

''பால் பொருட்கள் எவ்வளவு உள்ளன?''

''12 மாதத்திற்கு!''

''பிறகு ஏன் உணவுப் பஞ்சம் என்று கூறினீர்கள்?''

''இது நம் இருவருக்கு மட்டும்தான் போதுமானது, மன்னா!''

க. சத்தியசரவணன், கீழப்புளவாசல்.



இதுவா விசுவாசம்?

O "பச்சை குத்திக் கொண்டால்தான் கட்சிக்கு விசுவாசமாக இருப்பார்கள் என்ற கூற்றை என்னால் ஒப்புக் கொள்ள முடியவில்லை; அது ஒரு மூட நம்பிக்கை" என்று கூறும் இந்திரகுமாரி, கிழவன் முதல் குமரன் வரை (அவர் உட்பட) ஜெயலலிதாவின் காலடியில் விழுந்து சரணடைந்து தங்கள் விசுவாசத்தைப் புதுப்பித்துக் கொண்டதை, பகுத்தறிவுச் செயல் என்கிறாரா? எம். ஜி. ஆரின் எச்சரிக்கையையும் மீறி ஜெயலலிதாவுடன் விசுவாசமாகத் தொடர்பு வைத்திருந்ததாகவும் கூறுகிறார். இந்திரகுமாரி கூறும் விசுவாசத்துக்குப் பொருள் விளங்கவில்லை.

தஞ்சை, வளர்மதி ஆசைத்தம்பி.

O வட்டமேஜையில் கமலா மாரியப்பன் நரிக் கதைகள் நம்பிக்கையின்மையைக் கருவாய்க் கொண்டதாய்க் குறை கூறியுள்ளார். அது முற்றிலும் தவறு. போலிப் புகழ்ச்சிக்கு மயங்கி விடக் கூடாது என்ற புத்தி மதியை "நரியிடம் வடை இழந்த காக்கை" கதை வழங்குகிறது.

"சீசீ இந்தப்பழம் புளிக்கும்" கதையும் முயற்சியற்றவர்கள் தாங்கள் தோல்வியடையும் பொழுது நொண்டிச்சாக்கைச் சொல்லிக் காலங் கழிப்பார்கள்; இலட்சியத்தையே குறைத்துப் பேசுவார்கள் என்பதை உணர்த்துகிறது.

முசிறி, முக.தி.க. பாலசுப்பிரமணியன்.

O 'முஸ்லீம் சமுதாயத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு முதன் முதலாகச் சட்டமன்றத்திற்கு வந்திருக்கும் பெண்மணி இவர்தான்' என்று அரவக்குறிச்சி தொகுதி அ.தி.மு.க. உறுப்பினர் மரியம்-உல்-ஆசியா வைக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். சேப்பாக்கம் தொகுதியிலிருந்து காங்கிரஸ் கட்சியின் சார்பாகச் சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் ஜீனத் ஷெரிபுதீனும் முஸ்லீம் சமுதாயத்தைச் சேர்ந்தவர் என்பதைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

விருதுநகர், வே. முத்துக்கிருஷ்ணன்.

O சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஆசிரியர் பக்கத்தில் சொல்லியிருப்பதை விட எதைச் சொல்ல முடியும்?! ஆனால் அனைத்தும் செவிடன் காதில் ஊதிய சங்காக இல்லாமலிருந்தால் சரி.

தஞ்சாவூர், கே. காமாட்சி.

O கல்கி, 14.7.91 இதழ் ஆசிரியர் பக்கத்தில் யானையிடம் நாம் காண்கிற கம்பீரம், பெருந்தன்மை, பொறுமை முதலியவற்றை வெளிப்படுத்தாமல் பண்ருட்டியார் நடந்து கொண்டதாகக் குறிப்பிட்டதைப் பார்த்து மிகவும் வருத்தம் அடைந்தோம். தன்மானம் இழந்து காலில் விழாமல், 25 ஆண்டுகால சட்டசபை மரபைப் பின்பற்றி, தம்மைத் தாக்கினாலும் திருப்பித் தாக்காமல், கம்பீரம், பெருந்தன்மை மற்றும் பொறுமையை வெளிப்படுத்திய பண்ருட்டியாரின் நற்செயலைக் கல்கி காண்பதற்குத் தவறியது ஏனோ?....

கீழ்வல்லம், எஸ். வேலு.

O உயரதிகாரிகள் என்றால் மிரட்டல், மிடுக்கு, வானளாவிய அதிகாரம், சிடுமூஞ்சித்தனம்.... இவை மட்டுமே நினைவுக்கு வருகையில் அவர்களின் அன்றாடத் தியாகங்களையும் சுட்டியது "எக்ஸிக்யூடிவ் நாற்காலி".

மகிழஞ்சேரி, கே. ரவிச்சந்திரன்.

O வாக்கிங் போவதன் அனுகூலங்களைப் பற்றி டாக்டர் சந்திரசேகர சாண்டில்யாவின் பேட்டி பிரசுரமான பக்கத்தில் சிறுவனின் உதவியோடு வாக்கிங் போகும் காந்தி ஓவியம் ஒரு எஃபெக்டிவ் இன்ஜெக்ஷன்!

சென்னை - 14, ஐயாறு எஸ். வாசுதேவன்.

O இலங்கைத் தீவிரவாதிகள் எப்படி வளர்ந்தனர்? என்ற கட்டுரைக்குப் பாராட்டுக்கள்! விடுதலைப் புலிகளின் உள் நோக்கம் என்ன? என்று தெரிந்து கொள்ளாமல் அவர்கள் மீது ஓர் இனம் புரியாத பற்று ஏற்படுத்திக் கொண்டு அவர்களின் தவறைக் கூட நியாயம் என்று வாதாடிக் கொண்டிருந்த என் போன்ற இளைஞர்களின் மனத்தில், புலிகளின் சுயரூபத்தைப் படம் பிடித்துக் காட்டி, சிந்திக்க வைத்தது.

காரைக்கால் - 5, மாங்கனி ஆர்.எஸ். இராஜ்.

O கிரைம் சப்ஜெக்ட் கதை 'கல்கி'யில் வெளியாகி வெகு நாட்கள் ஆகி விட்டதே என்று மிச்சமிருந்த எங்களின் ஒரு ஏக்கத்தையும் 'மிச்சமிருப்பது ஒரு தோட்டா' சிறுகதை போக்கி விட்டது.

கோவை சிவானந்தபுரம், கே.ஆர். விஜயா.

O ரமாமணி சுந்தர் அவர்கள் எழுதிய 'தில்லித் தமிழ்' மிகவும் சுவையாக இருந்தது. நானும் முப்பது வருடங்கள் தில்லி வாசியாக இருந்து வந்ததினால் இன்னும் 'தில்லித் தமிழ்' பழக்கம் விடவில்லை. நல்லது, கெட்டது எல்லாவற்றிற்கும் 'அச்சா' வேறு வந்து விடுகிறது!

சென்னை - 33, சியாமளா ராகவன்.

O 7.7.91 கல்கி இதழில் தராசு பதில் பகுதியில், என்னைப் பற்றி உண்மைக்குப் புறம்பான செய்தி, கேள்வியாக உருவாகியுள்ளது.

நண்பர் என்னைச் சந்தித்தபோது நிறைய எழுத்தாளர்களை இதற்குமுன் தாம் சந்தித்ததாகவும் - ஆனால் ஒருவர் கூட ஆத்மார்த்தமாகப் பேசாமல் எழுத்திற்கும் அவர்களுக்கும் சம்பந்தமே இல்லாமல் இருந்ததாகவும் சொன்னார். அதற்குப் பதில் கூறும் முகமாகத்தான் நான் அதுபோன்ற முகமூடி எழுத்தாளர்கள் இருக்கின்ற பட்சத்தில், அவர்களைச் சந்திப்பதை விடுத்து வெறும் எழுத்துக்களிலேயே திருப்தியடையுங்கள் என்று கூறியிருந்தேனே தவிர, ஒட்டுமொத்தமாக 'எழுத்துக்களை தேடியுங்கள் - எழுத்தாளர்களை வேண்டாம்' என்றல்ல.

சென்னை - 5, மேத்தாதாசன்.



யெஸ்..... ஜயா ஜெகன் ஸ்பீக்கிங்

முன்பெல்லாம் மேனேஜரிடம் ஃபோன்ல பேசறதுன்னு ரொம்ப பயமா இருக்கும். அவர் இங்கிலிஷ்ல கேக்கற கேள்விக்கெல்லாம் பதில் சொல்லத் தெரியாம முழிச்சுண்டு நான் பட்ட கஷ்டத்தை சொல்லி மாளாது.

வேலையை ராஜினாமா பண்ணிட லாமான்னு நான் யோசிச்சுண்டு இருந்தப்போ விவேகானந்தா கல்வி நிலையத்தின் விளம்பரத்தை பார்த்தேன். தபால் மூலமா படிச்சா அது நேர சொல்லித்தர மாதிரி இருக்குமான்னு சந்தேகமா இருந்தது.

தற்செயலா ஒரு நாள் என்னுடைய நாத்தனார் பொண்ணு லலிதாகிட்ட இதுபத்தி பேசிண்டிருந்தப்போ அவ விவேகானந்தா கல்வி நிலையத்தில் தபால் மூலம் இங்கிலீஷ் பேச கத்துக்கற விஷயம் தெரிஞ்சுது. பாடம் எல்லாம் நேரிடையா சொல்லிக் குடுக்கற மாதிரி இருக்கு, ரொம்ப நன்னா புரியறதுன்னு அவ சொன்னா. அவ குடுத்த தைரியத்துல நான் தபால் முறை பயிற்சியில் சேர்ந்தேன்.

மொதல்ல மூணு மாசம் இங்கிலீஷ் கிராமர் கத்துண்டேன். அதுக்கு அப்புறம் மூணு மாசம் "ஸ்போக்கன் இங்கிலீஷ்" கத்துண்டேன்.

உண்மையை சொல்லப்போனா முன்னால மேனேஜர்கிட்ட பேசணும்னா பயந்துண்டு இருந்த நானா இப்படி இங்கிலீஷ்ல சரளமா பேசறேன்னு எனக்கே ஆச்சர்யமா இருக்கு. எங்கிட்ட ஏற்பட்டுருக்கற மாற்றத்தை என்னால நன்னா புரிஞ்சுக்க முடியறது.

கான்வென்ட்ல படிச்சுண்டு இருக்கற என்னோட குழந்தைக்கு பாடஞ் சொல்லிக் கொடுக்கறத்துக்கு நான் கத்துண்ட இங்கிலீஷ் கிராமர் ரொம்ப உதவியா இருக்கு. ஹஸ்பண்ட் கூட எங்கேயாவது வெளில, வாசல்ல போனா சந்திக்கற வாளோட இங்கிலீஷ்ல பயப்படாம பேச முடியறது.

மொத்தத்துல சொல்லப்போனா இங்கிலீஷ்ல பேச முடியலையேன்னு கவலைப்படற என்னைப் போல எத்தனையோ பேர்களுக்கு நல்ல முறைல பயிற்சியளிக்கிறது விவேகானந்தா கல்வி நிலையம்.

ஆங்கிலத்தில் பேச விரும்பும் அனைவரும் இப்பயிற்சியில் சேர்ந்து பயன் பெறலாம். உடனே தொடர்பு கொண்டு நீங்களும் பயன் பெறுங்கள்.

விவேகானந்தா கல்வி நிலையம்
தபால் பெட்டி எண்: 4986
9, நடேசன் தெரு,
தி.நகர், சென்னை-600 017.

Naga

நீங்கள் கேட்டவை - தராசு

O எஸ்.நாரம்புநாதன், கரண்டை.

? 'காவிரி நீர் பிரச்னையில் தி. மு. க. - எம்.பிக்களுக்கு நல்ல உள்ளம் இல்லாமல் போய் விட்டதே' என்று முதல்வர் ஜெயலலிதா வருத்தப்பட்டுள்ளாரே?

! 'தங்களுக்குப் போதிய அளவு அவகாசம் அளிக்கப்படாமல் கடைசி நிமிஷத்தில் தகவல் தரப்பட்டது என்ற தி. மு. க. கூற்று அவ்வளவு நியாயமாகத் தோன்றவில்லை. அது ஒருபுறம் என்றாலும், தி. மு. க. பதவியில் இருந்த போது மத்திய அரசுக்கு மகஜர் அளிக்கச் சென்ற தி. மு. க. குழுவில் அ. தி. மு. க. எம்.பிக்கள் யாரும் கலந்து கொள்ளவில்லை என்பதை ஜெ நினைத்துப் பார்த்தால், இப்போது தி. மு. க. வைக் குறைகூற மாட்டார்.

O மஞ்சுதேவன், கல்கத்தா.

? தென் ஆப்பிரிக்கா திரும்பவும் ஒலிம்பிக்ஸ் பந்தயங்களில் கலந்து கொள்ளத் தகுதி பெற்றது பற்றி?

! நிறவெறிச் சட்டத்தில், சமீபத்தில் டி-க்ளார்க் செய்துள்ள சில மாற்றங்கள் இதற்கு வழிவகுத்துள்ளன. தென் ஆப்பிரிக்காவை ஒலிம்பிக்ஸுக்கு வரவேற்பதுடன், இதுவே மேலும் பல முன்னேற்றகரமான சட்ட மாறுதல்களுக்கு முதல்படியாக விளங்க வாழ்த்துவோம்.

O பி. நடராஜன், அன்னூர்.


? சட்டசபையில் நடந்த ஒரு ருசிகர சம்பவம்?

! எழுந்து நின்ற தம்மைச் சபாநாயகர் கண்டுகொள்ளவே இல்லை என்பதைப் பார்க்க, 'நான் என்ன அநாதை ஆனந்தனா?'

சோனியா அமேதியில்


◆ ஆய்வு செய்கிறார்


◆ சிரிக்கச் செய்கிறார்


◆ நெஞ்சுருக வைக்கிறார்


◆ அமேதியில் நிற்கிறார்?

என்று கேட்டுச் சபையையே சிரிப்பில் கிடுகிடுக்க வைத்தவர் தாமரைக் கனி. இதே நகைச்சுவை உணர்வை அவர் எப்போதுமே பின்பற்றினால் நன்றாயிருக்கும். ஓங்கித் தட்டி வன்முறையல்லவா ஓங்கச் செய்து விட்டார்!

O சிதே. கருணாநிதி, மருதூர்.

? எழுத்தாளர்கள் ஆர். கே. நாராயண், தகழி - ஒப்பிடுக.

! முன்னவர், அன்றாட வாழ்க்கையைச் சரளமாக, மெலிதான நகைச்சுவையோடு சித்திரிப்பவர். பின்னவர், அதே அன்றாட வாழ்க்கையின் அவலங்களை அப்பட்டமாக வழங்கி, நெஞ்சுருகச் செய்பவர்.

O கே. என். பாலகிருஷ்ணன், கும்பகோணம்.

? ஆலய அறங்காவலர்களாகக் கட்சிச் சார்பில்லாதவர்களை நியமித்தால் என்ன?

! அப்படிப்பட்டவர்கள் அத்தனை ஆலயங்களுக்கும் கிடைப்பது எளிதல்ல. அதைவிட முக்கியம், கடவுள் சார்புள்ளவர்களாகக் கண்டுபிடித்து நியமிப்பதே! எந்தக் காரியமும் செவ்வனே நடக்க அடிப்படைத் தேவை பயபக்தியே.

O திவேதிதா, திருச்சி.

? பரிசுக் கேள்விக்கான பரிசுத் தொகையை உயர்த்தக் கூடாதா?

! பஞ்சப்படியா கொடுக்கிறோம், விலைவாசிக்கேற்ப உயர்த்திக் கொண்டே போக? நல்ல பதிலை வரவழைத்த ஒரு சிறந்த கேள்வி என்பதற்கான அந்தப் பாராட்டுத்தான் முக்கியமே தவிர, பரிசுத் தொகையல்ல. என்றாலும் இவ்வளவு தூரம் நீங்கள் வற்புறுத்திக் கேட்பதால் பொன் விழா ஆண்டிலிருந்து ரூ. 25 ஆக உயர்த்தி விடத் தீர்மானம். சரிதானே!

O எம். குணசேகரன், வேலாயுதம்பாளையம் ★

? சோனியாவை அமேதியில் போட்டியிட வைக்கும் முயற்சியில் காங்கிரஸ் கட்சியினர் வெற்றி பெறுவார்களா?

! அவர்கள் வெற்றி பெற்றால், இந்திய அரசியலில் தாம் புகுவதில்லை என்று சோனியா எடுத்த ஒரு சரியான முடிவு தோல்வி கண்டதாகும். அமேதியில் அவர் வெற்றி பெறுவது எளிது; ஆனால் தமது நிலையிலிருந்து வழுவியவராவார்.

O வேதபுருஷோத்தமன், செருவாமணி.

? நடிகை லட்சுமி சினிமாத் துறையில் பி.எச்.டி. ஆராய்ச்சி செய்கிறாராமே?

! நிறைய நேரம் இருக்கிறது போலும்! செய்யட்டும். அவர் எடுத்துக் கொள்ளும் தலைப்பு சராசரி சினிமா போல் அல்லாது, சமுதாயத்துக்குப் பயன்தரக் கூடியதாக அமையட்டும்!

O இராஜ சண்முகாநந்தம், செம்பராய நல்லூர்.

? கேப்ரியாட்டியிடம், மார்ட்டினா நவ்ரதிலோவா தோற்றுப் போய் விட்டாரே?

! இளமைக்கு வாய்ப்புக் கிடைக்க வேண்டும்தான், அந்த அளவில் மகிழ்ச்சிதான் என்றாலும் ஒன்பது முறை வென்று சாதனை புரிந்த மார்ட்டினா தேய்பிறை காணத் தொடங்குகிறாரோ என்ற எண்ணம் வருத்தத்தையும் அளிக்கத்தான் செய்கிறது!

O ப. இராம் முருகன், சிவகங்கை.

? திருநாவுக்கரசு சட்டசபையிலிருந்து காவலர்களால் அடிக்கடி வெளியேற்றப்படுவது பற்றி...?

! அவை நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படுமாறு அவர் நடந்து கொள்வது தவறு தான். அதே சமயம் சட்டசபையில் எதை வேணுமானாலும் பேசலாம், வழக்குத் தொடர முடியாது என்ற பாதுகாப்பைப் பயன்படுத்திக் கொண்டு பேசுவோருக்குப் பதில் சொல்ல, அவ்வாறு தாக்குதலுக்கு உள்ளான உறுப்பினருக்குப் போதிய அளவு வாய்ப்புத் தரப்படாமல் இருப்பதும் சரியல்ல.

O எல். மாறன், மேல்பட்டி.

? பலமே பலவீனமாவது எப்போது?

! சல்மான் ரஷ்டி, தமது சைத்தானின் கவிதைகளை எழுதிய போது அதைத் தமது பலமாகத்தான் கருதியிருப்பார், நிச்சயம். ஆனால் இன்றும் பாதுகாப்புக்காக அவர் தமது மனைவியைப் பிரிந்து தலைமறைவாகவே வாழ்ந்து வருகிறார். இது, அவருடைய பலமே பலவீனமான கதைதான். அவர் நூலை ஜப்பானில் மொழிபெயர்த்த ஜப்பானியக் கவிஞர் கொலை செய்யப்பட்டிருக்கிறார். இதனை, முஸ்லீம் தீவிரவாதிகள் தங்கள் பலம் எனக் கருதலாம். பலவீனம் என்று பிற சமயத்தவர் எண்ணுவதற்கும் இடமுண்டு.

O ஆர். குமார், புதுச்சேரி.

? ராஜீவ் காந்தி படுகொலைக்கு நாங்கள்தான் காரணம் என்று புலிகள் இமரென்று ஒப்புக் கொள்ளக் காரணம்?

! அந்த முழுப் பூசணிக்காய் விவகாரத்தை இனியும் சோற்றில் மறைக்க முடியாது என்ற நிலை தோன்றி விட்டது ஒரு காரணம். 'பாருங்கள், பிரதமரையே கொன்றோம்; பம்பன் பாலத்தைக் கூடத் தகர்ப்போம்! ஜாக்கிரதை!' என்று மிரட்டுவது இரண்டாவது நோக்கம்.


போட்டியிடுவாரா?



✱ தலைமறைவானார்



✱ வருத்தப்படுகிறார்!



✱ வாயைக் கட்டினார்!



✱ தோற்றுப் போனார்

✱ ரூ. 20 பரிசு பெறுபவர் :
எம். குணசேகரன்,
பண்ணை ரைஸ்மில் தெரு,
வேலாயுதம்பாளையம் - 639 117.

வெள்ளை மரம்



'விஸ்வநாதன்...'

பெயர்ப் பலகையைப் பார்த்து முனகிக் கொண்டே காலிங் பெல்லின் ஸ்விட்ச்சில் கை வைத்து அமுத்தினான்.

சிறிது நேரக் காத்திருத்தலுக்குப் பின் இளம் வயதில் ஒரு பெண் கதவு திறந்தாள்.

''என்ன...?''

விஸ்வநாதன். வயதான பெரியவரா, இளமையான வாலிபனா ஊகிக்க முடியா மல் ஒரு கணம் யோசனையாய்...

''சாரு... மிஸ்டர் விஸ்வநாதன்...''

''எங்க மாமாதான், கும்பகோணம் போயிருக்காரு.''

''அவருகிட்டே கொஞ்சம் பேசணும், எப்ப வருவாரு?''

''கல்யாணம் ஒண்ணு... சாயந்திரம் வரதாச் சொல்லிட்டுப் போயிருக்காரு. என்ன விஷயம் சொல்லுங்க, நான் சொல் விடறேன்.''

''அப்படி ஒண்ணும் முக்கியமா... சாயந்திரம் வரேன், கட்டாயம் சாயந்திரம் வருவாருல்ல?''

''அதான்... வரேன்னு சொன்னாங்க. கட்டாயமா வருவாரான்னு... எனக்குத் தெரியாது.. ஏன் நிக்கறீங்க உட்காருங்க...''

நீளமாய்க் கிடந்த பெஞ்சில் உட்கார்ந்தான். பேச வந்த விஷயம் தவிர எதுவும் பேசத் தோணாத நிலை. உட்கார்ந்து வேறு ஆகி விட்டது. சுவரிலிருந்த காந்தி போட்டோ, பழங்காலத்து நாற்காலி, டேபிள் இவற்றையெல்லாம் சின்ன அவகாச நேரத்திற்குள் கண்கள் சுழற்றிப் பார்த்து லேசாய் உடம்பு நெளித்தான்.

''உங்க கொல்லையை ஒட்டி டி. என். சி. எஸ். சி. கொடௌன் கட்டறாங்கல்ல...''

''ஆமாம்... ஏதோ தூண் தூணா எழுப்பியிருக்காங்க...''

''அதோட ஒரு பக்கச் சுவரு உங்க கொல்லையிலிருந்து அஞ்சடி தள்ளி வருது. இப்ப கருங்கல்லுல பேஸ்மெண்ட் வரை கட்டியாச்சு. அடுத்து ரேட் கார்டு, அதுக்கப்புறம் பிரிக் வொர்க் ஆரம்பமாயிடும்.

திருவையாறு மகேந்திரவர்மன்

பிரிக் வொர்க்கு... அதான்... செங்கல் வேலை ஆரம்பிச்சாச்சுன்னா அதுக்கு இடைஞ்சலா உங்க தென்னை மரம் இருக்கு. கட்டிடம் மேல போயிடுச்சின்னா அதுக்கப்புறம் ரூஃப் டெரஸ், ஆஸ்பெஸ்டாஸ் சீட் போடணும். அதனால இடைஞ்சலா இருக்கற அந்த தென்னை மரத்தை வெட்டணும். இதை மிஸ்டர் விஸ்வநாதன் கிட்ட ஏற்கெனவே டிபார்ட்மெண்ட் மூலமாவும், காண்ட்ராக்டர் மூலமாவும் தெரிவிச்சிருக்காங்க. அதுக்கு அவர் வெட்ட முடியாதுன்னு மறுப்பு சொல்லியிருக்கார். நான் அங்க இப்ப சைட் என்ஜினியரா வொர்க் பண்றேன். வேற வழி இல்லை அந்த மரத்தை வெட்டுறதைத் தவிர.''

இதுவரை அவனைப் பார்த்த பார்வைப் பரிமாறல்கள் அவளிடம் இல்லை. கண்களில் வெறுப்பு படர்ந்திருக்க, பேசாமல் நின்றிருந்தாள். சூழ்நிலை கருதி அவன் தரை பார்த்தான். திடீரென்று உள்ளே சென்றாள். திரும்பி வந்தவளின் கையில் பேப்பர் இருந்தது. விரைவாக அவனிடம் நீட்டினாள்.

'என்ன?' என்ற பார்வை அவனிடம்.

''நீங்க என்ன சொன்னீங்களோ எழுதிக் கொடுத்துட்டுப் போங்க!'' வார்த்தையில் உஷ்ணம்.

'ஏன்? நான் சொன்னதைச் சொல்ல வேண்டியதுதானே...' அவனும் கேட்காமல் எழுதத் தொடங்கினான்.

ரேட் கார்ட் மெஷர்மெண்ட் எடுத்துக் கொண்டிருந்தவன் 'சார்' என்ற அழைப்பால் திரும்பினான். ஒரு சிறுவன்.

''சார், உங்களை அந்தக் கொல்லையிலிருந்து கூப்பிடுறாங்க.''

நடந்தான்.

கருங்கல் சுவர். இரண்டடி தள்ளி கையில் பேப்பருடன் விஸ்வநாதன்.

'விஸ்வநாதர்.'

வயது அவனுக்குப் புரிந்தது.

முகம் அத்துமீறிய கோபத்துடன்...

அவனாக எதுவும் பேசவில்லை.

''என்னய்யா! ஆளு இல்லாத வீட்டுல வந்து என் வீட்டுப் பொண்ணை மிரட்டிட்டுப் போயிருக்கே... உன்னால முடியுமாய்யா மரத்தை வெட்ட...? நான் நினைச்சேன்னா எது வேணாலும் பண்ணுவேன்... இப்படி மொட்டைக் கடுதாசி எழுதிக் கொடுத்துட்டுப் போனா என்னய்யா அர்த்தம்? கையெழுத்துப் போடறதில்லே? இதை வெச்சி உன்னை என்னால போலீசுல புகார் கொடுக்க முடியும் தெரிஞ்சுக்கோ... புகார் கொடுத்து உள்ள தள்ள முடியும்...''

''என்ன மிரட்டலா? முடிஞ்சதைப் பாருங்க!''

''முடியும்! என்னால செய்ய முடியும்.... இப்பவே போலீஸ் ஸ்டேஷன் போறேன், இந்த மொட்டைக் கடுதாசியைக் காண்பிக்கறேன். நான் யாருன்னு நினைச்சே! டிஃபென்ஸ்ல வேலை பார்த்தவன்... ரிடையர்ட் மேன்..''

''எது மொட்டைக் கடுதாசி? ஆரம்பத்துல 'சூப்பர் பில்டர்ஸ்' அப்படின்னு போட்டுத்தான் எழுதியிருக்கேன்.''

''அது யாரு வேணாலும் எதை வேணாலும் போடலாம் தெரிஞ்சுக்கோ. எழுதுன நீ கையெழுத்துதானே போடணும்?''

''இது ஒரு பெரிய பிரச்னை இல்லைன்னு விஷயத்தை மட்டும் எழுதுனேன்.''

''எது பெரிய பிரச்னை இல்லை? 'நீங்க மரத்தை வெட்டாட்டி நாங்க மரத்தை வெட்டி வைத்துக் கொள்வோம்' இப்படித் தான் எழுதறதா?''

''அப்பத்தான் இந்த விஷயத்துக்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்க முடியும்னு எழுதுனேன்...''

''நான் நெனைச்சேன்னா எதுவும் செய்ய முடியும். உன்னால முடிஞ்சா வெட்டிப் பாருய்யா.. இந்த ஒரு தென்னை மரத்துக்காக ஃபாரஸ்ட் ஆஃபீஸ் வரை போறதுக்கு எனக்கு தில்லு இருக்கு!''

''எங்க வேணாலும் போங்க... ஆனா சீக்கிரம் போங்க. இல்லாட்டி நாங்க வெட்டிடுவோம்.''

''என்னய்யா விதண்டாவாதமா பேசறியா?''

''எது விதண்டாவாதம்? பதிலுக்கு நான் சொல்லட்டுமா... உங்க கொல்லை கடைசியிலிருந்து அ ஞ் ச டி தள்ளி கொடெளன் சுவரு வருது... ஆக்சுவலா உங்க மரம் உங்க கொல்லைக்குள்ளேயே வளர்ந்திருக்கணும்... அஞ்சடி த ள் ளி வளைஞ்சி ஏன் சுவருக்கு உள்ள வரணும்? இப்படியெல்லாம் கேக்க முடியும்.''

''எது எப்படியோய்யா. வெட்ட முடியாது! வெட்டவும் வுட மாட்டேன்.''

''ஃபர்ஸ்ட் மரியாதையாப் பேசுங்க! வாயா போயான்றீங்க! ஏதோ வயசுக்கு மரியாதை கொடுத்தா ரொம்பத்தான் பேசிக்கிட்டு... நான் இங்க என்ன மாடு மேய்க்கிறேன்னு நினைக்கறியா? சைட் என்ஜினியரா வொர்க் பண்றேன்... தெரிஞ்சுக்க!''

திடீரென்று அவன் வேகப் பேச்சில் விஸ்வநாதன் மௌனமானார்.

அவன் கண்கள் கனலாய்....

தென்னை மரத்தில் கை வைத்தான்.

தலை உயர்த்திப் பார்க்க, மூங்கில் மர இலைகளினூடே புகுந்து வளைந்து செல்லும் அந்த மரம்.. பெரிய பூகம்பமாய்... தற்போது.

''உங்க பேரு என்ன?''

''சாமிநாதன்.''

''மிஸ்டர் சாமிநாதன், கொஞ்சம் யோசிக்கப் பாருங்க... இனிமே ஒரு தென்னை மரம் என்னால வளர்க்க முடியுமா... அப்படியே வளர்த்தாலும் என்னோட அடுத்த தலைமுறைதான் அதை அனுபவிக்கும்... இல்லியா?''

விஸ்வநாதன் பேச்சில் திடீரென்ற இறக்கம், எங்கே போயிற்று அந்த எரிமலைப் பேச்சு...? குரலில் ஏனிந்த இறக்கம்...?

வன்மப் பேச்சின் நிழல் கூடத் தெரியாமல் எப்படி இந்த மென்மை...? இப்பொழுது சாமிநாதனும் அவரைப் பார்வையில் மென்மையாய்க் கலந்தான். எதிர்நோக்கலில் அவரின் பார்வையும் மென்மையாய்...'' *


''சொல்லுங்க, என்னால அனுபவிக்க முடியுமா? இந்த மரத்தை வெட்டணும்னு சொல்லும் போதே என் உயிர் பிரியற மாதிரி இருக்கு. அம்பது வருஷமா இந்த மரம் என் வாழ்க்கையில சேர்ந்திருக்கு... இதை வெட்டணும்னா முடியுங்களா...?''

''சத்தமா வேற வழியில்லை சார்... எனக்கும் உண்மையா இந்த மரத்தை வெட்டறதுல வேதனைதான்... என்ன செய்ய முடியும் சொல்லுங்க.''

''இதை வெட்டாம பில்டிங் தள்ளி கட்ட முடியாதுங்களா?''

''சான்ஸே இல்ல சார். பேஸ்மெண்ட் வரை வந்துடுச்சி. ரெண்டு கேபின் காலத்தையும் ரெய்ஸ் பண்ணிட்டா, செங்கல்

சத்தியாக்கிரகம்



''ஆரம்பத்தில் 'சாத்விக எதிர்ப்பு' என்னும் சொற்றொடர்தான் இருந்தது. எவ்வளவோ முயன்றும் இதை விட அர்த்த புஷ்டியுள்ள ஒரு புதிய பெயரைக் கண்டுபிடிக்க என்னால் முடியவில்லை. எனவே நல்ல யோசனை கூறுபவருக்கு ஒரு சிறு பரிசு அளிப்பதாய் 'இந்தியன் ஒப்பீனியன்' பத்திரிகையில் அறிவித்தேன். மகன்லால் காந்தி 'சதாக்கிரகம்' (சத் - உண்மை; ஆக்கிரகம் - உறுதி) என்ற சொல்லை சிருஷ்டித்துப் பரிசு பெற்றார். ஆனால் அது இன்னும் தெளிவாக விளங்கட்டும் என்று சத்தியாக்கிரகம் என்று மாற்றினேன்.''

- சத்திய சோதனை நூலில் மகாத்மா காந்தி.

தகவல் : கற்பகவல்லி ராஜா

வேலை ஆரம்பம்...''

விஸ்வநாதன் பெருமூச்சு விட்டு, தலை உயர்த்திப் பார்த்தார்.

''எப்படியெல்லாம் நான் இந்த மரத்தை வளர்த்தேன். சின்ன அரிவாள் வெட்டு கூட பட அனுமதிக்க மாட்டேன் சாமிநாதன்... தினமும் என்னோட வேலைகளைக் கூட தள்ளிப் போடுவேனே தவிர, இந்த மரத்துக்குத் தண்ணி ஊத்தறதை நிறுத்த மாட்டேன்... சத்தியமா சாமிநாதன்! இந்த மரம் என்னோட உயிர். அதை இழக்கணும்கறதை நினைக்கும் போது...''

சாமிநாதன் பேசவில்லை.

பறிகொடுத்தலின் ஆற்றாமை அவர் நெஞ்சுக்குள்.

அவரின் கோபமான பேச்சிற்குக் காரணம் இதோ சொல்லி விட்டார்...

என்ன பேசுவது? எப்படித் தேற்றுவது...

''சார்...''

''சாமிநாதன். நீங்களும் ஃபீல் பண்றீங்கன்னு தெரியுது.. வேற வழி? நான் உயிரா வளர்த்த இந்த மரத்தை வெட்ட என்னால முடியாது. அதனால நீங்களே ஆள் கொண்டு வந்து வெட்டி வித்துடுங்க... இதை என்னோட மகன் ஸ்தானத்துல இருந்து நீங்க செய்யணும்.''

வாள் பட்டறையிலிருந்து ஆட்களை அழைத்து வந்திருந்தான் சாமிநாதன். முகத்தில் சலனங்களே இல்லாமல் தென்னை மரத்தை வெட்டும் வேலையில் அவர்கள் ஈடுபட்டனர். விஸ்வநாதனின் வேதனை அவர்களுக்குத் தெரியப் போவதில்லை. சர்வ சாதாரணமாகத் தோளில் கயிறை வளையமாக மாட்டிக் கொண்டு மேலே ஏறினான் ஒருவன்.


சிறிது நேரத்திற்குள் 'கரகர' என்ற அறுக்கும் சப்தம். விஸ்வநாதன் கலங்குவது மூக்குக் கண்ணாடிக்குள் 'பளபள' என்று தெரிந்தது.

அகலமான குழிக்குள் அந்தத் தென்னம் பிள்ளையை வைத்தான் சாமிநாதன்.

விஸ்வநாதன் முகத்தில் மின்னலைகள்.

''என்ன சாமிநாதன்!''

''வேற வழி தெரியலை சார். இந்தத் தென்னம்பிள்ளை இந்தத் தலைமுறைக்கு இல்லாட்டியும், உங்களோட அடுத்த தலைமுறைக்காவது... இதை உங்க மகன் ஸ்தானத்தில் இருந்து செய்யறேன்.''



கான்ஸ்டபிள் : ''நாம ரொம்ப நாளாத் தேடிக்கிட்டு இருக்கிற கேடி ரங்கன் மாதிரியே ஒரு ஆள் சைக்கிளில் போனான் சார்...''

இன்ஸ்பெக்டர் : ''பிடிச்சுக்கிட்டு வர வேண்டியதுதானேய்யா...''

கான்ஸ்டபிள் : ''சைக்கிளில் பிரேக், லைட், பெல் எல்லாம் சரியா இருந்தால் விட்டுட்டேன் சார்...''

- வி. கி. குமார்.



ஒருவர் : கின்னஸ் புக்ல அந்த அரசியல்வாதி பேர் வந்துடும்!

நண்பர் : எப்படிச் சொல்றீங்க?

முதல் ஆசாமி : தலைவர் கால்ல விழுந்தவர் மறுநாள்தான் எழுந்தாராம்!

- எஸ். முகம்மது யூசுப்.




''எங்க ஆபீஸில் லஞ்சம், மாமூல் வேணும்னு யாரும் கேட்கிறதில்லை!''

''ஆச்சரியமா இருக்கே... உண்மையாகவா?''

''ஆமா; 'விண்ணப்பத்து மேலே 'வெயிட்' வைங்க. இல்லேன்னா உங்க விண்ணப்பம் காற்றிலே பறந்துடும்'னு தான் சொல்லுவோம்...!''

- அ. தெய்வசிகாமணி.

நல்ல வண்ணம் வாழலாம் - 15



இருமுடி சுமப்பது எதற்கு?

சரீரம், அதனால் அனுபவிக்கும் இன்ப துன்பங்கள், இவையாவும் முன் கூட்டியே நிர்ணயிக்கப்பட்டவை என்பது கீழைநாடுகளின் விதிக் கொள்கை.

செயலின் பின்விளைவுகள் மனிதனை மட்டும் அல்ல... சரீரம் எடுத்தால் கடவுளையும் கட்டுப்படுத்தும் என்பது நமது சமய நாதம். எப்படி?

முற்பிறவியில் சூரியன் மகனான சுக்ரீவனுக்காக இந்திரன் மகனான வாலியை இராமன் கொல்கிறான். அதே இராமன், கிருஷ்ணனாக அவதரிக்கையில் கதை திரும்புகிறது. எப்படி? இப்போது இந்திரன் மகனான அர்ஜுனனுக்காகச் சூரியன் மகனான கர்ணனைக் கொல்கிறான்.

அது மட்டுமா? இலக்குவன் இராமனை அண்ணா அண்ணா என்று அழைத்து ஊழியம் செய்தது முற்பிறவி. அடுத்த பிறவியில் கண்ணனாக அவதரித்த இராமன், பலராமனை அண்ணா அண்ணா என்று அழைத்து ஊழியம் செய்து பிறவிக் கடனை அடைக்கிறான். மேலும் பல உதாரணங்கள் தர முடியும்.

விதிக் கொள்கை வலிமையானது. அது முதலாளித்துவ சமுதாய அமைப்பைக் காப்பாற்ற பௌராணிகர்கள் வகுத்த சூழ்ச்சி என்ற வாதம் தவறானது. மனிதனை நல்வழிப்படுத்த பெரியோர்கள் கண்ட பேருண்மை விதிக் கொள்கை.

ஒரு தவறு செய்தவன், சட்டத்தை, போலீஸை, நீதிமன்றத்தை ஏமாற்றினாலும் அடுத்த பிறவியில் தண்டனை உண்டு என்ற நம்பிக்கை உலகை ஒழுங்கான பாதையில் செலுத்தும். மறுபிறவியில் தண்டனை உண்டு என்ற கருத்து மனிதனை நியாயமாக நடக்கத் தூண்டியது. நடந்தார்கள்.

'பிறவி', 'மறுபிறவி' என்பதெல்லாம் வெறும் கட்டுக் கதை என்ற வாதம் மேலோங்கியதும் குற்றம் செய்யப் பலரும் தயங்குவது இல்லை. இந்தப் பிறவி ஒன்று தான். சாமர்த்தியமாக நம் குற்றங்களை மறைத்து விட்டால், போலீஸ் நீதிமன்றங்களைச் சரிக்கட்டி விட்டால் நமது குற்றங்கள் குற்றங்களே அல்ல என்ற அசட்டு மனோபாவம் விளைகிறது!

'பணக்காரர்கள் கோவில் கும்பாபிஷேகம் என்று புண்ணியமான செயல்களைச் செய்து கடவுளைச் சரிக்கட்டுகிறார்கள்; தங்கள் செல்வம் பூர்வ ஜன்ம புண்ணியம் என்று நம்ப வைத்து மக்கள் எழுச்சியைத் தடை செய்கிறார்கள்' என்பது கம்யூனிஸ்டுகள் கருத்து.

கடவுளை யாரும் சரிக்கட்ட முடியாது. நல்லது செய்தால் புண்ணியம் வரும். தீயது செய்தால் பாவம் வரும். புண்ணியத்தைப் பாவத்திலோ - பாவத்தைப் புண்ணியத்திலோ கழிக்க முடியாது. பாவமும் புண்ணியமும் தனித் தனியாகச் சேர்ந்து பின்வரும் பிறவிகளில் இன்ப துன்பங்களைத் தரும்

என்பதே நம் சமயக் கொள்கை.

சபரி மலைக்குப் போகிறவர்கள் இரு முடி சுமப்பதன் பொருள் இதுதான்.

நமது வினை மூட்டைக்கு சஞ்சிதம் என்று பெயர். அது இரண்டு முடிச்சு. ஒன்று பாவ மூட்டை. மற்றொன்று புண்ணிய மூட்டை. இந்த இருமுடி சுமப்பதை வெளிப்படையாகக் காட்டத்தான் இருமுடி சுமக்கின்றனர் ஐயப்ப பக்தர்கள்.

அமைச்சரவை கூடியது. அயோத்தி அரசன் தசரதன் தலைமை தாங்குகிறான். நீண்ட பெருமூச்சு, ஆழ்ந்த சிந்தனைக்குப் பிறகு, அமைச்சர்கள் முகத்தை உற்றுப் பார்த்தபடி தன் தீர்மானத்தை அறிவிக்கின்றான்.

''இராமனை அரசனாக்குவேன். நான் காட்டில் போய்த் தவம் செய்து முக்தி பெறுவேன்.''

இரண்டு கன்றுக்கிடையில் தாய்ப் பசு போல் அயோத்தி நிலை. இராமனுக்குப் பட்டம் என்று மகிழ்வதா? தசரதன் காடு போகிறானே என்று கவல்வதா? இன்ப துன்பம் என்பது நாணயத்தின் இரண்டு பக்கங்கள்.

எப்படியோ இராமனைப் பிரிவது - காடு போய்ச் சேருவது என்பது அறிவு பூர்வமான தசரதன் முடிவு. ஓர் இரவுக்குள்ளாகக் கைகேயி வரத்தால் கதை மாறி விட்டது.

அவள் பரதனுக்கு நாடு, இராமனுக்குக் காடு என்ற போது தடுமாறுகிறான். 'பரதனுக்கு நாடு தருகிறேன். ஆனால் இராமனை என்னால் பிரிய முடியாது. எனவே காடு போகாத வரம் தருக' எனக் கைகேயியிடம் கை ஏந்துகிறான்.

ஏன் இந்த முரண்பாடு? தான் காடு போவதாக முன்னரே தீர்மானித்தவன், இராமனும் காடு போவதென்றால் பிரிய வேண்டிய அவசியம் இல்லையே. சேர்ந்தே போகலாமே! இந்த எண்ணம் அமைதியாக யோசிக்கும் நமக்குத் தோன்றுகிற போது தசரதனுக்கு ஏன் தோன்றவில்லை?

மதியை விதி வென்றது! கண்ணில்லாத தம்பதிகள். அவர்களைக் காவடியில் கட்டிச் சுமக்கும் மகன். பெற்றோர் தண்ணீர் கேட்க, நதியில் கமண்டலத்தால் நீர் முகர்ந்த சப்தம் யானை நீர் குடிப்பது போல் கேட்டது!

எங்கோ இருந்த தசரதன் யானை என்றெண்ணி சப்தம் வந்த திசை நோக்கி அம்பு எய்தான். 'ஆ' என அலறி அந்தணச் சிறுவன் விழுந்தான். பதறினான் மன்னன். ஓடி வந்து வாரி எடுத்தான். உண்மை புரிந்தது.

சாகப் போகும் சிறுவன் கை குவித்து வேண்டினான். ''கண்ணில்லாத பெற்றோருக்குத் தண்ணீர் கொடுங்கள். குடித்தபின் என் மரணத்தைச் சொல்லுங்கள்.''

குவளை நீரை, கண்ணற்ற அவன் தகப்பன் வாயில் வலிந்து ஊட்டினான் தசரதன். 'து' என்று உமிழ்ந்து கையைத் தள்ளி ''நீ என் மகனா? உன் கையில் சந்தன மணம் வீசுகிறதே! எங்கு சென்றாய்? விருந்து உண்டு தாம்பூலம் தரித்து, சந்தனம் பூசி வந்தாயா? நீயும் ஒரு மகனா?'' தந்தை கோபித்தான்.

இறந்த பிள்ளை மேல் பழிவரக் கூடாதே என்று தசரதன் உண்மையைச் சொல்ல, வயிறு பதைத்துச் சாபமிட்டான் அந்தணன். ''என்னைப் போலே பிள்ளைப் பிரிவால் நீயும் மரணம் அடைவாய்'' - விழுந்து இறந்தான். மனைவியும் மாண்டாள்.

தசரதனுக்கு அந்தச் சாபம் அப்போது வரமாகத் தெரிந்தது. காரணம் அப்போது அவனுக்குப் பிள்ளை இல்லை. பிறக்கும் என்ற நம்பிக்கையும் இல்லை. 'பிள்ளைப் பிரிவால் மரணம்' என்ற சாபம் உண்மையாக வேண்டும் என்றால் பிள்ளை பிறக்கும் என்ற மகிழ்ச்சி கூடத் தோன்றியது!

இப்போது கைகேயி இராமனைப்

சனி சிவம்

பிரியும் வரம் கேட்ட போது இந்த அதிர்ச்சியான நிகழ்ச்சி நினைவுக்கு வந்தது. மரணம் தன் தெருவுக்கு வந்து வீட்டு எண்ணை விசாரித்துக் கொண்டிருப்பது புரிந்து விட்டது. இராமனுடன் நாமும் காட்டுக்குப் போகலாம் என்ற கோணமே அவனுக்குத் தோன்றவில்லை! மதியை விதி வென்றது.

விதியை வற்புறுத்துவதன் காரணமே அதை வெல்ல வேண்டும் என்று புரிய வைப்பதற்காகத்தான். ஒருவன் எட்டாம் வகுப்பு படிப்பதே அதைத் தாண்டிப் போவதற்காகத்தான். விதிக்கப்பட்ட விதியை முயற்சியால் மாற்ற முடியுமா? மாற்ற முடியுமோ இல்லையோ முயற்சி செய்வது நமது கடமை.

உயிர் முயற்சி. உடம்பு விதி. உடம்புக்குள் உயிர் அடங்கி இருப்பது உண்மை. ஆனால் உயிர் உடம்பை இயக்கும் வலிமை உடையது என்பது பேருண்மை. உடம்பு வழிப்பட்ட சிந்தனைகளில் சிக்கி விதிக்குப் பலியாகி விடாமல் உயிர் வழிப்பட்ட சிந்தனைகளை மேற்கொண்டு விதியிலிருந்து விலக முயற்சி செய்வதே ஞானம்.

இப்போது யோசியுங்கள். விதிக் கொள்கை நமது சாபமா? வரமா?

(இன்னும் சொல்வேன்)

நான் போட்ட சவால்



திரைப்படத் துறையில் அடியெடுத்து வைத்திருக்கும் கதை - வசன - இயக்குனர் வெற்றிவேந்தன் அவர்களுக்கு,

உங்கள் தமிழ்ப்பற்று, கவிதைப் பேரார்வம், சமதர்ம நோக்கு, மூடச் சம்பிரதாயங்களில் கொண்டுள்ள நம்பிக்கையின்மை... இவற்றுக் கெல்லாம் உருவகம் கொடுத்து ஒரு கதாநாயகனைப் படைத்திருக்கிறீர்கள்.

அது மட்டுமல்ல. ஒரு கதாநாயகன் என்பவன் மசாலாப் பொழுதுபோக்கின் பிரதிநிதியாக, அழகும் ஆண்மையும் புஜபல பராக்கிரமும் நிறைந்தவனாக, நடனமாடி டூயட் பாடுபவனாக மட்டுமே இருந்தாக வேண்டும் என்கிற இலக்கணத்தை உடைத்தெறிந்திருக்கிறீர்கள்.

அந்த வகையில் மகா துணிச்சல்காரர் நீங்கள்.

நடைமுறை வாழ்க்கையில் அவன் பலவீனப் பிரிவினரின் ஓர் அங்கமாக இருந்தாலும் கொண்ட நம்பிக்கைகளில் உறுதியோடு விளங்குவதால் சம்பவங்களை விடச் சம்பாஷணைகளையே நீங்கள் அதிகம் சார்ந்திருக்க வேண்டியதாகி விட்டது. உங்கள் படத்தின் பலமும் அதுதான். பலவீனமும் அதுதான்.

அன்றாடச் சம்பவங்களிலிருந்து எந்தவகையிலும் மாறுபடாத நிகழ்ச்சிகள். நல்ல தமிழ். நவீனமான கவிதைகள். படம் முழுதும். என்றாலும் -

விவாத மேடைகளையும் கவிதைப் போட்டிகளையும் சற்றுக் குறைத்திருந்தால் பட்டிமன்றத்தில் அமர்ந்திருக்கும் உணர்வு தோன்றுவதைத் தவிர்த்திருக்க முடியும்.

பணச்செருக்கும் ஆடம்பரப் போக்கும் நிறைந்த கதாநாயகியொரு அஞ்சு.

பழிவாங்கும் உணர்வோடு தொடங்கி, பின்னர் பாசத்துக்கும் பரிவுக்கும் இடமளித்து முடிவில் காதல் வயப்படுவது மிக மிக இயல்பு. அந்த உறவை உதறித் தள்ளி விட்டுத் தன் லட்சியத்தை நோக்கிக் கதாநாயகன் புறப்பட்டுப் போய் விடுவது எதிர்பாராத முடிவு.

பொழுதுபோக்கு அம்சங்களிலேயே முழுக்க முழுக்கப் பழக்கப்படுத்தப்பட்டுப் போய் விட்ட ரசிகர்களுக்கு உங்கள் படத்தை ஜீரணித்துக் கொள்வது சற்று சிரமமான காரியமாகவே இருக்கும். என்றாலும், புதிய அணுகுமுறை என்கிற அந்தவொரு காரணத்துக்காகவே உங்கள் முயற்சி ஊக்குவிக்கப்பட வேண்டிய ஒன்று.

- சி. ஆர். கே.

பாரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் வி. வைத்தியநாதன். ஆசிரியர்: கி. ராஜேந்திரன். இணை ஆசிரியர்: சீதா ரவி. முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. தொலைபேசி: ஆசிரியர் குழு அலுவலகம்: 2344145; சர்குலேஷன் மானேஜர்: 2344190; விளம்பரம் — சந்தா: 2344157; டைரக்டர்: 2341543.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 130/-; வெளிநாடு: கப்பல் தபால்: ரூ. 300/-; விமானத் தபால் ரூ. 700/-.
ஆறு மாதச் சந்தா — உள்நாடு: ரூ. 65/-; வெளிநாடு: கப்பல் தபால்: ரூ. 150/-; விமானத் தபால்: ரூ. 350/-.



ஆம். சரியாக சாப்பிடாமல் இருப்பது குழந்தையின் வளர்ச்சியை பாதிக்கலாம்.

சரியாக சாப்பிடாமலிருக்கும் குழந்தை தனது உடலுக்குத் தேவையான ஊட்டச்சத்துக்கள் அனைத்தையும் முழுமையாகப் பெறுவதில்லை. இப்பற்றாக்குறை அவனது வளர்ச்சியை பாதிக்கக் கூடும். அவனுக்கு அளிப்பீர் காம்ப்ளான். அவன் இழந்த ஊட்டத்தைப் பூர்த்தி செய்ய காம்ப்ளான் உதவுகிறது. குழந்தையின் வளர்ச்சிக்குத் தலைசிறந்த புரதமாகிய பால் புரதம் 20% மற்றும் உடலுக்குத் தேவையான 22 அத்தியாவசியமான ஊட்டச்சத்துக்கள் அடங்கியதாகும் காம்ப்ளான்.


காம்ப்ளான் நாவிற்கினிய
5 சுவைகளிலே கிடைக்கிறது.



காம்ப்ளான்®
திட்டமிட்ட பரிபூரண உணவு.

GX/27/203 TAM

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka



ஜண்டு பாம்

ஜலதோஷம், தலைவலி மற்றும் நோவுகளை நொடியில் நீக்குகிறது.

வேலைகளுக்கு இடைஞ்சலும் ஏற்படாது. தலைவலியில் இருந்து துரிதமான விடுதலையும் கிடைக்கும். எனவேதான் ஜண்டு பாம். தலைவலி மட்டும் இன்றி ஜலதோஷம், முதுகுவலி, இடுப்பு வலி, உடல்வலி மற்றும் சுளுக்கு வலிகளிலிருந்தும் குணம் அளிக்கிறது.

மற்ற பாம்களோடு ஒப்பிடும்போது ஜண்டுபாம் கூடுதல் வீரியம் கொண்டது. நிறமற்றது. எனவே கறை படியுமோ என்ற பயமில்லை. பிசுபிசுப்பற்றது. அதனால் வீட்டிலோ, வெளியிலோ உபயோகிக்கலாம். நறுமணமும் கொண்டது. கொஞ்சமாக உபயோகித்தாலே போதும். அதனால் சிக்கனமானது. மிருதுவான சருமத்திற்கும் இதமானது. ஆகவேதான் தாய்மார்கள் தங்கள் குடும்பத்தினருக்கு ஜண்டுபாமையே தடவ விரும்புகிறார்கள்.

சீசாவின் மேல் இருக்கும் சிவப்பு சீலைப் பார்த்து வாங்குங்கள்.

5, 10 மற்றும் 30 **கிராம்களில் கிடைக்கிறது.**



ஜண்டு பாம் வலிகளை நீக்கும் பாம்

12749 TAM